புதிய சமுதாயம்

KDN 10657

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

16



PUTHIYA SAMUDHAYAM

50காசு

தீபாவளிச் சிறப்பிதழ்



குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே.

திருநாவுக்கரசர்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு —குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 ஐப்பசி 25.
கம்பம் 1 ∴ (10-11-1977) ∴ குடும்பம் 16

தீபாவளி வணக்கம்

தீபாவளிக் கொண்டாட்டம் மலேசிய மக்கள் ஆண்டுதோறும் கொண்டாடும் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. நோன்புப் பெருநாள், சீனப் புத்தாண்டு, கிறிஸ்மஸ் போன்ற பெருநாட்களின் போது மலேசிய மக்களிடையே காணப்படுகின்ற ஒருமித்த உற்சாகமும், சர்வ சமூக இணக்கமும் தீபாவளிப் பண்டிகையின்போதும் மிளிர்ந்து வருவது பெரிதும் பூரிப்பளிப்பதாகும்.

தீபாவளிப் பண்டிகை இந்துப் பெருமக்களின் விழாவாக இருப்பினும் மற்ற சமூக மக்களும் மற்ற சமயங்களைச் சார்ந்தவர்களும் தீபாவளிக் குதூகலத்தில் இந்துக்களோடு ஒருங்கிணைந்து திளைப்பது மலேசியாவிற்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பாகும்.

இவ்வகையில் நமது சமயப்பண்டிகைகள் மக்களின் சமய உணர்வை வளர்ப்பதோடு, மக்களை இணைக்கும் பாலமாகவும் அமைந்து, ருக்கு நெகாரா கோட்பாட்டின்படி சமூகங்களுக்கிடையே பரஸ்பரம் மரியாதையும், புரிந்துணர்வும், நேசமும் வலுவடைவதற்கும் துணைபுரிந்து வருகின்றன.

இதே உணர்வோடு இந்த ஆண்டின் தீபாவளிக் கொண்டாட்டமும் தேசிய ஒருமைப்பாட்டையும் நாட்டு மக்களின் ஐக்கியத்தையும் மேலும் மேம்படுத்துமென்று திண்ணமாக எதிர்பார்க்கலாம்.

தீபாவளியைக் கொண்டாடுகிற இந்துப் பெருமக்கள் தங்கள் இல்லங்களில் மற்ற சமூகங்களைச் சேர்ந்த சகோதர மக்களுக்கு உபசரிப்புக்களை நல்குவதோடு, ஆங்காங்கு முடிந்த வரை எல்லா ஊர்களிலும் பொது தீபாவளி விருந்துகளையும் நடத்தி, அந்த விருந்துகளில் அந்தந்த ஊர்களிலுள்ள பிற சமூகப் பிரமுகர்களையும், தொண்டர்களையும் அழைத்துப் பெருமைப்படுத்துவது அவசியமாகும்.

இத்தகைய பொது விருந்துகள் ஏற்கனவே சிரம்பான் போன்ற இடங்களில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. அந்த முன்மாதிரியைப் பின்பற்றி நாடெங்கும் பரவலாக இத்தகையப் பொது விருந்துகள் இந்தியச் சமூகத்தின் சார்பில் தீபாவளியை ஒட்டி ஏற்பாடு செய்யப்படுவது சமூக உறவை வலுப்படுத்துவதற்கு உதவியாக அமையும்.

நோன்பு பெருநாள், சீனப் புத்தாண்டு ஆகிய பண்டிகைகளுக்கு இரண்டு நாள் பொது விடுமுறை வழங்கப்படுகிறது. அதுபோலத் தீபாவளிப் பண்டிகைக்கும் இரண்டு நாள் விடுமுறை வழங்கப்படவேண்டுமென்பது இந்தியச் சமூகத்தின் நெடுங்காலக் கோரிக்கையாகும்.

இந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதை அரசாங்கத் தலைவர்கள் நன்கு உணர்வர் என்று நம்புகிறோம். தீபாவளியை அவசர அவசரமாக ஒருநாளில் கொண்டாடி முடித்துவிட்டு மறுநாள் வேலைக்குப் போவது நடைமுறையில் மிகமிகச் சிரமமாய் இருப்பதை உணர்ந்தே இரண்டுநாள் பொது விடுமுறையை இந்தியச் சமூகம் வலியுறுத்தி வருகிறது.

தேசிய முன்னணி அரசாங்கம் இந்தக் கோரிக்கை மீது ஒரு நல்ல முடிவெடுத்து, வருகின்ற ஆண்டுகளில் இரட்டை மகிழ்ச்சியோடு தீபாவளியை மலேசிய மக்கள் கொண்டாட வழிவகுக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

"புதிய சமுதாயம்" இந்துப் பெருமக்கள் அனைவருக்கும், வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் தனது மனங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறது. வணக்கம்.

'தீபாவளி' என்று காதில் விழுந்த நாளிலிருந்தே குழந்தைகளின் பேச்சிலும் செயலிலும் தீபாவளி களைகட்டிவிடும். ஏனெனில் அவர்களுக்குத்தானே தீபாவளி.

தீபாவளிக்கு வாங்கிய புதுச் சட்டைகளை உடனடியாக அணிந்து ஒத்திகை பார்க்கக் குழந்தைகள் பிடிக்கும் அடம், பெற்றோரின் உறுதியையே நடுங்க வைக்கும் பட்டாசு.


தத்தம் தீபாவளிப் புத்தாடைகளை உடுத்தி ஒத்திகை பார்க்கும் குழந்தைகளின் அணிவகுப்பு ஒன்றை இந்த இதழ் அட்டைப் படம் ஏந்தி வருகிறது.

படம்: மாயன்

எங்கள் அலுவலகம்:

131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி]
கோலாலம்பூர் 01-08. அஞ்சல் பெட்டி எண்: 2066, தொலைபேசி: 80839.





ஒளிதரும் தீபாவளி

–சுவாமி ' பிரணவானந்தா

தலைவர், தெய்விக வாழ்க்கைச் சங்கம்,

மலேசியா.

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் தீபாவலி சிறந்த தொன்றாகும். உலகில் அதர்மமும் தீயசக்திகளும் தொலைந்து தர்மமும், நற்குணங்களும், நற்செயல்களும், நல்லறிவும் மடாநகி எங்கும் சாந்தியும், செழிப்பும், மங்களமும் திகழ்வதை இது உணர்த்துகிறது. தீய சக்திகளே உருவெடுத்த நரகாசுரனைக் கொன்று உலகிற்கு விமோசனம் அளித்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் பெருமையையும், சத்தியபாமையின் வீரத்தையும் நினைவூட்டுவதுதான் தீபாவலித் திருநாளாகும்.

பூர்வ காலத்தில் பிரக்ஜோதிபுரம் என்னும் நகரத்தில் பௌமன் என்னும் நரகாசுரன் பிரமனைக் குறித்து அருந்தவம் செய்து பெறுதற்கரிய பல தாமசவரங்களைப் பெற்றான். அதன் விளைவாக மக்களையும் தேவர்களையும் துன்புறுத்தினான்; நல்லவர்களை நலியச்செய்தான்; பெண்கள், சாதுக்கள் போன்றோருக்கு அக்கிரமங்கள் செய்தான். அக்கினிக் கோட்டை, வாயுக்கோட்டை என்ற பலகோட்டைகளைக்கட்டிக்கொண்டு அளவற்ற துன்பம் விளைத்துக்கொடியவனாகத் துலங்கினான். தேவர்க்கரசனாகிய இந்திரனோடு போர் புரிந்து அவனையும் தோற்கடித்தான். இந்திரனுடைய அன்னையின் காதணியாகிய மகர குண்டலங்களையும் கவர்ந்துகொண்டான். இந்திராதி தேவர்களும் முனிவர்களும் துவாரகாபுரி சென்று ஸ்ரீகிருஷ்ண பகவானிடம் முறையிட்டனர். துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யவே அவதரித்த பகவான், அவர்களின் குறைகளைத் தீர்க்கத் திருவுளங்கொண்டு அருட்சக்தியாகிய சத்தியபாமா சமேதராகப் புறப்பட்டார். அரக்கனுடைய சேனாசமுத்திரத்தை அதஞ்செய்து விட்டார் பகவான். வெங்கோபங் கொண்ட நரகாசுரன் பிரளயகால உருத்திரன்போல கடும்போர் புரிந்தான்.

அவன் ஏவிய சில அஸ்திரங்களினால் பகவான் சிறிது சோர்வடைய, சத்தியபாமை எண்ணிறந்த பாணங்களை நரகாசுரன்மேல்

பிரயோகித்தான். இறுதியில் பகவான் தனது சக்கராயுதத்தை அவ்வரக்கன் மீது விட, அது அவன் உடலைப் பிளந்து விட்டு மீண்டது.

இறக்கும் தருவாயிற் கிடந்த நரகாசுரனுக்குப் பகவானுடைய தரிசனத்தினால் நல்லறிவு வந்தது. ஞானம் உதித்தது. தான் செய்த கொடுமைகளையெல்லாம் நினைந்து வருந்தினான். பரந்தாமனை நோக்கிக் கூறலுற்றான்:

"பகவானே, யான் இதுவரை உலகத்குப் புரிந்த கொடுமைகள் அனந்தம்; எனது குற்றங்களைப் பொறுத்து அருள் புரிதல் வேண்டும்: கொடியவனாகிய நான் இறந்து போகின்ற இந்நாளை என்றும், எங்கும், யாவரும் மங்களகரமாகக் கொண்டாடி இன்புறுதல் வேண்டும்; இந்த வரந்தருளவேண்டும். எனது கொடுமை நீங்கி மக்கள் இன்பமடையும் இந்நாளில் என்னை நினைவு கூர்ந்து எண்ணெய் தேய்த்து நீராடி, கோடியுடுத்து, ஆலய தரிசனஞ் செய்து, தான தருமஞ் செய்வோர்க்கு அசுவமேதயாகஞ் செய்த பலன் கிடைக்க அருள் புரிதல் வேண்டும்."

பகவான் அவனது வேண்டுதலுக்கிசைய வரங்கொடுத்து அவனைப் பரமபதம் சேர்த்தருளினார்.

நரகாசுரன் மக்களைத் துன்புறுத்திய காலத்தில், அவர்கள் வெளிச் செல்ல இயலவில்லை. ஆலயங்களில் பூஜை, விழாக்கள் ஆகியன நடைபெறவில்லை. வீடுவாயில், கோயில், குளங்கள் அனைத்தும் அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தன. அவன் மடிந்தபோது எங்கும் ஒளிமயமாக விளங்கியது. தேவர்கள் தாம் இழந்த பதத்தைமீண்டும் பெற்று மகிழ்ந்தனர். சிறைப்பட்டிருந்த மக்கள் விடுதலை பெற்றனர். அனைவரும் விளக்குகளை வரிசையாக ஏற்றி வழிபாடு செய்தனர்; உற்றார் உறவினர் இல்லங்கள் சென்று கொண்டாடிக் களிப்படைந்தனர்.

தீபாவலித் திருநாள் சம்பந்தமாக வேறு கதைகள் கூறப்படுகின்றனவெனினும், எப்படியும் அசுர ஆட்சியம் அழிந்த நாள் என்பது புலனாகிறது.

புராணங்களில் அசுரர்கள், தேவர்கள் என இரு தரப்பினரின் தொடர்புகள் கூறப்பட்டு, இவர்களுக்கிடையே போர் நடைபெறுவதையும் அசுர ஏகாதிபத்தியம் அழிந்தொழிவதும் தேவர்களின் இடர்தீர்ந்து விடுதலை வாழ்வு பெறுவதும் கூறப்படுகின்றன. புறவுலகில் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் இடையில் போர் நடப்பது போன்று மனிதனுடைய உள்ளத்திலும் தீய (விலங்கு) சக்திகளுக்கும், தேவ (தூய) சக்திகளுக்குமிடையில் சதா போர் நிகழ்ந்து கொண்டிருப்பதை அறிவோம். இயம, நியம, தியான சாதனைகளின் மூலம் நம்மைப் பரிபக்குவப்படுத்தும்போது, திருவருள் மூலம் விலங்குத் தன்மைகள் நீங்கித் தெய்விகத் தன்மை பொருந்தியவர்களாகிறோம். அஞ்ஞானம் நீங்கப் பெற்று ஞானஒளி மலர்கிறது. தீப ஆவலி தீபாவளி-விளக்குகளின் வரிசை அல்லது தீப வரிசை எனப் பொருள்படும். தீபாவளி எனவும் கூறுவர். ஞானப் பிரகாசத்தைப் பெறுவதுதான் தத்துவார்த்தமாகும். ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்ச திரியோதசி இரவில் பொழுது விடியுங் காலத்தில் சதுர்த்தசியில் நிகழ்வது தீபாவலி. அப்போது நல்லெண்ணெயாகிய எண்ணெய்யைப் பூசி, அழுக்காறு, அவா, வெகுளி முதலிய ஊத்தைகளைச் சித்தமாகிய அரைப்பினால் தேய்த்துப் போக்குதல் வேண்டும். இதனை "அப்பியங்க ஸ்நானம்" என்பர். பின் புனிதமாகிய வெண்ணிற புத்தாடைகளை உடுத்தி, இந்திரியங்களாகிய அரக்கர்களைப் பட்டாசு முதலான திடவுறுதிகளினால் சுட்டுப் பொசுக்கி இறைவழிபாடு செய்வதன்மூலம் ஒளிப் பிரகாசத்தையும் ஆனந்தநிலையையும் அடையலாம்.

பண்டு தொட்டுப் பழந்தமிழ் மக்களால் புனிதமாகக் கொண்டாடப்பட்டு வந்தது இந்தத் தீபாவலித் திருநாள். அந்தக் கொள்கை நாளாவட்டத்தில் தேய்ந்து தேய்ந்து இப்போது சில வட்டாரங்களில் இப்பண்டிகை குடிவெறிக்குரிய நாளாகவும் ஆடம்பர விழாவாகவும் மாறி வந்திருப்பது வருந்தத்தக்கது. அறிவினை மயக்கும் குடியையும் ஊன் உண்ணுதலையும் ஒழித்தல் உபாசனைக்கு உகந்ததாகும்.

ஆகவே, தீபாவலித் திருநாளினை முறைப்படிக் கொண்டாடி வாழ்வாங்கு வாழ்வோமாக!

ஞானச்சுடர்



வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்— செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று.

—பொய்கையாழ்வார்

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகுஞ் சிந்தை யிடுதிரியாய் — நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

—பூதத்தாழ்வார்



தொடர்புத்துறை அமைச்சரும் ம. இ. கா. தேசியத் தலைவருமான டான்ஸ்ரீ வெ. மாணிக்கவாசகம் அவர்கள் "புதிய சமுதாயத்தின்" வாயிலாக மலேசிய இந்தியப் பெருமக்களுக்கு வழங்கிய தீபாவளி வாழ்த்துச் செய்தி.

சேமித்து வாழ்வோம்

எனது அன்பு கனிந்த தீபாவளி வாழ்த்துக்களை அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலேசியாவின் தேசியத் திருநாட்களில் ஒன்றான தீபாவளியானது ஆண்டுக்கொரு முறை நம் மக்களுக்கு மகத்தானதொரு வாழ்க்கைத் தத்துவத்தை ஞாபகப்படுத்தி வருகின்றது. உலக மாந்தர்களிடையே அவ்வப்போது தோன்றுகின்ற துஷ்டர்கள், இறைவனால் ஒழிக்கப்படுவார்கள்; உலகில் நாம் அனுபவிக்கின்ற துயரங்கள் அவ்வப்போது இறைவனால் களையப்படும் எனும் மகத்தான உண்மையை வெளிப்படுத்தி மக்களுக்குத் தெம்பூட்டும் தத்துவத்தைத் தீபாவளி கொண்டுள்ளது.

அதே வேளையில், துஷ்டத்தனமும், துரோகமும் பிறர்க்குத் துன்பம் விளைவிக்கும் குணமும் உடையோர் இறைவனின் தண்டனைக்கு ஆளாகி அழிவர் எனும் எச்சரிக்கையையும் இத்தீபாவளியின் தத்துவம் வெளிப்படுத்துகின்றது. தீபாவளியைக் கொண்டாடுகின்றபோதே மனிதன் நல்லவனாக வாழவேண்டும் என்னும் திடசித்தத்தையும் மக்கள் பெறுகின்றனர்.

நமது மலேசிய நாடு ருக்குநெகாரா அடிப்படையில் இன ஒருமைப்பாட்டினை வலுப்படுத்தி அமைதியையும், சுபிட்சத்தையும் கண்டு வரும் நாடாகும். தீபாவளி போன்ற தேசியத் திருநாட்களால் நமது மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வும், புரிந்துணர்வும் ஆண்டுதோறும் வலிமை பெற்று வருகிறதென்பது வெளிப்படை.

இத்தகைய மகத்தான திருநாளான தீபாவளியைக் கொண்டாடுகின்ற மக்கள் ஆண்டுதோறும், சேமிப்பின் வழி தத்தம் பொருளாதார மேன்மையையும், சிக்கன வாழ்வின் வழி தத்தம் எதிர்கால வாழ்க்கையையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் வைராக்கியங்களையும் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும் என வலியுறுத்த விரும்புகின்றேன்.

மீண்டும் எனது தீபாவளி வாழ்த்தினை உங்கள் ஒவ்வொருவர்க்கும் இதன் வழி புலப்படுத்துகின்றேன்

உயர்வுக்கு மூன்று அம்சங்கள்

தேசிய ஒற்றுமை வாரியத் தலைவரும், கூட்டுறவுத் தந்தையுமான துன் வீ. தி. சம்பந்தன் அவர்கள் "புதிய சமுதாயத்தின்" வாயிலாக மலேசிய இந்தியப் பெருமக்களுக்கு வழங்கிய தீபாவளி வாழ்த்துச் செய்தி.



நம் நாடு சுதந்திரமடைந்து 20 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 20 ஆண்டுகளில் நாட்டு முன்னேற்றத்துடன் நமது சமூகமும் பல துறைகளில் முன்னேறி இருக்கிறது. ஆனாலும் சுதந்திரம் பிறந்த வேளையிலே நமது சமுதாயமும் மறுபிறப்பு எடுக்கும் முறையிலே கடுமையான பிரசவ வேதனை அடைந்திருந்ததைப் பலர் மறந்திருக்கலாம். சுதந்திரச் சூரியன் உதிக்கும் வேளையிலே ஆயிரக்கணக்கிலே பலர் இங்கு வீடற்று, வேலையற்று, விதியற்று, கதியற்ற நிலையிலே அழுத கண்ணீருடன் கப்பல் கப்பலாகப் பாரதத்துக்குத் திரும்பிப் போகிற சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது துண்டாடல் என்னும் ஓர் அரக்கன் நமது மக்களைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தான். அந்த அரக்கனைப் போராடி ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நமது கூட்டுறவுச் சங்கம் பிறந்தது. தன்னம்பிக்கை, ஒற்றுமை, செயல்தன்மை ஆகியவை ஒன்றுகூடினால் தன்னம்பிகையற்ற, வழிதெரியாத சமுதாயத்தினரும் தன்மானமுடன் வாழமுடியும் என்று சிறுதுளியான பத்து வெள்ளியைக் கேடயமாக வைத்து தங்களுக்கு வந்த ஆபத்திலிருந்து வெற்றி கண்டனர்.

பத்துப் பத்து வெள்ளியாக பலலட்சம் வெள்ளி சேர்த்துப் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் தோட்டங்களை வாங்கியது மட்டுமல்லாமல், இன்னும் பல இடங்களில் துண்டாடல்காரர்களுடன் போரிட்டுத் துண்டாடல் நடக்காத வண்ணம் வெற்றி கண்டனர். அன்றே இந்த இயக்கத்தை நாம் ஆரம்பிக்காமல் இருந்திருந்தால் - அன்றே நம் மக்கள் ஒன்றுதிரண்டு இந்த இயக்கத்தில் பங்கு பெறாமல் இருந்திருந்தால் இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை வந்திருக்கும்.

அதன்பிறகு 1970-ஆம் ஆண்டில்தான் அரசாங்கம் துண்டாடலுக்குத் தடை விதிக்க முன் வந்தது. எனவே இந்தப் போராட்டமும், அதனைச் சமாளிப்பதற்கு அடிப்படையாக விளங்கிய செயல்தன்மை, ஒற்றுமை, தன்னம்பிக்கை ஆகிய மூன்று அம்சங்களும் நமது நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் எப்பொழுதும் இன்றியமையாதவை என்று வலியுறுத்தலாம்.

அன்று பத்து வெள்ளியில் பிறந்த கூட்டுறவுச் சங்கம் இன்று 10 கோடி வெள்ளி சொத்துக்கள் உடையதாக இருக்கிறது. பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு உபகாரச் சம்பள நிதி வழங்கி வருகிறோம். நிலமற்றவர்களுக்கு பல மாநிலங்களில் நிலமும் வீடும் பெற உதவியிருக்கிறோம். விரைவில் வீடுகட்டும் திட்டத்திலும் ஈடுபட்டுள்ளோம்.

இந்தத் தீபாவளியன்று எனது வாழ்த்துக்களின் அடிப்படையாக மறுபடியும் வலியுறுத்துவது இது தான்: நல்லெண்ணம், ஒற்றுமை, செயல்தன்மை, தன்னம்பிக்கை இவற்றை என்றென்றும் நாம் காப்பாற்றவேண்டியது அவசியம்.

இந்த நாட்டிலே பல் இன மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து வாழவேண்டியது நமது கடமையாகும். மூன்றாவது சமூகமாகிய நமக்கு நல்லெண்ணம் வளர்ப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் உண்டு. இதை நாம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டால் எதிர்காலத்தில் அது நமக்கு நன்மையாகவே இருக்கும். அனைவருக்கும் எனது மனங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்.

தடைகள்

இரா. முத்தரசன்

மருத்துவமனை வார்டின் வெளியே காத்திருப்பவர்களுக்கெனப் போடப்பட்டிருந்த நாற்காலியில் சோர்ந்துபோய் அமர்ந்தார் ராகவன். அவர் தலை "விண் விண்" என்று தெறித்தது. கடிகாரத்தை நோக்கினார். கமலம் ஸ்ட்ரெச்சரில் வார்டுக்குள்ளே கொண்டு செல்லப்பட்டு, சரியாக ஐந்து நிமிடம் முடிந்திருந்தது.

அந்த ஐந்து நிமிடங்களில், அவர் மனம் பலவிதமான எண்ணச் சுழல்களில் சிக்கி, நிலைகுலைந்து போயிருந்தது. கமலத்தைச் சோதிக்க வார்டுக்குள் நுழைந்திருக்கும் டாக்டர்களின் முடிவுக்காக — சாதகமான முடிவுக்காக-வார்டின் கதவு திறக்கப்படும் நேரத்தை எதிர்நோக்கிக் காத்துக் கிடந்தார் அவர்.

கமலத்திற்கு இன்று நேர்ந்த நிலைமை, அவரை ஓர் அச்ச உணர்விற்கு உள்ளாக்கியிருந்தது. கடந்த சில வருடங்களாக அவளது நெஞ்சின் ஆழத்தில் அழிக்கமுடியாத வடுவாகப் பதிந்துவிட்ட பிள்ளையில்லாத குறை, அவளை ஒரு நடைப்பிணமாக்கி விட்டிருந்தாலும் இன்றுபோல் என்றுமே தளர்ச்சியும் சோர்வும் அவள் அடைந்ததில்லை.

இன்று பத்திரிகையின் சுவாரசியத்தில் மூழ்கியிருந்த அவரை "டாக்டர்! டாக்டர்!" என்ற கமலத்தைப் பிரத்தியேகமாகக் கவனிக்கும் தாதியின் குரல் திடுக்கிட வைத்தது.

விரைந்து சில வினாடிகளில் மாடியை அடைந்த அவர் கமலத்தைக் கண்டதும் அதிர்ச்சியால் கல்லாய்ச் சமைந்துவிட்டார்.

"அம்மா திடீர்னு மயக்கமடைஞ்சிட்டாங்க டாக்டர்!" தாதி விஷயத்தைக் கூறிமுடித்தாள். அங்கே படுக்கையில் நீரில்லாத செடிபோல காய்ந்து, துவண்டு கிடந்த கமலம் சுயநினைவின்றி மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். ராகவனுக்கு இதயத்தில் படபடப்பு. அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிய அவர் முகத்தில் வியர்வை முத்துக்கள் அரும்பியிருந்தன.

மனைவிக்குச் சிறு தலைவலியென்றாலும் டாக்டரைக் கூப்பிட்டே பழக்கப்பட்ட அவர் இன்றும் அப்படித்தான் தொலைபேசி மூலம் டாக்டரை நாடினார். டாக்டர் வந்தார், மேலோட்டமான பரிசோதனைக்குப் பின் கமலத்தை மருத்துவமனைக்குக் கொண்டுவரச் சொல்லிவிட்டார்

இன்னும் முடிவு தெரியவில்லை! நோயாளி மனைவியையும் தன் தொழிலையும் ஒருகணம் நினைத்தபோது ராகவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது ராகவனும் ஒரு டாக்டர்தான். ஆனால் மனைவிக்கே வைத்தியம் பார்க்க இயலாத-பார்க்க உள்ளத்தில் சக்தியில்லாத டாக்டர். மேலும் கமலத்திற்கு உடம்பில் எந்தவொரு நோயும் இல்லை.

"இவளால் ஒரு குழந்தைக்குத் தாயாக முடியாது" என்ற அண்டை அயலாரின் ஏளனக் கூற்றுத்தான் அவளது நெஞ்சில் புண்ணைத் தோற்றம் கண்டிருந்தது.

அதுவும் இன்று நேற்றாக அல்ல! ஆரம்பத்தில் சிறு கீறலாகப் பரிணமித்து, பின் இந்தப் பதினைந்து ஆண்டு கால இடைவெளியில் ஆழமான காயமாக அவள் மனத்தில் உருவெடுத்திருந்தது அந்தக் குறை.

ராகவனுக்கும் அதே நிலைதான்! சாதாரணமாக இயல்பாகவே எல்லாருக்கும் அமையும் குழந்தைப் பாக்கியம் மட்டும் ராகவனுக்கு அமையாமல் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த ஆசைகளைக் கொஞ்சிச் சிரிக்கும் குழந்தைகளின் ஓவியங்கள் மூலமாகவும் உயிரற்ற பொம்மைகளின் மூலமாகவும் தணித்துக் கொண்டவர் அவர்.

நண்பர்கள். தங்கள் குழந்தைகளுக்குப் பிறந்தநாள் என்று மலர்ந்த முகத்தோடு அழைப்பிதழை நீட்டும்போது, தனக்கென்று ஒரு பிள்ளை பிறந்து, அமோகமாகப் பிறந்தநாள் கொண்டாடி மகிழும் நல்ல நாள் வராதா என்று ஏங்கித் தவிப்பவர் அவர்.

கல்யாணம் போன்ற முக்கிய விழாக்களைக்கூட அவர் தவறவிட்டாலும் பிறந்தநாள் போன்ற சாதாரண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத் தவறுவதே இல்லை; ஆனால் அவை குழந்தைகளின் பிறந்த நாள் நிகழ்ச்சிகளாக இருக்க வேண்டும். பணத்தைப் பாராமல் பரிசை வாங்கித் தந்து விடுவார். குழந்தை என்றால் அப்படி ஒரு சொல்லொணா ஏக்கம்!

குழந்தை இல்லாதவனுக்குத்தானே குழந்தையின் அருமையும் பெருமையும் புரியும்! கமலத்துக்கு இந்தக் குறையே உடல் பலவீனத்தையும், உள்ள பலவீனத்தையும் தந்து, எந்நேரமும் படுக்கையில் கிடக்கும் நோயாளியாகவும் ஆக்கி விட்டிருந்தது.

சில சமயங்களில் தொலைக்காட்சியில் விளம்பரப் படங்களில் தவழ்ந்துவரும் மழலைச் செல்வங்களைக் காணும்போதெல்லாம், சோகத்தை வெளிப்படுத்தும் கலங்கிய கண்களோடு ராகவனைப் பார்ப்பாள் கமலம். அதைத் தாங்கமாட்டாமல் முகத்தைத் திருப்பிக்கொள்வார் அவர். பின் கொஞ்ச நேரம் சென்று அவளை ஆதுரத்தோடு அணைத்து ஆதரவாகத் தோள்களில் தட்டுவார்.

சினிமாவுக்கு எப்போதாவது அபூர்வமாகப் போகும்போதும் இதே நிலைதான். திரையில் குழந்தையின் முகம் தெரியும்போதும், அல்லது மற்ற தம்பதிகளின் மழலைச் செல்வங்களைக் காணும்போதும், அவரது நெஞ்சில் முகம் புதைத்து "இப்படி ஒரு குழந்தையை; ஒரே ஒரு குழந்தையைப் பெறமுடியாத பாவியாகிவிட்டேனே!" என்று புலம்புவாள்.

தெருவில் செல்லும் குழந்தைகளை, ஆவலையும், துயரத்தையும் ஒருங்கே கண்களில் ஏந்தி அவள் உற்று நோக்கும்போது, குழந்தைகளைத் தூக்கிச் செல்வோரின் முகத்திலும் ஒரு சுளிப்புத் தோன்றும்.

அது மட்டுமா? மருத்துவப்படிப்பை லண்டனில் முடித்துக்கொண்டு திரும்பும் வழியில் ராகவன் ஞாபகார்த்தமாக வாங்கிவந்த, கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்ட பளிங்கிலான "வீனஸ்" சிலையின் மேற்கண்ணாடியில் ஒருநாள் ராகவன் தன்னை மறந்த நிலையில் ஒரு கீறலை ஏற்படுத்திவிட்டபோது என்னமாய்ச் சத்தம் போட்டாள், உயிரே போய்விட்டதுபோல்! ஆனால் பின்னொரு நாள், வீட்டிற்கு வந்திருந்த நண்பனின் குழந்தை அச்சிலையை இழுத்து, முற்றாக நொறுக்கிவிட்டபோது, அனைவரும் திகைத்து நிற்க, "பரவாயில்லை. குழந்தைதானே! தெரியாம செய்துட்டான்!" என அவனை மடியில் தூக்கிவைத்துக் கொஞ்சியவளல்லவா இவள்?

ஆனால் சில சமயங்களில் அர்த்தத்தோடு ராகவனை நோக்கி, "இப்பனாச்சும் உங்களுக்குப் புரியுதாங்க, ஏன் நமக்குக் குழந்தைப் பாக்கியத்தை இறைவன் கொடுக்கலேனு! நான் அப்போதே சொன்னேனே, இந்தக் கேவலமான தொழிலினாலதான் நமக்கு இப்படி ஒரு குறையை ஆண்டவன் கொடுத்திருக்கான்னு! இப்ப தெரியுதா?" என்று அவள் வாயால் சொல்லாமல் கண்களால் சொல்லும்போது, ராகவன் தலையைக் குனிந்து கொள்வார்.

"ஆரம்பத்தில் யோசிக்காமல் செய்துவிட்டேனே! அந்தப் பாவங்களோட பரிசுதானா இது!" என்று ராகவனும் மனதுக்குள் புலம்பாத நாளில்லை.

அன்றுதான் அவள் வந்தாள்! நவநாகரிகத்தைப் பறைசாற்றும் உடைகளோடும் ஒப்பனையோடும்! ராகவனின் சொந்த மருத்துவ நிலையத்தில், அவரது தனியறையில்

அவள் அவரைச் சந்தித்துச் சொன்ன விஷயம் அவரைத் திடுக்கிட வைத்தது.

"டாக்டர்! ஐ எம் அன்மேரிட்! பட்...சம்ஹௌ... நான் கர்ப்பமாயிட்டேன்! ஆனா நான் உலகத்தோட கண்களுக்குக் கன்னியாகவே காட்சி தர விரும்பறேன்! ஸோ... ஐ ஹாவ் கம் ஃபோர் "அபார்ஷன்" கேன் யூ டூ இட்?"

ராகவன் அசந்தே போய்விட்டார். நவநாகரிகத்தில் மூழ்கித் தெழுந்த பெண்ணோ இவள்! இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நிற்கும் நாகரிக மானிடக் கூட்டத்தின் பிரதிபலிப்போ இவளது நிலை!

ராகவனுக்கு ஒரே சிந்தனை! அவள் மேல் ஒட்டிக்கொண்டுவிட்ட பாவக்கறையைக் கழுவிவிடத் தான் உடந்தையாக வேண்டுமா?

வந்தவளுக்குப் புரிந்துவிட்டது! சிரித்தவாறு "ஹேண்ட் பாக்"கினுள் கையை விட்டாள். தான் ஒரு "உயர்" மட்டப்பெண் என்பதைக் காட்ட விரிந்த அவளது கரங்களில் கற்றை கற்றையான பண நோட்டுக்கள்!

ராகவனின் சிந்தனைக் கோடுகளோ மேலும் நீண்டன. நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, உபகாரச் சம்பளத்தின் மூலம் மேல் நாட்டில் மருத்துவப் பட்டம் பெற்று, பணக்கார நண்பர்கள் மூலம் சொந்தத்தில் மருத்துவ நிலையம் நிறுவி இன்று ஏனோதானோவென்று நடக்கும் தொழில்...

இப்போது இவளது கையிலோ, தான் ஒரு வாரத்தில் சம்பாதிக்கப் போகும் பணம்! ஒரே ஒரு "காரியத்திற்கு" அவ்வளவு பணத்தையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறாள் அவள்!

பாவத்திற்கும், தர்மத்திற்கும் இடையிலே நடந்த மனப்போராட்டத்தில் பாவம் வென்றது! "இந்தக் காலத்திலே யோக்கியன் எவன் இருக்கிறான்! பாவம் புண்ணியம் அப்படிங்கறதெல்லாம் பொழைக்கத் தெரியாத பயல்கள் கண்டுபிடிச்ச பெயர்" என்ற முடிவோடு எழுந்த ராகவனிடம் அந்தப் பணம் கைமாறியது.

சில நாட்களுக்குப் பின் மற்றொருத்தி. முன் வந்தவளின் வகுப்பைச் சேர்ந்தவள். அவளது பேச்சைக் கேட்டுக் கொண்டு இவள் இங்கே வந்திருக்கிறாள். மீண்டும் பணம் கைமாறியது.


அன்றுமுதல், வரவுக்கும் செலவுக்கும் முடிச்சுப் போட முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்த ராகவனின் கணக்குப் பதிவேட்டில் "வரவு"கள் அதிகமாயின.

வாழ்க்கைப் பாதையில் வழுக்கி விழுந்த பெண்களின் வரவுகளும் அதிகமாயின! நாளடைவில் அவரது "புனர்வாழ்வு" நிலையத்தை நோக்கிப் படையெடுத்த பெண்களின் மூலம் அவர் சம்பாதித்த செல்வம் அவருக்குக் காரைத் தந்தது, இதுவரை கனவில்கூட காணாத வசதிகளைத் தந்தது. பங்களா, பகட்டு. அந்தஸ்து அனைத்தையும் தந்தது.

ஆனால் அவர் சம்பாதித்த எதுவுமே, அவருக்குக் குழந்தைப் பாக்கியத்தைத் தரவில்லை. சந்தேகத்தின் பேரில் கணவன் மனைவி இருவரும் மருத்துவரிடம் சோதனை செய்தபோது, மருத்துவரும் சொல்லிவிட்டார் "உங்க ரெண்டு பேருக்கும் எந்தவிதக் கோளாறோ மலட்டுத் தன்மையோ இல்லே! இது ஆண்டவனா செய்யற சோதனை." அந்த ஆண்டவன் சோதனையின் விவரம் கமலத்திற்குப் புரியாவிட்டாலும். ராகவனுக்கு மிக லேசாகப் புரிந்தது.

நீண்ட நாட்களுக்குபின் கமலம் தன் கணவன் இடையில் செய்து வந்த தொழிலை எதிர்பாராத விதமாக அறிந்தபோது புலம்பினாள்.

"இப்ப எனக்குத் தெரியுதுங்க. ஏன் நமக்குக் குழந்தையில்லேனு! அவனா பார்த்து அனுப்பிவைக்கிற குழந்தைச் செல்வங்களுக்கு, பூமியில் நீங்க தடை விதிக்கறீங்க! அதனால



தான் அவன் நமக்குக் குழந்தையைக் கொடுக்காம தடை விதிச்சுக்கிட்டு வர்றான்! இருக்கிற பாவத்தை இன்னும் கூட்டாதிங்க! இத்தோட விட்டுடுங்க!" என்று கதறுவாள்.

ஆனால் ராகவன் லேசாகச் சிரித்து மழுப்பிவிடுவார். "இதெல்லாம் வீண் கற்பனை கமலம்! குழப்பமான மனநிலேலே இருந்து கிளம்புற மூடநம்பிக்கைகள்! இட்ஸ் ஜஸ்ட் சூபர்ஸ்டிஷஸ்!" என்று சொல்லிவிட்டு நகர்ந்து விடுவார்.

இந்தச் சம்பவத்திற்குப் பின் தான் கமலத்தைத் தீராத மனநோய் பற்றியது. எந்நேரம் பார்த்தாலும், உணவையும் மற்றெல்லாவற்றை மறந்து குழந்தையைப் பற்றிய சிந்தனையின் அணைப்பிலேயேஆழ்ந்து கிடப்பாள் அவள். சமயங்களில் கணவனைப்பற்றிய புலம்பல் "இப்படியெல்லாம் செய்கிறாரே" என்று!

ஒரு வருடமா, இரண்டு வருடமா. ஏறத்தாழ பத்துப் பன்னிரண்டு வருடங்களாகக் குழந்தைச் செல்வத்திற்கான அறிகுறியே இல்லாமல் வாழ்ந்துவிட்டபிறகு, ராகவனின் மனதிலும் சலனம் புகுந்து அலைக்கழித்தது.

ஒருக்கால் கமலம் சொல்வது போல், நான் செஞ்சுவர்ற பாவந்தான், இவளுக்குக் குழந்தையை கொடுக்காம தடைவிதிக்குதோ?" என்ற எண்ணம் ஆலவிருட்சமாக வளர்ந்து ராகவன் உள்ளத்தில் நிலைத்துவிட்டது.

விளைவு? தான் செய்து வந்த தொழிலின் மேல் ஒருவித வெறுப்பும் கசப்பும் ஏற்பட்டு, ஒருநாள் தன் மருத்துவ நிலையத்தை மூடும் நிலைக்கு அது கொண்டு வந்தது.

அமைதியை நாடிய அவர், மருத்துவநிலையத்தை வேறொருவருக்கு விற்றுவிட்டு நகரத்தை விட்டுச் சற்றுத் தொலைவில் ஒரு பங்களாவை வாங்கி அங்குக் குடிபெயர்ந்தனர்.

இடமாற்றம் தங்கள் இருவருக்கும் ஒரு மன மாற்றத்தைக் கொடுக்கும் என்ற அவர்களது நம்பிக்கையும் நாளடைவில் தளர்ந்தது.

ராகவனோ, பத்திரிகைகளில் மூழ்கிப் பார்ப்பார்; அருகிலிருக்கும் கிளப்பின் சுவாரசியமான ஆட்டங்களிலும் மூழ்கிப் பார்ப்பார்! பலனில்லை... பழைய நினைவுகளே சுற்றி வரும்.

கமலத்திற்கும் அதே நிலை தான். அவளுக்கு ஏதாவது ஒன்றென்றால் ராகவனின் மனம் பதற்றமுறுமே தவிர, அவளுக்கு என்ன ஏதென்று நாடியைப் பிடித்துப் பார்க்கக்கூட எண்ணம் எழாது. இவரைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை வரும். அவளைப் பார்த்ததும் இவருக்குக் கண்கள் கலங்கும். பின் எப்படி வைத்தியம் பார்ப்பது?

வார்டின் கதவு திறக்கப்படும் மெல்லிய ஓசையும், தொடர்ந்து, வரும் காலணிகளின் ஒலியும், ராகவனின் செவிகளில் மோத, சிந்தனை மூட்டங்கள் கலைந்தன.

"என் மனைவி எப்படி இருக்காங்க டாக்டர் இஸ் ஷி ஆல்ரைட்?" மனைவியின் மேல் கொண்டிருக்கும் பரிவு வார்த்தைகளாக வெளிப்பட்டன.

"டோண்ட் வொர்ரி மிஸ்டர் ராகவன்! அவங்களுக்கு ஒண்ணுமில்லே! நீங்க என் கூட வாங்க! உங்ககிட்ட சில விஷயங்கள் சொல்லணும்"

தனது தனியறைக்குள் நுழைந்த டாக்டர், ராகவனை அமரச் செய்துவிட்டுத் தானும் அமர்ந்தார். சில விநாடிகளில் அந்த இடத்தை மௌனம் ஆக்கிரமித்தது. ராகவனே மௌனத்தை உடைத்தார்!

"அவளை நான் இப்ப பார்க்கலாமா டாக்டர்?"

"கொஞ்சம் அமைதியா இருங்க மிஸ்டர் ராகவன்! உங்க ஒய்ப்புக்கு சீரியஸா ஒண்ணுமில்லே. அவங்க இப்ப கர்ப்பமா இருக்காங்க, தட்ஸ் ஆல்!"

ஒரு குடம் தேனை அப்படியே வாயில் கொட்டியதுபோல் ராகவனுக்கு உடம்பெல்லாம் இனித்தது. இதுநாள் வரை சோர்ந்து தாழ்ந்திருந்த தலையும் நெஞ்சமும் தானாகவே நிமிர்ந்தன. என்ன சொல்வதென்றே அவருக்குப் புரியவில்லை!

"டாக்டர்... நான்... எனக்கு ஒண்ணுமே புரியலே! ஐ ஐ எம் வெரி ஹேப்பி டாக்டர்...வெரி வெரி ஹேப்பி..." இனிமை முகத்தில் வழிந்தது ராகவனுக்கு. உள்ளத்திலும் உவகை பொங்கியது.

"ஆனா..." டாக்டர் கூறி நிறுத்தியபோது, ராகவன் முகம் மாறியது.

"ஆனா...?"

"மிஸ்டர் ராகவன்! நாங்க உங்க மிஸஸை நல்லாச் சோதிச்சோம்! அவங்க இப்ப ரொம்ப "வீக்"கா இருக்காங்க! ஐ மீன் உடலாலேயும் உள்ளத்தாலேயும்தான்! ஒரு பிரசவத்தைத் தாங்கக்கூடிய சக்தி அவங்களுக்கு இப்ப இல்லே! அப்படியே இந்தப் பிரசவம் நடந்தாலும் தாயா, குழந்தையா என்கிற பிரச்சினைக்குக் கொண்டு வந்து விட்டுடும்! ஸோ..."

"ஸோ..."

"அவங்க வயித்திலே வளர்ற கருவை அழிக்கிறதுதான் அவங்க உயிரைக் காப்பாத்தக்கூடிய ஒரே வழியா எங்களுக்குப் படுது!"

"டாக்டர்...!" என்று அலறினார் ராகவன்

நெஞ்சில் கட்டிய இன்பக் கோட்டையின் அடித்தளமே சரிந்து விழ்வதை அவர் உணர்ந்தார். அழகாக வரைந்து முடிக்கும் நிலையிலிருக்கும் ஓவியத்தின் மேல் மை சிதறி விழுந்ததைப் போன்ற ஒரு பிரமை. தாகத்தால் வாடுபவனின் வாய் வரை நீரைக்கொண்டு வந்து பின் சடாரென்று நீரைத் தூரத்தில் கொட்டிவிட்டதைப் போன்றதொரு நிலைமை.

"கொஞ்சம் அமைதியா யோசிச்சுப் பாருங்க ராகவன்! இருக்கிற உயிரைக் காப்பாத்தறதுதான் டாக்டர்களோட கடமை! நீங்களும் ஒரு டாக்டர்தான். அந்தப் பொஸிஷன்லே இருந்து இந்தக் கேஸை "அப்ரோச்" பண்ணிப் பார்த்து உங்க பதிலைச் சொல்லுங்க!"

ராகவன் யோசித்தார். கையில் இப்போது தவழும் கமலம் என்னும் குழந்தையைத் தவறவிட்டு தான் இன்னொரு குழந்தையைப் பெறவேண்டுமா?

குழந்தை இல்லாமல் வாழ்ந்த பதினைந்து வருடகாலத் துன்ப வாழ்க்கையைப்போல் இன்னும் பல வருடம் வாழும் சக்தி உள்ளத்துக்குண்டு. ஆனால் இதுநாள் வரை கமலத்தோடு பிணைந்து நடத்தி வந்த இல்லற வாழ்வை இழந்து தனிமையின் அவலத்தில் ஒருநாளாவது வாழும் தெம்பு நிச்சயம் தனக்கு இல்லை என்பதை உணர்ந்தார் அவர்.

"நாளை உனக்குக் கிடைக்கப் போகும் பொற்காசுகளை விட, இன்று உன் கையிலிருக்கும் வெள்ளிக் காசுகளே மிகப் பெரிய சொத்து!" என்று எங்கோ படித்தது நினைவில் தட்டியது.

கண்ணீர் வழியும் கண்களோடு டாக்டரை நோக்கி மெல்லத் தலையாட்டினார் ராகவன்.

தற்போது உலகில் ஏற்படும் வறட்சியில் தண்ணீர், முதன்மை வகிக்கிறது. ஆகையால் சவூதி அரேபியாவும், அமெரிக்க நிறுவனமும் ஒன்று சேர்ந்து ஒரு புதிய சோதனையை அறிவித்துள்ளன. அதாவது தென் துருவத்திலிருந்து பனிப்பாறைகளை அப்படியே இழுத்து வந்து தேவையான தண்ணீரை மக்களுக்கு வழங்க தீர்மானித்துள்ளன.

1982-ஆம் ஆண்டு வாக்கில் முதலாவது பனிப்பாறையை இழுத்துவரும் திட்டம் தொடங்கும் என்று கூறப்படுகிறது. இதற்கான செலவு சுமார் 200 மில்லியன் டாலர் எனவும் சுமார் ஐந்து ஆறு மாதங்களுக்கு இதை உபயோகப் படுத்தலாம் என்றும் கூறப்படுகிறது.

பனிப்பாறைகளை...

பசிபிக் பெருங்கடலின் கரையோரங்களில் ஒரு வகை இராட்சத நண்டுகள் அங்கு காணப்படும் தென்னை மரங்களில் ஏறி, தேங்காய்களைப் பறித்துக் கீழே போட்டு, அவற்றின் நீரைக் குடித்துவிட்டு மீண்டும் கடலுக்கே சென்றுவிடுகின்றன.

தொகுப்பு:

செல்வராஜூ குமரன்,
கிள்ளான்



"உங்க வீட்டுலே தீபாவளிக்கு
கெட்டி உருண்டை செய்திருக்காங்களா?"-என்று
ஜெயகீதாவிடம் கேட்கிறாரோ சுமித்ரா.

திரை: நந்தா என் நிலா



"நீ என்கிட்டே வந்தா மத்தாப்பூ
கொடுப்பேன்" என்று கூறி
சிறுவனைச் சிவகுமாரிடமிருந்து
கிளப்பப் பார்க்கிறாரோ ஜெயா!

திரை: "புவனா ஒரு கேள்விக்குறி"



வனத்துக்கு அழகு பசுமை
வார்த்தைக்கு அழகு இனிமை
குளத்துக்கு அழகு தாமரை-நம்
முகத்துக்கு அழகு புன்னகை

திரை: "சொர்க்கம்–நரகம்"
இணை: சிவகுமார்–படாபட் ஜெயலட்சுமி

என்ன முறைப்போ?

"அவள் ஒரு தொடர்கதை" யில் ஸ்ரீபிரியாவும், படாபட் ஜெயலட்சுமியும் ஒரே காட்சியில்தான் இணைந்து நடித்தார்கள். அதன் பிறகு 'புண்ணியம் செய்தவள்', 'மோகம் முப்பது வருஷம்', 'பட்டிக்காட்டு ராஜா', 'ஆண் பிள்ளை சிங்கம்' போன்ற படங்களில் சேர்ந்து நடித்துள்ளார்கள். அப்போதெல்லாம் மிகவும் நெருங்கிப் பழகிய ஜெயலட்சுமி அண்மைய காலமாக ஸ்ரீபிரியாவிடம் வாய் திறப்பதில்லையாம்!

"இதன் காரணம் இதுவரை எனக்குப் புரியவில்லை. என்னிடம் மட்டும் தான் இப்படி "ரிசர்வ்"டாக நடந்து கொள்கிறாரா அல்லது எல்லாரிடமும் இப்படித்தானா என்பது தெரியவில்லை" என்று புரியாமல் வருத்தப்பட்டுக் கொள்கிறார் நடிகை ஸ்ரீபிரியா.

ஜெயலட்சுமியின் முறைப்புக்கு என்ன காரணம்? ஒருவேளை இருவருக்கும் அண்மையில் ஏற்பட்டிருக்கும் "நாயகி சான்ஸ்" மோதல்களாக இருக்குமோ? "ராஸ்மன்"

இலக்கியம் பயில்வோம் வாரீர்

முருகு சுப்பிரமணியன்

முதுபெரும் புலவர் சுவாமி இராமதாசர் அவர்களின் மணிவிழா கொண்டாடப்படுகிற இவ்வேளையில் அப்பெரும் புலவர், கடந்த நாற்பது ஆண்டுகளாகத் தமது செந்தமிழ்க் கலா நிலயத்தின் வாயிலாக ஆற்றிவரும் முக்கியப் மணியான தமிழ் இலக்கியப் பயிற்சி நல்கும் திருப்பணி குறித்துப் பின்னோக்கியும் முன்னோக்கியும் சிந்திப்பது சாலப் பொருத்தமாக இருக்கும்.

முதுதமிழ்ப் பெரும்புலவர் சுவாமி இராமதாசர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு பினாங்கில் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்றுவருகிற செந்தமிழ்க் கலா நிலயம், நம் நாட்டில் முறையான தமிழ்ப் பயிற்சிக்கு வித்திட்டு விளைவும் கண்ட குறிப்பிடத்தக்க முன்னோடி இயக்கங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழறம் பேணும் தகைமையாளர், "தமிழ்க்கொடி" அருணசலம் செட்டியார் அவர்களின் முயற்சியில் உருவான தமிழ்ப்பண்ணையும் முறையான இலக்கிய வகுப்புக்கள் நடத்தி இலக்கியப் பயிற்சி மிக்க ஆசிரியர்கள் பலரைத் தோற்றுவித்திருக்கிறது. பேராங்கில் நெடுங்காலம் வாழ்ந்து தமிழ்சமயம் தமிழகத்தில் ஓய்வு பெற்றுவரும் புலவர் முத்தைபனார் அவர்களும், மாணவர்கள் பலருக்கு முறையான இலக்கியப் பயிற்சியைத் தொடர்ந்து நல்கிச் சிறந்த தமிழ்ப்பணி புரிந்தவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

முந்திய நிலையில், தமிழ் ஏழாம் வகுப்பும் அதனைத் தொடர்ந்து தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மூன்று ஆண்டுகாலப் போதனாமுறைப் பயிற்சியும் ஓரளவுக்குத் தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் நமது தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் ஆழமாகப் பயில்வதற்குக் குறிப்பிடத்தக்க வாய்ப்பாக அமைந்திருந்தன. இது தவிர ஆரம்பக் காலங்களில் தமிழகத்திலிருந்து இங்கு வந்த தமிழாசிரியர்கள் பலர் ஓரளவு இலக்கியப் பயிற்சி உள்ளவர்களாக அமைந்திருந்தது. அவர்கள் இங்கு மேற்கொண்ட ஆசிரியப் பணிக்கும் அதன் வாயிலாக அவர்களிடம் பயின்ற மாணவர்களின் இலக்கிய அறிவுக்கும் உறுதுணையாக விளங்கிற்று.

"தமிழவேள்" சாரங்கபாணி அவர்களால் தோற்றுவிக்கப்பட்டுக் கடந்த 25 ஆண்டு காலமாக நடைபெற்று வருகிற தமிழர் திருநாள் கொண்டாட்டங்களும், அந்தக் கொண்டாட்டங்களின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட இலக்கியப் போட்டிகளும் நமது இளைய தலைமுறையினரிடையே இலக்கியப் பயிற்சியும், இலக்கிய ஆர்வமும் பெருகுவதற்குத் துணை புரிந்திருக்கின்றன. குறிப்பாகத் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களுக்காகத் தமிழகத்திலிருந்து சிறப்பாக வருகை புரிந்த பேராசிரியர்கள் நாடெங்கும் சுற்றுலா மேற்கொண்டு நிகழ்த்திய இலக்கியப் பேருரைகளும், தமிழ் இலக்கியப் பயிற்சிக்கும், ஆர்வத்திற்கும், உணர்வுக்கும் நீர் வார்த்தன என்று சொல்வது மிகையாகாது. இது போலவே பொங்கல் விழாக் கொண்டாட்டங்கள், மற்றும் பல்வேறு மன்றங்கள் நடத்திய இலக்கிய விழாக்கள், ஆண்டு விழாக்கள் ஆகியவை மூலம் நடத்தப்பட்ட கதை, கட்டுரை, கவிதைப் போட்டிகளும் நம் நாட்டில் இலக்கிய வளர்ச்சிக்கும் பயிற்சிக்கும் நன்கு துணை புரிந்திருப்பதையும் நாம் நன்றியோடு நினைவிகூர வேண்டும். தமிழ் இலக்கியக் கழகம் நடத்திவருகிற "தமிழ்மணி" தேர்வும் இலக்கியப் பயிற்சிக்கு ஊன்றுகோலாக விளங்குகிறது.

இன்றைய நிலையில் தமிழ் இலக்கியப் பயிற்சிக்கு உள்ள நிலைக்களன்களும் வாய்ப்பும் மிகச் சுருங்கி நிற்பதை நாம் கவனத்தில் கொள்வதும் அதற்குப் பரிகாரம் காண முற்படுவதும் மிக இன்றியமையாதது. தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் ஆறுவது வகுப்பு வரை மாணவர்கள் பெறுகிற தமிழறிவுதான் நம் நாட்டில் தமிழின் எதிர்காலத்திற்குச் சட்டபூர்வமான உத்தரவாதமாகத் திகழ்ந்து வருகிறது என்பதைக் கருத்தில் கொள்வதும் முக்கியமாகும்,

பிறமொழி ஆரம்பப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் மாணவர்களின் சொந்தமொழி என்னும் அடிப்படையில் தமிழைப் பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையும், அவர்கள் அவ்வகுப்புக்களின் மூலம் பெறுகிற தமிழறிவும் சரியான கண்காணிப்பும் செயலாக்கமும் இல்லாத காரணத்தினால் நாளுக்கு நாள் தேய்பிறையாக மாறி வருவதையும் கண்டு வருகிறோம்.

மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியப் பகுதி தனியாக இயங்கி வருகிறது. அந்தத் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் பட்டம் பெறுவதற்குள்ள வாய்ப்பும், ஓரளவு உயர் மட்டத்தில் தமிழ் இலக்கியப் பயிற்சிக்கு வாய்ப்பை வழங்கி வருகிறது.

இவை தவிர, தமிழ் நாளேடுகளும் குறிப்பாக அவற்றின் ஞாயிறு பதிப்புக்களும் அண்மைக்காலமாக அரசாங்கம் நடத்தி வருகிற "உதயம்" இதழும், தோன்றி மறைந்த பல இதழ்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பயிற்சிக்கும் நன்கு துணைபுரிந்து வந்ததையும்—வருவதையும் குறிப்பிட வேண்டும். மலேசிய வானொலி ஒலிபரப்புகின்ற தமிழ் நிகழ்ச்சிகளும் கூட இவ்வகையில் கணிசமாகத் துணைபுரிந்து வருகின்றன.

எல். சி. இ., எம். சி. இ., எச். எஸ். சி. ஆகிய அரசாங்கத் தேர்வுகளில் தமிழ்ப்பாடத்தைத் தேர்ந்தெடுத்து, அதனை முன்னிட்டுத் தமிழ் இலக்கிய- இலக்கணப் பயிற்சியை நாடுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக இருந்து வருகின்றது. அவர்களும் வளர்ந்து வருகிற புதிய சமுதாயத்தில் ஓரளவு தமிழறிவு பெற்றவர்களாக விளங்கித் தமிழ் மொழியின் எதிர்காலத்திற்குப் பக்கபலமாக விளங்கி வருகின்றார்கள்.



அண்மையில் (16.9.77) முதுதமிழ்ப் பெரும்புலவர் சுவாமி இராமதாசர் அவர்களுக்குப் பினாங்கில் மணி விழா நடைபெற்றது. விழாவில், தமிழகத்தைச் சேர்ந்த "பெருங்கவிக்கோ" புலவர் வா. மு. சேதுராமன், சுவாமி இராமதாசருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.

இதுபோல் தமிழ் மொழியையும் இலக்கிய இலக்கணங்களையும் ஆங்காங்கே தத்தம் மாணவர்களுக்குக் கற்பித்து வந்திருக்கும் ஆசிரியன்மார்கள் அனைவரையும் இக்கட்டுரையில் பெயர் குறிப்பிட இயலாவிட்டாலும் அந்த ஆசிரியன்மார்கள் அனைவரும் நம் நாட்டில் தமிழ்மொழி தழைத்தோங்குவதற்கும், அதன்வழி தமிழ்ப் புத்திலக்கியம் இந்த மண்ணுக்கே இயல்பான முறையில் மலர்வதற்கும் வழி வகுத்து ஆற்றிய அடிப்படைப் பணிக்காக நம் வணக்கத்திற்கும் நன்றிக்கும் உரியவர்களாவர்.

சமுதாயத்தின் கடமைகள்

மேற்கண்ட கண்ணோட்டத்திற்குப் பின்னர் தமிழ் மொழி வளர்ச்சிக்குச் சமுதாயம், தானே முன்னின்று முனைப்பாக ஆற்ற வேண்டிய கடமைகள் பல இருப்பதை நன்கு உணர முடியும். அந்தக் கடமைகள் எப்படி அமையவேண்டும் என்பதை இக் கட்டுரையில் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் இலக்கியப் பயிற்சியையே தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிற செந்தமிழ்க் கலா நிலையம் போன்ற அமைப்புக்கள் முக்கிய நகரங்கள் அனைத்திலும் தோற்றுவிக்கப்படவேண்டும்; அல்லது ஏற்கனவே உள்ள அமைப்புக்களில் ஏதாவது ஒன்று. இந்த இலக்கியப் பயிற்சியை முக்கியப் பணியாக மேற்கொள்ள வேண்டும். அந்த வகுப்புக்களில் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களும், எல். சி. இ., எம். சி. இ., எச். எஸ். சி. மாணவர்களும், தமிழ் எழுத்தாளர்களும் மற்றும் தமிழ் இலக்கிய ஆர்வலர்களும் சேர்ந்து பயனடைய வழிவகை காணவேண்டும்.

இந்த இலக்கிய வகுப்புக்களில் பயிலும் மாணவர்கள், குறிப்பிட்ட காலப் பயிற்சிக்குப் பிறகு முறையான ஒரு தேர்வை எழுதிச் சான்றிதழ் பெறுவதற்கும், அந்த வகுப்புக்களுக்குப் பாடத்திட்டம் முறையாக வகுக்கப்படுவதற்கும் ஆவன செய்ய வேண்டும். இவ்வகையில் மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்தியப் பகுதியும் அதன் விரிவுரையாளர்களும் தக்க திட்டங்களை வகுப்பதற்கும் தேர்வு முறையை மலேசிய ரீதியில் நிறுவுவதற்கும் சிறப்பாகத் துணை புரிய முடியும். பல்கலைக் கழக ஆதரவில் இதற்காகத் தேர்வுக் கழகம் ஒன்றையும் நிறுவி, அதில் பல்கலைக்கழகத்திற்கு வெளியிலிருக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் இடம் அளித்து, அவசியமானால் தமிழகத்தைச் சேர்ந்த ஒரிரு அறிஞர்களைக் கூட இணைத்துக்கொள்வதும் நலம் பயக்கும்.

தமிழகத்தில் தற்சமயம் நடைபெற்று வருகிற தமிழ்த் தேர்வுகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, நமது நாட்டின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் மாற்றி அமைத்துச் செயல்படுவது எளிதாக இருக்கும். இத்தேர்வுகள் படிப்படியாக இரண்டு மூன்று கட்டங்களாக மாணவர்களின் ஆர்வத்திற்கும் வசதிக்கும் ஏற்ப அமைவதும் அவசியமாகும்.

இந்த இலக்கிய வகுப்புக்களுக்கு வருகிற மாணவர்களிடம் மிகக் குறைந்த கட்டணமே வாங்க வேண்டியிருக்கும். அதனால் இவ்வகுப்புக்களில் போதிக்கின்ற ஆசிரியர்கள், தியாக உணர்வோடு தங்கள் நேரத்தை இப்பணிக்கு அர்ப்பணிக்க முன்வருவதும் முக்கியமாகும் என்றாலும்கூட அந்த ஆசிரியர்களுக்கு ஓரளவு ஊதியம் கிடைப்பதற்கும் வழி காணப்படவேண்டும்.

இப்படி முக்கிய நகரங்களில் இலக்கிய வகுப்புக்களை நடத்துவதற்குத் தேவைப்படுகிற பணம், பொது அமைப்புக்கள், பிரமுகர்கள், வசதி படைத்த கோயில்கள் முதலானோரிடமிருந்து நன்கொடையாகவே திரட்டப்படவேண்டிய கட்டாயம் ஏற்படும். முறையான திட்டங்களை வகுத்து ஆக்ககரமாகச் செயல்பட்டால் நன்கொடைகளைத் திரட்டாமலேயே இந்த வகுப்புக்களை மாணவர்களின் சம்பளத்தைக் கொண்டே நடத்த முடியும் என்பது என்னுடைய நம்பிக்கையாகும். இந்தப் பள்ளிகளுக்கு வேண்டிய செலவை எல். சி. இ முதலான அரசாங்கத் தேர்வுகளை எழுதும் மாணவர்களிடமிருந்து பெறுகிற சம்பளத்தின் மூலமும், மற்றும் அவர்களுக்கு வழங்குகிற பயிற்சிக் குறிப்புக்கள் முதலியவற்றுக்கு வாங்குகிற பணத்தின் மூலமும் ஓரளவுக்கு ஈடுகட்ட முயலலாம்.



சுவாமி இராமதாசர் நன்றியுரையாற்றுகிறார்

இந்த இலக்கிய வகுப்புக்களுக்குச் செலவழிக்கப் பணம் திரட்டுவது ஒரு பிரச்சினை என்றாலும், அதைவிடப் பெரிய பிரச்சினை போதிய மாணவர்களைத் திரட்டுவதே ஆகும். இவ்வகுப்புக்களுக்குத் தொடர்ந்து வந்து, தேர்வை முறையாக எழுதுவதற்கு உறுதி படைத்த மாணவர்களைப் பெறுவது கடினமாகவே இருக்கும். இவ்வகையில் தக்க பிரசாரமும், தூண்டுதலும் கவர்ச்சியான பரிசுத் திட்டங்களும் பயன் நல்கக் கூடும்.

இதுதவிர, அரசாங்கப் பள்ளிகளில் பயில்கிற தமிழ்க் குழந்தைகள் அனைவரும், அரசாங்கம் தனது கல்வித் திட்டத்தின் மூலம் தந்திருக்கிற நல்வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் தாய்மொழியை ஆரம்ப-இடைநிலைப் பள்ளிகளில் படிப்பதற்கும், தங்கள் பிள்ளைகளுக்குத் தாய்மொழியைப் பயிற்றுவிப்பதில் பெற்றோர்களுக்கு ஆர்வம் ஊட்டுவதற்கும் எல்லா ஊர்களிலுமுள்ள பொது அமைப்புக்கள், "தொண்டர் குழு" அமைத்துச் செயல்படவேண்டும். பிறமொழிப் பள்ளிகளில் தாய்மொழி வகுப்புக்கள் முறையாக நடப்பதற்கும், அதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆதரவு பூரணமாகக் கிடைப்பதற்கும் அந்தத் தொண்டர் குழுக்கள் முழுமூச்சாகப் பாடுபடவேண்டும்.

என்ன பயன்?

மேலே கூறப்பட்டிருக்கும் இலக்கியத் தேர்வுகளை எழுதி வெற்றிபெறும் மாணவர்களுக்கு அதனால் என்ன பயன் விளையும் என்னும் கேள்வியும் இயல்பாக எழக் கூடும். தமிழ்த்தேர்வுச் சான்றிதழ் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு இங்குப் பிழைப்பு நடத்துவது சாத்தியமல்ல என்பது வெளிப்படை. நாம் உருவாக்க விரும்புகின்ற தமிழ்ப் புலவர்கள், ஏற்கனவே மலேசிய மொழியிலும் ஆங்கில மொழியிலும் மற்றும் பல்வேறு துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பர். அத்தகைய சிறப்பான வாழ்க்கை நிலைக்களன்களை அமைத்துக்கொண்டவர்களுக்கும் அமைத்துக்கொள்ளும் பாதையில் செல்பவர்களுக்கும் தமிழ் இலக்கிய அறிவையும், சிறப்பாகத் தமிழ் அறிவையும் ஊட்டுவதுதான் நமது முக்கிய நோக்கமாகும்.

ஏற்கனவே பல கூரிய ஆயுதங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் போர் வீரன் ஒருவனுக்குக் கூடுதலாகத் தமிழறிவு என்னும் ஓர் ஆயுதத்தையும் நாம் வழங்க விரும்புகிறோம். இந்தத் தமிழறிவு என்னும் படைக்கலம் அந்தப் போர் வீரனின் வாழ்க்கை நலத்திற்கு—பண்பு மிக்க எதிர்காலத்திற்கு—நிச்சயமாகப் பயன்படும் என்பதிலே நமக்கு நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கையைச் சமுதாயத்தில் வலுப்படுத்தித் தேவையான மாணவர்களை இந்த இலக்கிய வகுப்புக்களுக்கு

சார்ப்பதில்தான் நமது திட்டத்தில் வெற்றி அடங்கி இருக்கிறது.

நாம் செயல்படுத்தக் கருதுகிற மலேசியத் தமிழ்ப் பொதுத்தேர்வுத் திட்டம், நாளடைவில் அரசாங்க அங்கீகாரத்தைப் பெறக்கூடிய வாய்ப்பும் பிரகாசமாகவே இருக்கிறது. அதற்கும் சமுதாயம் இடைவிடாத முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

மூன்றாவது கண்

ஏற்கனவே தமிழ்ப்புலமை பெற்றவர்கள், தமிழ் மொழியையும் சேர்த்துப் படித்து வெளிவந்திருக்கும் மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் பட்டம் பெற்றவர்கள், தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள் முதலான அனைவரும் வேலை வாய்ப்புக்களிலும் ஊதியத்திலும் மற்றவர்களுக்குப் பின்தங்கி இருப்பதாகச் சொல்ல முடியாது. அதற்கு மாறாகத் தமிழ் அறிவு சிறப்புத் தகுதியாக விளங்கி அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவி வருவதையே காணமுடிகிறது. ஆகவே பள்ளியில் பயிலுகின்ற மாணவர்களாயினும் சரி, படிப்பை முடித்து வேலையில் அமர்ந்திருப்பவர்களாயினும் சரி, அனைவருக்கும் நமது பல இனச் சமுதாயத்தில் கூடுதலான ஒரு மொழியின் பாண்டித்தியம், இரண்டு கண் படைத்தவனுக்கு மூன்றாவது கண் கிடைத்தது போன்ற பாக்கியமாகும்.

இரண்டு மொழி தெரிந்த மலேசியனைவிட மூன்று அல்லது நான்கு மொழி தெரிந்த மலேசியன் சிறப்பான தகுதி படைத்த குடிமகன் என்பதில் ஐயமில்லை. அவனுக்கு, மக்கள் எல்லோரிடமும் இரண்டறக் கலந்து பழகும் வாய்ப்பு மிகுதி என்பதை மறுப்பதற்கில்லை. எதிர்காலத்தில் மூன்று மொழி, நான்கு மொழி தெரிந்த மலேசியர்களின் எண்ணிக்கை கூடுமே ஒழியக் குறையாது. அதனால்தான் நமது மக்களுக்கு- வருகின்ற தலைமுறைக்கு- ஓரளவுக்கு ஆழமான தமிழ் இலக்கியப் பயிற்சி கிட்டுவதற்கு இத்திட்டங்களை நாம் செயற்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

நான் இக்கட்டுரையில் கூறியிருக்கும் திட்டங்களும் ஆலோசனைகளும் முடிந்த முடிவல்ல. சமுதாயத்தின் சிந்தனைக்காகவே இக்கருத்துக்களை வைத்திருக்கிறேன். சுவாமி இராமதாசர் போன்ற அறிஞர்கள் இத்தகைய இலக்கிய வகுப்புக்களை நடத்திக் காவியம் இயற்றும் புலவர்கள் பலரை உருவாக்கும் அளவுக்கு வெற்றி கண்டிருக்கிறார்கள். அத்தகைய அறிஞர்களின் அனுபவங்கள் இத்திட்டத்தின் வெற்றிக்கு நன்கு உதவும்.

தமிழ்மொழியின் எதிர்காலத்தில் அக்கறைகொண்ட பெரியவர்களும், அமைப்புக்களும் ஒருமுகமாகச் சிந்தித்துத் தக்க செயல் திட்டங்களை வகுத்துத் தமிழ் இலக்கியப் பயிற்சியும், தமிழ் இலக்கிய வகுப்புக்களும் நாடெங்கும் தோற்றம் பெறவும் ஏற்றம் பெறவும் வழி வகுப்பர் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன்.

(முதுதமிழ்ப் பெரும்புலவர் சுவாமி இராமதாசர் மணி விழா மலரில் இடம்பெற்ற கட்டுரை)

கா. இராஜகிள்ளி

ஒருவர் தோற்பின்...



சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் ஒரு குடி மரபினர். இவர்களுக்குள் நீண்டநாள் பெரும் பகை. இப்பகையினை அறிந்தார் பெரும்புலவர் ஒருவர். அப்புலவரின் பெயர் கிழார் என்பதாகும். கோவூரைச் சேர்ந்தார் ஆதலின் கோவூர்க் கிழார் என்பர், கற்றோரும் மற்றோரும். சோழன்நலங்கிள்ளி நல்லபுலமையும் போராற்றலும் உடையவன். இவனைச் சேட் சென்னி என்றும், புட்பகை என்றும், தேர்வண்கிள்ளி என்றும் புகழ்ந்து பாடுவர் புலவர்; போற்றி வணங்குவர் மறவர்; பாடித் துதிப்பர் உழவர்.

சோழன் நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டைக்கு அதிபதி. நெருங்க முடியாத ஆற்றல் மிக்க குதிரைப் படைகளைக் கொண்டவன். வீரம் விளைவிக்கும் நெஞ்சுரம் உடைய தீரன். இவன் தன் கோட்டையில் இருக்கும்பொழுது நலங்கிள்ளி பெரும்படையுடன் சென்று வளைத்துக்கொண்டான். ஒரு குடி மரபினர்; ஒரே இரத்தம் உடையவர்; வீரத்தில் இருவரும் சளைத்தவர்கள் அல்லர். அவர்களுடைய வஞ்சினம் குடி மக்களை அல்லவா அழித் தொழிக்கும் என்பதனை அறிந்த புலவர் இவ்விரு அரசர்களின் செயலையும் இடித்துரைக்கின்றார் ஒரு பாடல் மூலம்.

"சோழனே கேள்! உனது எதிரியாக நிற்பவன் பனம் பூச்சூடிய சேரன் அல்ல; வேப்ப மாலை அணிந்த பாண்டியனும் அல்ல. உனது மாலையும், உன்னுடன் போரிட நிற்பவனும் அணிந்துள்ளதும் ஆத்திப் பூமாலையே! வீரம் விளைவிக்கும் இப்போரிலே ஒருவர் தோற்றாலும் தோற்றது உனது குடியே அல்லவா? வெஞ்சமரிலே இருவரும் வெற்றி பெறுவதென்பது இயலாது. ஆகவே, உம் செயல் குடிப்பெருமைக்கு உகந்த ஒன்று ஆகாது. இச்செயலானது உம் போன்ற வேந்தர்களுக்கு உடல் பூரிக்கும் அளவிற்கு நகை உண்டாக்குமே அல்லாது பெருமை தேடித் தராது" எனப் பழித்துக் கூறுகின்றார்.

இரும்பனை வெண்டோடு
மலைந்தோன அல்லன்
கருஞ்சினை வேம்பின்
தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும்
ஆர்மிடைந்தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியும்
ஆர்மிடைந்தன்றே
ஒருவிர் தோற்பினும்
தோற்பது உம் குடியே
இருவிர் வேறல் இயற்கையும்
அன்றே. அதனால்
குடிபொருள் அன்றுநும்
செய்தி கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை
செய்யும்இவ் விகலே

என்பதே அப்பாடல். புறநானூற்றிலே வரும் இப்பாடல் வஞ்சித் திணையில் துணை வஞ்சித் துறையைச் சார்ந்ததாகும். இந்தப் பாடல் இன்றைய நமது இந்தியச் சமூகத்திற்கு மிகவும் பொருத்தமான பாடலாகும்.

நமது இந்தியச் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களில் சிலர் தங்களுக்குள்ளே பகையுணர்ச்சியை வளர்த்துக் கொள்கின்றனர். இதனால் ஏளனத்துக்கும் அவமதிப்புக்களுக்கும் ஆளாவதாகப் போவது நமது இந்தியச் சமுதாயமே அன்றி வேறு இனமல்ல என்பதை அவர்கள் உணரவேண்டும். மற்றச் சமூகத் தலைவர் நம்மவரைப் பார்த்துக் கேலி செய்ய இது வழிகோலும். தலைவர்கள் தங்களுக்குள் காழ்ப்புணர்வு கொண்டு பகைமை பாராட்டினால் அழிந்தொழிவது நமது சமுதாயமே. ஆகவே, தலைவர்கள் பகை மறந்து மக்கள் நலம் கருதித் தொண்டு செய்ய முன்வரவேண்டும். நமது இனம் கட்டுக்கோப்பாக இருந்து, வாழ்க்கையில் முன்னேற நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்த வேண்டும். நமது இனத்துக்குள்ளே இனப்பூசலையும், போட்டி மனப்பான்மைகளையும் தவிர்க்க வேண்டும்.



மாணவியர் பக்கம்





அழகான பெண் கண்ணுக்கு விருந்து. குணமான பெண் மனத்திற்கு விருந்து. (நெப்போலியன்)

வாழ்க்கை என்பது துக்கம், ஏக்கம், இன்பம் நிறைந்ததே. (ஹென்றி)

அன்பும், பண்பும், அமைந்த பெண்கள் அழகிய தமிழ்த்திரு கண்கள். (பாரதிதாசன்)

பெண்களின் அன்பு, ஊற்றுத் தண்ணீர்போல, எவ்வளவு எடுத்தாலும் குறையாது. (யாரோ)

ஆழ்ந்த அன்பிலேயே உயர்ந்த உண்மை மலர்கிறது. (ஹீன்)

தொகுப்பு:
குமாரி கே. எஸ். நளினி
செமினி



சமையல் குறிப்புகள்



கறிவேப்பிலை, சுட்ட புளி, வறுத்த உப்பு, வறுத்த மிளகாய், வற்றல் ஆகியவற்றைக் கொண்டு துவையல் அரைத்துச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும். வயிற்று உளைச்சலுக்கும் அது நல்ல மருந்து.

உருளைக்கிழங்கு, பீட்ரூட் போன்ற கிழங்குகளுக்குத் தோலை நீக்குவது போல "கேரட்"டுக்குத் தோல் சீவக்கூடாது. தோலுக்கு அருகில்தான் நமக்கு வேண்டிய உயிர்ச் சத்துக்கள் நிறைய இருக்கின்றன.

வாழைப்பூவை நறுக்கி அரிசி கலந்த தண்ணீரில் போட்டுக் கழுவினால், பூ கறுக்காமல் சுத்தமாக இருக்கும்.

இரா. கல்யாணி,
பத்து அன்னம்.

கேஸ்டர் அல்வா

தேவையானவை:-

கேஸ்டர் மாவு 1கப், சீனி 1½கப், தேங்காய்ப் பால் 6 கப், எஸ்ஸென்ஸ் 2 தேக்கரண்டி.

செய்யும் விதம்:

ஒரு பாத்திரத்தில் கேஸ்டர் மாவைப் போட்டு அதனுடன் தேங்காய்ப்பாலையும் ஊற்றிச் சீனியையும் கலக்கவேண்டும். மூன்றும் நன்றாகக் கலந்ததும் பார்க்க மஞ்சள் நிறமாக இருக்கும். அடுப்பில் பானையை வைத்து, கலந்த மாவை ஊற்றிக் கிண்டவேண்டும். சிறிது நேரத்தில் கட்டியாக வரும்போது எஸ்ஸென்-சை ஊற்றி மேலும் கிண்டவேண்டும். கெட்டியாக வந்ததும் ஒரு தாம்பாளத்தில் ஊற்றி ஆறவைக்க வேண்டும்.

இரா. அம்பிகா. லங்காப்

அழகுக் குறிப்புகள்

திருமதி ராஜன்



முகப்பரு, இளம் பெண்களுக்கு அடிக்கடி தோன்றும் ஒரு தொல்லை. இதைப் பல வழிகளில் போக்கி விடலாம். இது ஒரு முறை. முட்டையில் இருக்கும் வெள்ளைக் கருவை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் எலுமிச்சம் பழ இரசத்தைப் பிழிந்து நன்றாகக் கலந்து கொள்ளுங்கள். இந்தக் கலவையை முகத்தில் பூசிக் கொண்டு இருபது நிமிஷங்கள் ஊற வையுங்கள். பிறகு முகத்தைக் குளிர்ந்த நீரில் சுத்தம் செய்து விடுங்கள். வாரத்திற்கு இரு முறை இப்படிச் செய்தால் முகப் பரு மறைந்து விடும். வராது.

கறுப்பாய்இருப்பவர்கள்வெள்ளை உடையைத் தவிர வேறு எந்த உடையையும் உடுத்தக் கூடாது. பெண்கள் மட்டும் லைட் கலர் உடைகளை அணியலாம். எந்தத் துணியை வாங்கினாலும் இவர்கள் வெள்ளை நிறத்திலும், லைட் கலர்களிலும் மட்டுமே தான் வாங்க வேண்டும். பெரிய கரைகள் இல்லாத உடைகள் தாம் இவர்களை அழகாக எடுத்துக் காட்டும்!



25. 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்'

வனிதாவின் அப்பா முன் கோபக்காரர் என்பதைக் கேள்விப் பட்டிருந்த லல்லிக்கு அதை நேரில் காணும் வாய்ப்பு முதன் முதலாக ஏற்பட்டிருந்தது.

"லல்லி! நீ சொன்ன விஷயம் மட்டும் முன்பே தெரிந்திருந்தால் அந்த நவீன் பயலின் எலும்பை எண்ணிப் பார்த்திருப்பேன்...! போன பிறகல்லவா சொல்கிறாய் !"

அவர் பல்லைக் கடித்துக் கொண்டு இப்படிக் கூறியதைக் கேட்கும்போது லல்லிக்கும் உள்ளுக்குள் நடுக்கம் எடுத்தது.

தான் எப்போதும்போல் எல்லாரிடமும் பேசுவதுபோல இவரிடம் பேசுவது எவ்வளவு பெரிய விபரீதத்தை விளைவிக்குமோ என்ற அச்சம் அவளைச் மெல்ல ஆட்கொள்ளத் தொடங்கவே எச்சரிக்கை அடைந்தாள்.

லல்லியின் மௌனத்தை அவர் எப்படி அர்த்தம் செய்து கொண்டாரோ! மெல்லத் தன் நிலைக்கு இறங்கி வந்தார்.

"லல்லி! நீ வருத்தப்பட்டுக் கொள்ளாதேம்மா ! நான் ஆத்திரத்தில் என்னவோ சொல்லிவிட்டேன்...! வனிதாவிடம் அவன் வம்புக்கு வந்தான் என்பதைக் கேட்டுத் தாங்கிக் கொள்ள முடியாமல் போய்விட்டது.."

அவர் குரலில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் பாவனை தொனிக்கவே லல்லி கொஞ்சம் சுதாரித்துக் கொண்டாள்.

"மாமா! கவலைப்படாதீர்கள்! தப்பாக எதுவும் நடந்துவிடவில்லை. நவீன் வனிதாவிடம் வம்பு செய்ய மாட்டான். என்னுடைய சிநேகிதி என்பதால் அவளோடு பழக விரும்பினான். ஆனால் அவனைப் பார்த்து வனிதா கொஞ்சம் பயந்து விட்டாள்! அவ்வளவுதான்! வேறொன்றும் இல்லை!"

"பின் நீ அவனைப் பற்றிச் சொன்னதெல்லாம்...?"

"ஓ...! அதைச் சொல்கிறீர்களா? வனிதா நவினிடம் பேசக்கூட விரும்பவில்லை! ஆனால் கோபியிடம் மட்டும் பழகுகிறாளே என்று அவனுக்குப் பொறாமை! எரிச்சல்! அதனால்தான் கோபியைப் பற்றி மட்டமாக எதையாவது சொல்லித் தன் ஆத்திரத்தைத்தீர்த்துக்கொள்கிறான்! அவனுக்கு எப்போதுமே கோபியிடம் பொறாமைதான்!"

"அது சரி! வனிதாவுக்கு இந்தக் கோபியோடு எப்படிப் பழக்கம் ஏற்பட்டது? அவன் எங்கே இருக்கிறான்...?" லல்லிக்கு அவர் என்ன கேட்கப்போகிறார் என்பது துல்லியமாக விளங்கியது. அவள் நிலை சங்கடத்திற்குரியதாக இருந்தது.

கோபி-வனிதாவின் பிணைப்பை அவர் கடுகளவுகூட, ஏன் கனவில் கூட ஒப்புக்கொள்ளவோ ஏற்கவோ மாட்டார் என்பதை ஆரம்பத்தில் அவர் பேச்சைக் கேட்டவுடனே உணர்ந்து கொண்டுவிட்டாள்.

• இதைப்பற்றி இப்போதே சொல்லி விபரீதத்தை உண்டாக்க அவள் விரும்பவில்லை!

எனவே மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள நினைத்தாள்.

"மாமா! கோபி மிகவும் நல்லவர்! அவரை எல்லோருமே விரும்புவார்கள்! ஒரே ஒரு தரம் பார்த்தவர்களிடம்கூட நீண்டநாள் பழகியவர்போல் கலகலப்பாகப் பிரியமாகப் பேசும் சுபாவமுடையவர்! எனக்கு சின்னப் பிள்ளையிலிருந்தே அவரைத் தெரியும்! இங்கும் எனக்குத் தேவையான உதவிகளை அவர்தான் செய்வது வழக்கம்! அதனால் என் தோழிகள் எல்லாருக்குமே அவரை அறிமுகம் செய்து வைத்திருக்கிறேன்! எந்த நேரம் எவ்வித உதவியாக இருந்தாலும் நாங்கள் அவரிடம்தான் கேட்போம்! அவரும் தயங்காமல் செய்வார்!"

"ஓ.. அவ்வளவு நல்லவனா?"

"நல்லவர்! நம்பிக்கைக்கு உரியவர்! நாணயமானவர்! இங்கே அவரைப் பற்றி யாரிடம் கேட்டாலும் இதே பதிலைத்தான் சொல்வார்கள்."

"அப்படியா ?"

"ஆமாம் மாமா! நல்லவர்களோடு பழகுவதில் தவறில்லையே"

அவர் முகத்தில் இலேசாகப் புன்னகை அரும்பியது.

"அந்தக் கோபிக்கு நீயே வக்கீலாக இருக்கிறாயே! அப்புறம் யாரைப் போய்க் கேட்கவேண்டும்! ஆனாலும் அவன் வாலிபன்தானே? அதை மறந்து விடலாமா...?" அவர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் லல்லியைத் திகைக்கவைத்தன.

இப்போதைக்கு வனிதா கோபி இவர்களின் உறவைப்பற்றி இவர் சந்தேகப்படாமல் ஊர் போய்ச் சேர்ந்தாக வேண்டுமே என்ற திகில் அவள் இதயமெங்கும் பரவி பெருந்திகிலை மூட்டியது.

நல்ல சமயத்தில் இந்துமதி அவர்களிடம் நெருங்கி வரவே அந்த விஷயத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி விழுந்தது.

இந்துமதியின் முகம்கூட என்னவோபோல் மாறிக் கிடந்தது. வீட்டிலிருந்து கிளம்பும்போது இருந்த உற்சாகமோ காரில் வரும்போது பொங்கிக்கொண்டிருந்த மகிழ்ச்சியோ துளிகூட அவளிடம் காணப்படவில்லை என்பதை உணர்ந்தார் அவர். லல்லியும் அதைக் கவனித்தாள்.

மகளைப் பார்க்க முடியவில்லையே என்ற கவலையா? அல்லது... அந்தக் கிழவியும் எதையாவது உளறித் தொலைத்துவிட்டாளோ என்ற பயம் லல்லியை வாட்டத் தொடங்கியது.

அங்கேயே நின்று கொண்டிருந்தால் வனிதாவும் கோபியும் சேர்ந்தாற்போல வந்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலை வேறு அவளைப் பற்றிக்கொண்டது.

வனிதா வந்தால் விஷயத்தைச் சொல்லும்படி கிழவியிடம் கூறிவிட்டுத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றாள் லல்லி.

கவலை தோய்ந்த முகத்தோடு வனிதாவின் அம்மாவும் விரக்தியோடு காணப்பட்ட அவளது தந்தையும் எதுவும் பேசிக்கொள்ளாமல் மௌனம் சாதிப்பதுபோல இருந்த நிலை லல்லியைச் சித்திரவதை செய்தது.

அந்த மௌனத்தைக் கலைக்க விரும்பியவள் போல லல்லி பேசினாள்.

"நான் எலிஸ் வீட்டுக்கு டெலிபோன் செய்து பார்க்கிறேன்! அங்கேதான் போயிருப்பாள் என்று நினைக்கிறேன்!"

சரி என்பதுபோல் வனிதாவின் அன்னை தலையை ஆட்டினாள்.

"உனக்கு இடம் தெரியுந்தானே! போய்ப் பார்க்கலாமே...!"

"எதற்கும் போன் செய்துவிட்டு வருகிறேன்! பிறகு போகலாம்...!" லல்லி அவசர அவசரமாக நடையை எட்டிப் போட்டாள். எங்கே அவரும், கூடவே வந்து விடுவாரோ என்ற பயம் அவளுக்கு.

ரீச்சர்ட்டுக்கு விஷயத்தைச் சொல்லி வனிதாவை எப்படியாவது காரில் அழைத்துக்கொண்டு வரும்





"மாங்கனி"



படி கேட்டுக்கொண்டதும் அவள் மனச்சுமை பாதியாகக் குறைந்துவிட்டது.

உற்சாகத்தோடு உடனே புறப்படுவதாக அவன் கூறியதும் அவளுக்கு போன உயிர் திரும்பியது போல இருந்தது.

வனிதா எலிஸோடு வெளியே போயிருப்பதாகக் கூறியதை அவர்கள் நம்பினார்கள்.

"சரி! அவள் வரட்டும்! அதற்குள் நான் போய் மற்ற ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன்"

"வனிதாவின் அப்பா பதிலுக்குக் கூட காத்திராமல் காரில் ஏறிப் புறப்பட்டுவிட்டார். லல்லி குழப்பத்தோடு வனிதாவின் அம்மாவைப் பார்த்தாள்.

"நானும் வனிதாவோடு தங்கியிருக்கப் போகிறேன்! வீட்டுக்கு ஏற்பாடு செய்யத்தான் போகிறார்!" வனிதாவின் அம்மா இப்படிச் சொன்னதும் லல்லி பரபரப்போடு ஏறிட்டுப் பார்த்தாள். ஏன் இந்தத் திடீர் ஏற்பாடு என்பது அவளுக்குப் புரியவேயில்லை!

26. 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்'

ரோஜாப் பூவால் தொடுத்த மாலையொன்று தோளில் புரள்வது போல வனிதாவின் மென்மையான மலர்க்கரங்கள் கோபியின் தோளில் தவழ்ந்தன. இடது கையால் அந்த மென்கரத்தைப் பற்றி அதன் மேல் தன் இதழ்களைப் பதித்தான். தோளில் பதித்திருந்த அவளது முகத்தைக் குறுகுறுவெனப் பார்த்தான். வனிதா நாணத்தோடு கையை மெல்ல இழுத்துக்கொண்டாள்.

"என்ன கோபி இது? நடுரோட்டில் இப்படியா?" அவள் செல்லமாகக் கோபித்துக்கொண்டாள்.

"இது லேக்கார்டன் என்பதை மறந்துவிட்டாயா? அங்கே பாரேன்!" வனிதாவுக்கு வெட்கம் பிடுங்கியது.

"அதனால்தான் இங்கே வேண்டாம் என்கிறேன்!"

"அப்புறம் எங்கேதான் நமக்குத் தனிமை கிடைக்கப்போகிறது?" அவன் குரலில் ஏமாற்றம் இழையோடியது. வனிதா தனக்குள் மெல்லச் சிரித்துக்கொண்டாள். அவளது சிரிப்பின் பொருளைப் புரிந்துகொண்டவன் போல் முறைத்துப் பார்த்தான். பின் தானும் சிரித்துக்கொண்டான்.

"வனிதா, இங்குப் படிப்பு முடிந்த பிறகு வெளிநாட்டுக்குப் போவதாகத் திட்டம் உண்டா?"

"ஏன் கோபி திடீரென்று இப்படிக் கேட்கிறீர்கள்?"

"வெளியூர் போவதாக இருந்தால் நாலைந்து வருடங்கள் ஆகுமே, படிப்பு முடிய...!"

"அதுவரை காத்திருக்க முடியுமா என்று கவலைப்படுகிறீர்களா? அவசரமாக இருந்தால் கல்யாணம் பண்ணிக்கொள்ளுங்களேன்...!"

"நீ சம்மதித்தால் செய்துவிட வேண்டியதுதான்..."

சட்டென்று அவளது கரங்கள் அவனது தோளை அழுத்திப் பிடித்தன. பூப்போன்ற அந்தக் கைகளுக்கு அத்தனை வலு எங்கிருந்து வந்ததோ என்று வியந்தான் கோபி.

"என்ன பேச்சையே காணோம்?"

"என்னோடு பழகியது, விரும்புவதாகச் சொன்னது எல்லாம்...?" அவள் குரலில் அதிகம் இழையோடியது ஆத்திரமா, அழுகையா? விளங்க முடியாமல் இரண்டும் அரைகுறையாகக் கலந்து வந்தன.

"உன்னையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக!" வனிதா உதட்டைக் கடித்துக் கொண்டு நாணத்தோடு சிரித்தாள்.

"போங்க கோபி! நான்கூட என்னவோ நினைத்துவிட்டேன்!"

"ரொம்பப் புத்திசாலிதான் போ! வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்காகத்தான் உன்னைக் காதலிக்கிறேன் என்று நினைத்தாயா?"

"பெரும்பாலும் அப்படித்தானே நடக்கிறது!"

"நானும் அப்படிச் செய்துவிடுவேன் என்று நினைக்கிறாயா வனிதா?" அவள் சட்டென்று தனது விரல்களால் அவனது வாயை மூடினாள்.

"விளையாட்டிற்குக்கூட இனிமேல் இப்படியெல்லாம் பேசவேண்டாம் கோபி! உங்களைப் பிரிவது என்பதைப்பற்றி என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியவில்லை"

வனிதாவின் குரல் தழுதழுத்தது. கோபி ஸ்கூட்டரை நிறுத்தி விட்டான்.

"என்னால் மட்டும் உன்னைப் பிரிந்து வாழமுடியும் என்று நினைக்கிறாயா? வனிதா! என் இதயமே வெடித்துவிடும்போல் இருக்கிறது! அதைப்பற்றி நினைக்கவே என்னால் முடியவில்லை! ஆனால் " எதையோ சொல்ல வந்தவன் சட்டென்று நிறுத்திக்கொண்டான்.

"ஆனால் என்ன? ஏன் நிறுத்தி விட்டீர்கள்? சொல்லுங்க கோபி!" அவள் குரலில் படபடப்புத் தோன்றினாலும் அழுதுவிடுவேன் என்பதுபோல் அது நெகிழ்ந்து அவன் நெஞ்சை நெருடியது.

செவ்வந்தி மலர் போலப் பளீரென்று மலர்ந்து சிரிக்கும் அந்த அழகிய முகம் வாடி விட்டதுபோல அவனுக்குப் பட்டது. சொல்லலாமா வேண்டாமா என்பதுபோல சிறு தயக்கம்.

உரிமையோடு கைகளைக் கோத்து அவன் தோளில் ஊன்றிக் கொண்டு மிகமிக நெருக்கமாக நெருங்கி நிற்கும் அந்தக் கபடமற்ற குழந்தை முகத்தை பார்க்கப் பார்க்க அவன் இதயத்தின் நரம்புகள் தெறித்துவிடும்போல் வலித்தன.



தென்றமிழ் நாட்டு மக்கள் கார்த்திகைத் திங்கள் முழுமதி இரவிலே விளக்குகளை வரிசை வரிசையாக வைத்து அவற்றின் ஒளிவடிவிலே எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளைக் கண்ணாரக் கண்டு வணங்கி வருதல்போலவே, வடநாட்டில் அக்காலத்திருந்த தமிழ் மேன்மக்களும் ஐப்பசித்திங்களில் விளக்குவரிசை வைத்து அவற்றின் ஒளியிலே விளங்காநின்ற முழுமுதற் கடவுளுக்குத் திருவிழாக் கொண்டாடி வந்தனர். அதுதான் தீபாவலி என வழங்கி வருகின்றது. வடநாட்டவர் தென்னாட்டிற் குடியேறிய பின் தீபாவலித்திருநாள் இங்குள்ள தமிழரது கொள்கைக்கு ஏற்றதாயிருத்தலின், அஃதிங்குள்ள தமிழ் மக்களாலுங் கொண்டாடப்பட்டு வருவதாயிற்று...

தீபாவலி என்பது தீப ஆவலி எனப் பிரிந்து விளக்கு வரிசை என்றே பொருள் தரும். விளக்கு வரிசை வைத்து அதன்கண் இறைவனை வழிபடுங் கார்த்திகை விளக்கு விழாவுக்குந் தீபாவலி விழாவுக்கும் வேற்றுமை சிறிதுமே இல்லை... அஃது இறைவனை ஒளி வடிவில் வழிபடுந் திருநாளாதலைத் தமிழ்மக்களனைவரும் நினைவு கூர்வார்களாக!

(மறைமலை அடிகளாரின் "தமிழர் மதம்" என்னும் நூலிலிருந்து)

இவளைப் பிரிந்து என்னால் இருக்க முடியுமா? கேள்விக் கணைகள் நெஞ்சைத் துளைத்தன.

"என்ன கோபி! ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்!"

"உன்னை ஒன்று கேட்கட்டுமா?"

அவள் என்ன என்று கேட்பது போல ஏறிட்டு பார்த்தாள்.

"நீ பெரிய படிப்புப் படித்து பட்டதாரியாக வரவேண்டும் என்று உன் பெற்றோர் விரும்புவதைப் போலவே நானும் விரும்புகிறேன்! ஆனால் நீ . ?"

"நான் மாறிவிடுவேன் என்று நினைக்கிறீர்களா? உங்களால் அப்படியும் நினைக்க முடிகிறதா கோபி?"

"நான் அப்படிச் சொல்லவில்லையே?"

"அப்புறம் என்ன சொல்லப் போகிறீர்கள்?"

"நீ திரும்பி வரும்போது நான் உனக்குத் தகுதியானவனாக இருப்பேனா? இருக்க முடியுமா வனிதா...?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?"

"எனக்கும் உனக்கும் இடைவெளி அதிகமாகிவிடும்! நாம் இணைய முடியாத அளவுக்கு இருதுருவமாகி விடுவோம்..." அவனை அதற்குமேல் பேசவிடவில்லை அவள்.

"அப்படியானால் நான் வெளியூருக்குப் போகப் போவதில்லை!"

'அப்படிச் சொல்லாதே வனிதா! என் சுயநலத்திற்காக உன் எதிர்காலத்தை நானே விழுங்கி விடுவேன் போலிருக்கிறதே! என்னால்தான் படிப்பைத் தொடர முடியாமல் போய்விட்டது! நீயாவது நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றுப் புகழ் பெறவேண்டும்! உனக்கு அதற்கான வசதியும் இருக்கிறது! என்னுடைய வனிதா பட்டதாரி என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வேனே!"

"இல்லை கோபி! அந்த பட்டப் படிப்பு நம் இருவருக்கும் இடைவெளியை ஏற்படுத்தி விடுமோ என்று எனக்கும் அச்சமாக இருக்கிறது! நான் வெளியூருக்குப் போகப் போவதில்லை. "

அவள் அவன் நெஞ்சில் முகத்தைப் பதித்துக் கொண்டாள்.

"இது என்ன குழந்தை மாதிரி அசட்டுத்தனம்?"

"நான் இவ்வளவு நாளும் அதைப் பற்றி நினைக்கவேயில்லை..."

"இப்போது மட்டும் உன்னை அடையும் தகுதி எனக்கு இருக்கிறது என்று நீ நினைக்கிறாய்...?"

"நீங்கள் இனிமேல் இப்படியெல்லாம் பேசக்கூடாது! என்ன தகுதி எனக்கு மட்டும் வந்துவிட்டது...?"

"நீ வசதியான குடும்பத்தில் பிறந்தவள்! அதுவும் ஒரே பெண்!"

"அதனால் எனக்கு என்ன பெரிய தகுதி வந்திருக்கிறது! நான் உங்கள் அன்பு இதயத்தைத்தானே விரும்புகிறேன்! நீங்கள் மட்டும் ஏன் என் அன்பைப் பற்றி நினைக்கவில்லை! எனக்கு நீங்கள்தான் வேண்டும்! அன்பிலும் அருங்குணத்திலும் நீங்கள் யாராலும் எட்டிப் பிடிக்க முடியாத தகுதியைப் பெற்றவர்! அதனால்தான் என்னை உங்களிடம் கொடுத்துவிட்டேன்!"

உணர்ச்சி வசப்பட்டு அவள் பேசியதைக் கேட்டபோது கோபியின் உள்ளம் சிலிர்த்தது. உடல் சிலிர்த்தது. இதயத்தின் துடிப்புக்கூட நின்றுவிடும் போல் படபடத்தது.

அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டபோது அவன் விழிகளிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர்த்துளிகள் அவள் மீது உதிர்ந்தன.

(வளரும்)

15 நாள் பலன்

நவம்பர் 11 முதல் நவம்பர் 25 வரை

கும்பம் (ஜன 20 — பிப் 18)

வியாபாரிகளுக்கு யோககாலம். பெண்களுக்குச் சிறுசிறு துன்பங்கள் வரலாம். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளிடம் நல்ல பேர் கிடைக்கும். பொதுவாக இந்த ராசிக்காரர்களுக்குக் கொடுக்கல்-வாங்கல் திருப்திகரமாக இருக்கும். உடலாரோக்கியத்தில் கொஞ்சம் கவனமுடன் இவர்கள் இருப்பது நல்லது.

நல்ல நாட்கள்: 14, 19, 21
எச்சரிக்கை நாட்கள்: 15, 18

மீனம் (பிப் 19 - மார்ச்சு 20)

பணத் தட்டுப்பாடு ஏற்படலாம். சிக்கனம் தேவை. கண்டதை எல்லாம் வாங்கத் தோன்றும். குடும்பத்தில் அமைதி சற்றுக் குறைந்தே காணப்படும். உடலாரோக்கியமும் அவ்வளவு நன்றாக இராது. நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரின் உதவி உண்டு. கூட்டுத் தொழில் கூடாது. சுயமாகவே எதையும் இவர்கள் செய்தால் நல்லது.

நல்ல நாட்கள்: 16, 18, 24
எச்சரிக்கை நாட்கள்: 11, 21

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

வாகனப் போக்குவரத்தில் நன்மை ஏற்படும். பகைவர்கள் நண்பர்களாக மாறுவர். பெரியோர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். செய் தொழிலில் மேன்மையடைவதற்கான வாய்ப்புக் கிட்டும். வாக்குச் சாதுர்யத்தால் பல காரியங்கள் இவர்களுக்கு எளிதாக முடியும். வரவு செலவு சமமாகவே இருக்கும்

நல்ல நாட்கள்: 17, 20
எச்சரிக்கை நாட்கள்: 14, 22, 24

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

உள்ளதை வைத்து நல்லபடியாக வாழ இவர்கள் நினைத்தாலும் இவர்களின் உற்றார் உறவினர்கள் இவர்களுக்குச் செலவு வைத்துக் கொண்டே இருப்பார்கள். பணம் எவ்வளவு வந்தாலும் போய்விடும். ஆனாலும் அதற்கேற்ப எந்த மூலை முடுக்கிலிருந்தாவது பணம் வரும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. எதிலும் தீர யோசித்த பிறகு கையெழுத்துப் போடுவது நல்லது.

நல்ல நாட்கள்: 13, 17, 21
எச்சரிக்கை நாட்கள்: 20, 22

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

கூட்டுத் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். பெரியோர்களின் ஆதரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும். நண்பர்களின் நெருக்கத்தைக் கொஞ்சம் குறைக்க வேண்டும். இல்லாவிட்டால் பல தொல்லைகள் ஏற்படவழி பிறக்கும். பிறருடன் அடிக்கடி வாக்குவாதங்கள் நிகழலாம். உணர்ச்சி வசப்பட்டு வம்பை விலைக்கு வாங்க வேண்டாம். நிதானம் இவர்களுக்குத் தேவை.

நல்ல நாட்கள்: 16, 22
எச்சரிக்கை நாட்கள்: 19, 21

கடகம் (ஜூன் 21 - ஜூலை 20)

சேற்றில் விழுந்துவிட்ட யானையைக் கொசுகூடச் சீண்டிப் பார்ப்பதைப் போன்ற நிலைமை இவர்களின் இப்போதைய நிலைமை. பொறுமை அவசியம். பணம் சுலபத்தில் கிடைக்காது. நெருங்கிய நண்பர்களின் ஆலோசனையால் நன்மையுண்டு. தெய்வ நம்பிக்கை நல்ல பலனை கொடுக்கும். கப்பலே மூழ்கினாலும் கலங்காத வியாபாரிகளைப் போன்றவர்கள் இவர்கள். அதனால் எதற்கும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

நல்ல நாட்கள்: 15, 19
எச்சரிக்கை நாட்கள்: 20, 24

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)

லட்சுமி கடாட்சம் இவர்களுக்கு அறுபத்தைந்து சதவிகிதம் கிடைக்கும். பெரியோர்களின் ஆதரவு இருபத்தைந்து சதவிகிதமும் குடும்பத்தினரின் ஒத்துழைப்பு ஐம்பது சதவிகிதமும் உண்டு. சக தொழிலாளர்களின் பொறாமை முப்பது சதவிகிதம். ரேஸ், லாட்டரி முயற்சிகளின் பலன் பூஜ்யம் தான். என்றாலும் வருமானப் பெருக்கம் முப்பது சதவிகிதம் கூடும்.

நல்ல நாட்கள்: 12, 16, 18
எச்சரிக்கை நாட்கள்: 13, 21

கன்னி (ஆக. 22 - செப் 22)

பள்ளத்தை நோக்கி நீர் ஓடுவதைப் போல இவர்கள், நண்பர்களின் வழியிலேயே செல்வார்கள். எனவே, நண்பர்கள் நல்ல வழி செல்பவர்களாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால்...! மேலதிகாரிகள் இவர்களின் திறமைக்கு மதிப்பளிப்பார்கள். கலைஞர்களாக இருப்பவர்களுக்கு நல்ல புகழ் கிடைக்க வாய்ப்புண்டு. அடாவடிக்காரர்களின் ஜம்பம் எப்போதும் போல் இப்போது சாயாது.

நல்ல நாட்கள்: 11, 18
எச்சரிக்கை நாட்கள்: 20, 23

துலாம் (செப் 23 - அக். 22)

இயல்பாகவே இரக்கமுள்ள மனசு இவர்களுக்கு. அதனால் கையில் ஒரு காசு தங்காது. கடிதப் போக்குவரத்தில் நல்ல சேதி வரும். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்கள், பெரியோர்கள் எல்லாரும் ஒத்துழைப்புத் தருவார்கள். செலவைக் கட்டுப்படுத்த முயன்றால் இன்னும் நல்லது.

நல்ல நாட்கள்: 14, 18, 21
எச்சரிக்கை நாட்கள்: 16, 20

விருச்சிகம் (அக் 23 - நவ. 22)

வியாபாரிகளுக்கு யோக காலம். காதலர்களுக்குத் துக்ககாலம். எழுத்தாளர்களுக்கு நல்ல காலம். பொதுவாக இந்த ராசியில் பிறந்தவர்களுக்குச் செலவு அதிகம் ஏற்படும். கூட்டுத் தொழில் வெற்றியளிக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவார்கள். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும் அதே வேளையில் குடும்பத்தினரின் ஒத்துழைப்புக் குறைந்தே காணப்படும்.

நல்ல நாட்கள்: 18, 24
எச்சரிக்கை நாட்கள்: 12, 21

தனுசு (நவ 23 - டிச. 20)

கடிதப் போக்குவரத்தால் நன்மை உண்டு. ஆனால் வாகனப் போக்குவரத்தினால் அல்ல. யாரையும் எளிதில் நம்பி மோசம்போக வேண்டாம். செலவுக்குத் தக்க வரவு இருக்காது. ஆகவே சிக்கனம் தேவை. மேலதிகாரிகள் நன்மை செய்வார். அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். ஓய்வு எடுத்தால் உடலுக்கு நல்லது.

நல்ல நாட்கள்: 15, 17, 23
எச்சரிக்கை நாட்கள்: 13, 20

மகரம் (டிச 21 - ஜன. 19)

திட்டமிட்டு வாழ்க்கை நடத்தும் இவர்களைக் கண்டு கஷ்டம் கொஞ்சம் ஒதுங்கியே நிற்கும். செய் தொழிலில் மேன்மை உண்டு. எதையும் ஆகாயம் கருதியே செய்யும் உங்களையும் சிலர் ஏமாற்றக்கூடும். கவனம் தேவை. வாக்குவன்மையால் பல காரியங்கள் நிறைவேறும். குடும்பத்தில் இன்பம் தாண்டவமாடும். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை.

நல்ல நாட்கள்: 14, 16, 18
எச்சரிக்கை நாட்கள். 11, 13

—தஞ்சை நகுலன்



முப்பது ஆண்டுகளாகத் தொழில் துறையில் மேலோங்கி வர்த்தகப் பெருமகனார் ஸ்ரீ வி.கே.கல்யாணசுந்தரம் ஜே.பி.

முதிர்ந்த வயதுடையவர்; குள்ளமான தோற்றமுடையவர்; சுறுசுறுப்பான செயலுடையவர்; வேகமான நடையுடையவர்; வருவோரை அகமகிழ்ச்சியுடன் வரவேற்கும் பாங்குடையவர்; நிதி வழங்கும் நெஞ்சமுடையவர்; தமிழ் நெறி போற்றும் பண்புடையவர்; ஓர் இளைஞருக்குரிய ஆற்றலுடையவர்; வணிகத்துறையில் வளர்ச்சி கண்டவர். அவர்தாம், சுமார் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு மேலாகத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழில் அதிபர் திரு. வி. கே. கல்யாணசுந்தரம் அவர்கள்.

இன்று பல்வேறு ஜவுளித் தொழில் நிறுவனங்களுக்கும் தோட்டங்களுக்கும், தங்கும் விடுதிகளுக்கும் உரிமையாளராகத் திகழும் வி. கே. கல்யாண சுந்தரம் உழைப்பால் உயர்ந்தவர். உன்னத நிலையை அடைந்தவர்.

"சிக்கனம் - சேமிப்பு - கடின உழைப்பு- கட்டுப்பாடு- நாணயம் -அன்புள்ளம் இவை இருந்தால் போதும், வாழ்க்கை ஒளிமயமாவது திண்ணம்" என்று உறுதியான குரலில் கூறும் வி. கே. கே., தமது பதினோராவது வயதிலேயே- தமிழகத்தில் இருக்கும்போதே - வியாபாரத் துறைக்கு வந்துவிட்டவர். அந்தச் சிறு வயதிலேயே சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டும்... சொந்தக் காலில் நிற்க வேண்டும்- சொந்த முயற்சியில் முன்னேற்றம் காண வேண்டும்-வளமான வாழ்க்கையைப் பெற்று உயர்வடைய வேண்டும் என்ற தீராத வேட்கை கொண்டவராக இருந்துள்ளார்.

தமிழகத்தில் திருவாரூரைத் தமது சொந்த ஊராகக் கொண்ட வி. கே. கே. 1938-ம் ஆண்டு மலையகம் வந்தார்.

தொடக்க காலத்தில் சிலிம் ரிவர் பட்டணத்திலுள்ள பலசரக்குக் கடையொன்றில் கடைச் சிப்பந்தியாகவும், பின் பங்குதாரராகவும் மூன்று ஆண்டுகள் வரை வேலை பார்த்து வந்தார் அப்போது தமக்குக் கிடைத்த சொற்ப ஊதியத்தில் சிக்கனமாகச் செலவிட்டு மீதியைச் சேமித்தும் வந்தார்.

மூன்றாண்டுகள் வரை சிறுகச் சிறுகச் சேமித்து வைத்த பணத்தைக்கொண்டு, எந்தப் பட்டணத்தில் கடைச்சிப்பந்தியாக வேலை பார்த்தாரோ, அதே பட்டணத்தில் அறுபது வெள்ளி முதலீட்டில் ஜவுளி-மளிகை அடங்கிய கடையை நிறுவி முதலாளி எனும் அந்தஸ்துக்கு உயர்ந்தார்.

ஆரம்பக கல்வி மட்டுமே பெற்றுள்ள வி. கே. கே. தாம் இத்துணை அளவுக்கு மேன்மை அடைந்திருப்பதற்குக் காரணம் சிறு வயது முதல் தாம் பெற்று வந்த தொழில் நுட்ப அனுபவமும் உழைப்புமே என்று பெருமிதத்துடன் கூறுவதைக் கேட்கும் போது, வாழ்க்கை முன்னேற்றத்துக்குப் படிப்பறிவைவிட, பட்டறிவும், உழைப்புமே பிரதானமானவை என்று உணர முடிகிறது.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, சிலிம் ரிவர் வட்டாரத்திலுள்ள லிமா பிலாஸ் தோட்டம், புக்கிட் பாசா தோட்டம், பெட்ஃபோட் தோட்டம், பீடோர் பகுதியிலுள்ள புரூஸ் தோட்டம் ஆகியவற்றில் வியாபாரக் கிளை நிறுவனங்களை நிறுவினார்.

அதன் பின் அவருடைய தொழில் விரிவடைந்தது. 1955 முதல் 1960 வரை செலுக்கான் சன் பட்டணத்தில் அன்னாரின் பெயர்ப் பலகையைத் தாங்கி ஒரு நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

இந்த வியாபார வளர்ச்சிக்கிடையே, அவ்வப்போது விலைக்கு வரும் நிலங்களை வாங்கி விற்கும் வியாபாரத்தையும் மேற்கொண்டு வந்துள்ளார்.

மக்களின் நலன் கருதி, அவர்களைச் சொத்துக்குரியவர்களாக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் இத்திட்டத்தில் இறங்கியதாகக் கூறும் வி. கே. கே., தாம் விலைக்கு வாங்கிய நிலத்தின் ஒரு பகுதியை இந்தியத் தொழிலாளர்களுக்குக் கடனுக்குக் கொடுத்து, பின் கொஞ்சங் கொஞ்சமாகக் கடனைப் பெற்றுக் கொள்ளும் 'திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளார். "ஆனால் அந்தத் திட்டத்தைத் தொழிலாளர்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் எதிர்ப்புக்குரல் எழுப்பினர்" என்று வருத்தத்துடன் கூறிய வி. கே. கே., 1969-ஆம் ஆண்டு பாகோ காடிஸ் தோட்டத்தில் அறிமுகப்படுத்திய இந்தத் திட்டத்தை முழுமையாக சீனச் சமூகத்தினர் பயன்படுத்திக் கொண்டனர்" என்றார்.

"நிலங்களை வாங்கி விற்கும வியாபாரத்தை நான் மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் இன்று தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் தோன்றி இருக்க முடியாது. தோட்டப்பாட்டாளிகளும் தோட்டப் பங்குதாரர்களாக ஆகியிருக்க வழியில்லை.

எத்துணைப் பெரிய சாதனைகளுக்கும் சிறு தொடக்கமே காரணம் என்பது போல, அன்றைய என்னுடைய முயற்சியின் அடிப்படையில் மாண்புமிகு துன் வீ. தி. சம்பந்தன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டதுதான் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம்.

தோட்டப்பாட்டாளிகளின் நலனுக்காகவும் அவர்களின் சுபிட்சமிக்க எதிர்கால வாழ்க்கைக்காகவும் அமைந்து செயல்பட்டுவரும் கூட்டுறவுச் சங்கத்தின் வழி, கூட்டுறவுத் தந்தை துன் வீ. தி. சம்பந்தன் அவர்கள் இன்னும் பல பயன்மிகு திட்டங்

களை வகுத்து அவற்றிற்குச் செயலுரு கொடுக்கலாம்" என்று தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் பற்றிக் கருத்துரைத்தார் வி. கே. கே

இடையறாத முயற்சி, நாணயம், பிறரை நேசிக்கும் பண்பு ஆகியவற்றை உள்ளத்தில் இறுத்தி உழைப்பால் உயர்ந்திருக்கும் ஜவுளி மன்னர் வி. கே. கே. பேரா மாநிலத்தில் பந்தாய் ரெமிஸ் பகுதியிலுள்ள ஹண்ட்லி தோட்டம், சிலிம் ரிவரிலுள்ள மீஞெட்சித் தோட்டம், பீடோங் வட்டாரத்திலுள்ள தோபாவாங் தோட்டம் ஆகியவற்றின் உரிமையாளராகவும் திகழ்கிறார். மற்றும் தமிழகத்தில் மதுரை, சென்னை, திருவாரூர் ஆகிய நகரங்களிலும் அவருக்குப் பல்வேறு தொழில்கள் இருக்கின்றன.

1961-ஆம் ஆண்டு ஈப்போவிலும், 1967-ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும், 1977-ஆம் ஆண்டு பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய நகரங்களிலும் கிளை நிறுவனங்கள் தோற்றுவித்துத் தொழிலில் அமோக வளர்ச்சியைக் கண்டுள்ளார்.

"இத்துணை பொறுப்புக்களையும் எவ்வாறு நிர்வகித்து வருகின்றீர்கள்?" என்று கேட்டபோது "கஷ்டந்தான்! அதற்காகச் சும்மா இருந்துவிட முடியுமா? வியாபாரத்தில் இறங்கிவிட்டால் ஒவ்வொரு வினாடியும் உழைக்க வேண்டும். வாழ்க்கையில் உயர வேண்டும், முன்னேற வேண்டும், வளர்ச்சி பெற வேண்டும் என்னும் உறுதியை நெஞ்சில் நிறுத்திவிட்டால் உழைக்க அஞ்சக்கூடாது. அதோடு வர்த்தகத் துறையில் இவ்வளவு பெரிய வளர்ச்சி கண்டிருப்பதற்கு என் மனைவி அம்மணி அம்மாள் தந்த ஆக்கமும் ஊக்கமும் குறிப்பிட வேண்டிய காரணங்கள்" என்றார்.

தொழில் வளர்ச்சிக்கு அவருக்குத் துணையாக நிற்கும் அவருடைய குமாரர்களான திருவாளர்கள் கே. இராமகிருஷ்ணன், கே. தியாகராஜன், கே. சேகரன், கே. கிருஷ்ணமூர்த்தி, கே. விஜயன், மருமகன்களான ஏ. பாலசுப்பிரமணியம், டி. அறிவாசகம், என். மணிமொழியன், மேலாளர்களான பி. கோடியாப்பிள்ளை, எஸ். சிவராஜு, சிவப்பிரகாசம், ராமசுப்பு, என. சிவன, எஸ். பழனியப்பன், ராஜேந்திரன், வி. பழனியப்பன், ஏ. ராஜமேனன் ஆகியோரையும், விசுவாசத்துடன் பணியாற்றி வரும் பிற சிப்பந்திகளையும் நன்றியுடன் அவர் நினைவு கூர்ந்தது அவருடைய பெருந்தன்மையைப் புலப்படுத்துகின்றது.

அவருடைய பெருந்தன்மைக்கு உரைகல்லாக அன்னாரின் வள்ளல் தன்மையும் அமைந்துள்ளது. ஈப்போ ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயம், ஸ்ரீ மகாகணபதி ஆலயம் ஆகியவற்றின் திருப்பணிகளுக்கும், கோலாலம்பூரிலுள்ள பல ஆலயங்களின் திருப்பணிகளுக்கும் பெரிதும் உதவியுள்ளார்.

அநேகக் கல்விப் பணிகளுக்கும் பேரா மாநில ம. இ. கா. கட்டட நிதிக்கும் கணிசமான அளவு நிதி வழங்கியுள்ளார்.

அக்டோபர் மாதம் 30-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை தமது சொந்தத் தோட்டமான ஹண்ட்லி தோட்டத்தில் ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயத்தைப் புதுப்பித்து, $20,000 செலவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தியுள்ளார்.

தொழில் துறையில் வேகமாக வளர்ச்சியடைந்து இப்போது, பல்வேறு தொழில் நிறுவனங்களுக்குச் சொந்தக்காரராகத் திகழும் வி. கே. கே.யின் எதிர்காலத் திட்டங்களையும் தெரிந்து கொள்ள விரும்பி அதுபற்றிக் கேட்டேன்.

அதற்கு அவர் தந்த பதில்: "எதிர்காலத்திட்டங்களில் மலிவு விலை வீடுகள் கட்டுவதும் அடங்கும். முதலில் இந்த மலிவு விலை வீட்டுத் திட்டத்தை எனக்குச் சொந்தமான மூன்று தோட்டங்களில் வேலைபார்க்கும் தோட்டப் பாட்டாளிகளிடையே அமல்படுத்தவிருக்கிறேன். அதன்படி இத்திட்டம் படிப்படியாக மற்றவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தவும் திட்டம் வைத்திருக்கிறேன். மலிவு விலை வீட்டுத் திட்டத்துடன், சில தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களையும் பங்குதாரர்களாக்கும் திட்டமும் வைத்துள்ளேன்."

பல்வேறு பொது நிறுவனங்களின் ஆதரவாளராகவும் அபிமானியாகவும் இருந்துவரும் வி. கே. கல்யாணசுந்தரம், "ம. இ. கா.வைப் பற்றிக் குறிப்பிடுகையில், ம. இ. கா. மலேசிய இந்தியர்களை முழுமையாகப் பிரதிநிதிக்கும் ஒரே அமைப்புதான் என்றாலும், "அணி" என்னும் "பிணி"யை அகற்றி, அந்த நாளில் ம. இ. கா.வின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் தூண்களாக இருந்த-இருக்கும் தோட்டத் தொழிலாளர்களைப் புறக்கணிக்காமல் செயல்படவேண்டும். அன்று ம. இ. கா.வின் வளர்ச்சிக்கு எவ்விதத்திலும் உதவ முன் வராத ஒரு சிலர், இன்று அதன் வளர்ச்சியைக் கண்டு சேருகின்றனர். அத்தகையோர் சமத்துவத்துடன் இருந்து செயல்படவேண்டும். கட்டுக்கோப்புடனும் ஒருமைப்பாட்டுடனும் செயல்படுவது மிகமிக அவசியமாகும். மேலும், மூத்த தலைவர்களுக்கு ம. இ. கா. தனது கதவுகளைத் திறந்துவிடவேண்டும். இது சமுதாயத்துக்குப் பெரிதும் பயனளிக்கும்" என்றார்.

இப்படி அவர் கூறும்போது அவரது குரலில் அழுத்தமும் உறுதியும் மிளிர்ந்தன. இவை, அவர் சமுதாயத்தின் மீது வைத்துள்ள பற்றையும், சமுதாய உணர்வையும் எடுத்துக்காட்டின.

தொழில் நிறுவனங்கள் பலவற்றை நிறுவி, பலருக்குத் தொழில் வாய்ப்புக்கள் வழங்கி ஓர் ஆலமரமாகத் திகழும் திரு. வி. கே. கல்யாணசுந்தரம் தம்பதியினருக்கு 7 புதல்வர்களும், 4 புதல்விகளும், 18 பேரக்குழந்தைகளும் இருக்கிறார்கள்.

இன்று வாணிபத்தில் சிகரமாகத் திகழும் வி. கே. கே., தொழில் துறையில் மேலும் வளர்ச்சியும் முன்னேற்றமும் கண்டு சிறந்தோங்க வேண்டும், இன்னும் பல கிளை நிறுவனங்களை நிறுவுவதன் வழி மேலும் பல வேலை வாய்ப்புகளை உருவாக்கிச் சமுதாயத்துக்கு உதவவேண்டும் என மனப்பூர்வமாகவிரும்புகிறோம்.

பேட்டி: சி. நாராயணன்
ஈப்போ

தமிழ் மணக்கிறது!



சேலம் "சங்கொலி" ஆசிரியர் திரு. சோலை இருசன் அவர்கள் இரண்டு ஆண்டுகட்கு முன்னர் கிழக்காசியா நாடுகளில் இலக்கியச் சுற்றுச் செலவை மேற்கொண்டிருந்தார்.

அவர் தமது பயணத்தின்போது சேகரித்த குறிப்புகளைக் கொண்டு எழுதப்பெற்ற கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது என்னும் நானூறு பக்கப் பயண நூலுடன் இரண்டாவது முறையாக நவம்பர் திங்களில் இந்நாடுகளுக்கு வருகைதர இருக்கின்றார்.

இம்மண்டலத்தில், குறிப்பாக மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இலக்கியப் பணிபுரியும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடக ஆசிரியர்கள், கலைஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், தமிழறிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோரைப் பற்றிய குறிப்புகளும் அந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பணிபுரியும் எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், நாடக ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகளைத் தாங்கி வரும் முதல் நூல் இது. இந்நாட்டுத் தமிழர்களைப் பெருமை செய்யும் ஓர் அரிய முயற்சி என்றே சொல்ல வேண்டும்.

திரு. சோலை இருசன் அவர்கள் வருகையின்போது வாய்ப்பு உள்ளவர்கள் ஆங்காங்கே அவரது சந்திப்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடுசெய்து நூல் விற்பனைக்கு உதவுவது, அவர் நமக்குச் செய்த பெருமைக்கு நாம் செய்யும் சிறப்பாகும்.

-மா. இராமையா

இலக்கிய அரங்கம்

சலனங்கள்

டாக்டர் இரா. தண்டாயுதம்

அழகிய கடற்கரைச் சாலை. அதில் ஒரு ஸ்கூட்டர் போய்க்கொண்டிருக்கிறது. அதை ஓட்டிச் செல்லும் ஓர் ஆணழகனின் இடையோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு மீனாட்சி மகிழ்ச்சியோடு போய்க் கொண்டிருக்கிறாள். செல்வச் செழிப்பின் இனிமைகளெல்லாம் அவளைத் தழுவி இருக்கின்றன. கட்டுக்கள் அகன்ற வானவெளியில் பறக்கும் இன்பம் அவளுக்கு. "இன்னும் வேகமாகப் போக வேண்டுமா?" என்று கேட்டுக் கொண்டு திரும்பும்போது அவன் கன்னம் உராய்கிறது. அவள் மெய் மறக்கிறாள். மனமோ "இன்னும் வேகம் இன்னும் வேகம்" என்று கூவுகிறது .. "படார்" என ஒரு சத்தம். மீனாட்சி திடுக்குற்று எழுந்து தன்னைச் சுற்றிப் பார்க்கிறாள். வெளிச்சம் உள்ளே புக அஞ்சும் ஒரு குடியிருப்பில், கந்தற் பாயில் அழுக்குத் தலையணையில் தான் படுத்திருப்பதை உணர்கிறாள்...கனவில் வந்த காதலன் யார் என நினைத்துப்பார்க்கிறாள்...

ராஜம் கிருஷ்ணனின் "சலனங்கள்" நாவல் இத்தகைய காட்சி ஒன்றுடன்தான் தொடங்குகிறது. செல்வச் செழிப்பின் சின்னங்களும், ஆடம்பரங்களும், வெளிப்பகட்டுக்களும் மத்தியதரக் குடும்பங்களில் எத்தகைய மனச் சலனங்களை ஏற்படுத்துகின்றன. அதன் விளைவுகள் யாவை என்பவற்றை எல்லாம் இதன் பின் வரும் காட்சிகள் அழகாகவும் ஆழமாகவும் எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளன.

திருமதி ராஜம் கிருஷ்ணன் பெண் நாவலாசிரியர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒருவர்- அன்றாட வாழ்க்கையில் எழும் போராட்டங்கள். அவற்றின் சுற்றுப்புறச் சூழல்களின் பாதிப்புக்கள், அவற்றின் விளைவுகள் ஆகியவற்றையெல்லாம் நுட்பமாகப் பார்த்து. நாவல்களாகவும் சிறுகதைகளாகவும் அவற்றை மாற்றுவதில் வல்லவர். அமுதமாகி வருக, மலர்கள், வேருக்கு நீர், ரோஜா இதழ்கள், இறுதியும் தொடக்கமும் முதலிய இவருடைய நாவல்களைப் படிப்பவர்கள் இதனை உணர முடியும். இவ்வரிசையில் அண்மையில் வந்த அவருடைய நாவலே "சலனங்கள்." மத்தியதரக் குடும்பத்தில் பிறந்து, எந்த நேரமும் செல்வச் செழிப்பான கனவுகளிலேயே மிதந்து, ஓர் இலட்சியவாதியான கணவன் கிடைத்தும் வாழத் தெரியாமல் வாழ்ந்து. தன் வாழ்க்கையையே சோகமயமாக்கிக் கொள்ளும் ஒரு பெண்ணை மையமாக வைத்து இந்நாவலைத் திருமதி ராஜம் கிருஷ்ணன் படைத்துள்ளார். வழக்கமான காதல் கதைகளிலிருந்து மாறுபட்டு, நிகழ்காலச் சமுதாயத்தினையும் அதன் உறுப்பினர்களான இளைஞர்களின் மனப் போக்குகளையும் சற்றுத் துணிவுடனேயே இந்நாவலில் நாவலாசிரியர் சந்திக்க வைக்கின்றார்.

எட்டுக் குடும்பங்கள் சேர்ந்து வாழும் அந்த வீட்டில் மீனாட்சி தன் கனவுக் காதலனை இனங்காண்பதில் அப்படியொன்றும் சிரமப்படுவதில்லை. அந்த வீட்டில் உள்ள மூட்டைப் பூச்சிகளைப் போல் அங்கு வாழ்பவர்களும் அவளுக்குத் தெரிந்தவர்கள்தான். முன்பக்கம் குடியிருக்கும் சாம்பசிவத்தின் மகன் குமாருடைய நண்பன் விஜயனே அவள் கனவுக் காதலன். வசதியாக வாழ்ந்த இளமைக் காலம், அரசாங்கப் பணத்தைக் கையாடித் தந்தை சிறை சென்றபோது சூழ்ந்த வறுமை, அவ்வறுமையிலும் முன்னேற வேண்டும் என்ற துடிப்பு ஆகியவை எல்லாம் தம்பி ராஜன் ஒரு விபத்தில் பலியானபோது மீனாட்சியை அடியோடு மாற்றி விடுகின்றன சாதாரண ஆசைகளைக்கூடப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத ஏக்கம், மனத்தில் பேராசைகளை எழுப்புகிறது. தன் அழகு தனக்கு ஒரு சிறந்த பணக்கார இளைஞனைக் கணவனாகக் கொண்டுவந்து சேர்க்கும் என அவள் உறுதியாக நம்புகிறாள். பொறியியல் வல்லுநனான விஜயன் தன்னை விரும்புகிறான் என்று தெரிந்தபோது தன் நம்பிக்கை வீண்போகவில்லை என்று உணர்கிறாள். அவனுடன் சுற்றுகிறாள். அவனும் தான் ஒரு பெரிய பணக்காரரின் பிள்ளை என்று அவளை நம்ப வைக்கிறான். செல்வத்தில் திளைக்க வேண்டும், அதனை எல்லா வகைகளிலும் அனுபவித்து மகிழ வேண்டும். என்ற தன் கனவுகள் நிறைவேறும் நாளை அவள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்க, விஜயன் பணத்தோடு வந்த ஒரு தொழிலதிபரின் பெண்ணை மணக்க ஒப்புக் கொள்கிறான். செய்தியறிந்த மீனாட்சி துடிக்கிறாள். அவர்களுடனேயே குடியிருக்கும் சுசீலா என்ற ஆசிரியை நியாயம் கேட்க விஜயனின் வீட்டிற்குச் செல்கிறாள். அப்போதுதான் விஜயனும் ஒரு நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற உண்மையும், அவன் படிப்பிற்காக அவனுடைய அண்ணன் ரமணி தன் வாழ்க்கையையே தியாகம் செய்திருக்கிறான் என்ற உண்மையும் அவளுக்குத் தெரிகின்றன. தெரிந்து என்ன பயன்? விஜயனின் தாய் பணக்கார சம்பந்தத்தை விட மனமில்லாமல் சுசீலாவைத் திருப்பி அனுப்பி விடுகிறாள். எனினும் மாறும் உலகின் பிரச்னைகளைப் புரிந்து கொண்ட ஒரு தாயாகவும் அவள் இருக்கின்ற காரணத்தால் மாற்றுத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கின்றாள். அதன்படி மீனாட்சி ரமணியின் மனைவியாகிறாள். அப்போதைக்கு வேறு வழியில்லாமல் இதற்கு ஒப்புக்கொள்கிறாள். திருமணம் நடக்கிறது. நடைமுறை உலகைப் புரிந்து கொண்டு. அதற்கேற்ற இலட்சியங்களை வகுத்துக்கொண்டு அந்த இலட்சியங்களைச் செயலாக்கி வாழ்ந்து வருபவன் ரமணி. மீனாட்சியோ, செல்வச் செழிப்புத் தான் மகிழ்ச்சி என்ற மனப்போக்கை வளர்த்துக் கொண்டவள். திருமணத்திற்குப் பின். தன் பழைய காதலன் விஜயனின் ஆடம்பரமும் பகட்டும் ஒரு பக்கமும்; வரவுக்கும் செலவுக்கும் இடையே இழுத்துப் பிடித்துக்கொண்டு மேலே ஏறவும் முடியாமல் கீழே இறங்கவும் முடியாமல் போராடும் தன் குடும்ப வாழ்க்கை மற்றொரு பக்கமும் அவளை அலைக்கழிக்கின்றன. அதன் காரணமாகக் குடும்ப அமைதி அழிகின்றது. கணவனைத் துச்சமாகக் கருதிப் பழித்துப் பேசவும் அவள் தயங்குவதில்லை. நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவனைத் தன் சொற்களாலேயே குத்திக் கிழிக்கிறாள். விஜயனின் வீட்டிற்கு, நவராத்திரியை முன்னிட்டுச் செல்பவள். ஆடம்பர வாழ்க்கையின் உண்மையைக் காணத் தொடங்குகிறாள். செல்வம் வளர்த்துவிட்ட பழக்க வழக்கங்களால் விஜயனின் வாழ்க்கை பாழாகும் முறை அவள் கண்களைத் திறக்கிறது. கணவனிடம் திருந்திய மனத்துடன் திரும்புகிறாள். இந்த அடிப்படைக் கதையுடன் அமைந்த இந்நாவல், இன்றைய நடுத்தரக் குடும்பத்தின் பல்வேறு நிலைகளையும் எதிரொலிக்கும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகளில் சற்றும் மிகையோ அல்லது குறையோ தோன்றாத வண்ணம், தேவையான நிகழ்ச்சிகள் தேவையான அளவிற்குப் பயன் படுத்தப்பட்டிருப்பது இந்நூலின் தனிச் சிறப்பு எனலாம்.

நாவலின் மைய நிகழ்ச்சிகள் அனைத்தும் மீனாட்சியை ஒட்டியே நிகழ்கின்றன. ஒவ்வொரு கட்டத்திலும் நிகழ்ச்சிகள் அவளைப் பாதிக்கும் முறையும், நிகழ்ச்சிகளை அவள் பாதிக்கும் முறையும் கலையழகோடு இழைக்கப்பட்டுள்ளன. சுற்றுப்புறச் சூழல்களும், ஆடம்பரச் சின்னங்களும் கண்ணுக்குத் தெரியாத வகையில் எங்கெங்கெல்லாம் சென்று தாக்குகின்றன என்பதைச் சம்பவக் கோவை சுவையாக உணர்த்துகின்றது. இந்நிலையில் இவற்றிலிருந்து எப்படி மீள்வது என்பதையும் கதைப் போக்கிலேயே நாவலாசிரியர் நன்கு உணர்த்தியுள்ளார்.

இந்நாவலில் வரும் கதை மாந்தர்கள், சிலரேயாயினும் அனைவரும் உயிரோட்டத்துடன் படைக்கப்பட்டுள்ளனர். மீனாட்சியே இவர்கள் அனைவரையும் ஒரு வகையில் இயக்கும் கதைமாந்தராகக் காணப்படுகிறாள். அவளை ஒட்டிப் படைக்கப்படும் அவளுடைய தந்தை ஜயராமன், ஆசிரியை சுசீலா, விஜயன், ரமணி, ருக்குமணி ஆகியோர் நடுத்தரக் குடும்ப வாழ்க்கையின் சில நிலைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளனர். விஜயன் மனைவி நீலா. செல்வச் செழிப்பில் திளைக்கும் ஒருத்தியாகப் படைக்கப் பட்டிருந்தாலும் அமைதியான குடும்ப வாழ்வையே இறுதியில் விரும்புகிறாள். இம்முறையில், நடைமுறைப் போராட்டங்களுக்கு இடையேயும் ஓர் அன்பு நிறைந்த வாழ்க்கைக்கு வழி காட்டும் வண்ணம் இந்நாவல் அமைந்துள்ளதெனலாம்.

மலேசியமொழித் தேர்வில் வெற்றிபெற... (14)

வெ. ஆறுமுகம்

வெல்க! வளர்க!

கவிதைகளைப் படித்துப் புரிந்துகொள்ளும் ஆற்றலைச் சோதிப்பது ஐந்தாவது கேள்வி. எஸ். பி. எம்., எம். சி. இ. மலேசிய மொழி வினாத்தாளின் ஐந்தாவது கேள்வி, பெரும்பாலும் கவிதையையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

தரப்படும் ஒரு கவிதையைத் தளமாகக் கொண்டு, பற்பல வகையான கேள்விகள் கேட்கப்படலாம். கேள்விகள் பொதுவாகப் பின்வருமாறு அமையும். (வினாத்தாளில் கேள்விகள் எப்படித் தரப்படுமோ அதே அமைப்பில் அடைப்புக்குறிகளுக்குள் கீழே தரப்பட்டுள்ளன).

அ. தரப்படும் கவிதையைப் பொருள் தெளிவாக விளங்குமாறு உரைநடையில் எழுதுதல். (Tuliskan semula sajak ini dalam bentuk prosa supaya jelas maksudnya)

கவிதையை உரைநடையில் எழுதுவது என்பது வேறு, கவிதையை விளக்குவது என்பது வேறு. உரைநடையில் எழுதும் போது, கவிதையையோ-கவிதையின் நயங்களையோ விளக்கி எழுதாதீர்கள். கவிதையில் சொல்லப்பட்ட கருத்துகளை உரைநடையில் சொல்ல வேண்டும்; கவிதையின் கருத்துகள் உரைநடையில் தெளிவாக விளங்க வேண்டும்; அவ்வளவுதான். கவிதையிலுள்ள சொற்களையும், உங்களின் சொந்தச் சொற்களையும் உரைநடையில் பயன்படுத்தலாம்.

ஆ. சொற்களை விளக்குதல். (Terangkan makna perkataan-perkataan yang bergaris dalam sajak di atas mengikut maksud yang digunakan)

தரப்படும் சொல்லின் பொருள் என்ன என்பதைவிட, கவிதையில் அச்சொல் எந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஊன்றிக் கவனித்து, அப்பொருளை விளக்கவேண்டும்.

இ. சொற்களை வாக்கியங்களில் அமைத்தல். (Bagi tiap - tiap perkataan, buat ayat untuk menerangkan bahawa kamu faham maknanya)

தரப்படும் சொற்கள் கவிதையில் எப்படிப் பயன் படுத்தப்பட்டுள்ளனவோ, அந்தப் பொருள் தெளிவாகும்படி நீண்ட வாக்கியங்களில் அமைக்கவேண்டும்.

ஈ. சொற்றொடர்களை விளக்குதல். (Terangkan dengan jelasnya apakah yang dimaksukan dengan.../Apakah yang dimaksudkan oleh penyajak dengan...)

தரப்படும் சொற்றொடர்களை-உவமைத்தொடர்களை-பிற தொடர்களை அவற்றின் உட்பொருள் கெடாதவாறு விளக்கவேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைவிட, கவிஞரின் நோக்கம் என்ன என்பதே இங்கு முக்கியமாகக் கருதப்படவேண்டும். சற்று நீண்ட விளக்கம் கொடுப்பது நல்லது.

உ. கவிதையின் பகுதிகளை விளக்குதல். (Huraikan maksud rangkap yang ke... dan ke... sajak di atas itu)

கவிதையின் குறிப்பிட்ட பகுதிகளின் பொருள் தெளிவாக விளங்குமாறும், அதன் நயங்கள் தோன்றுமாறும், உட்பொருள் இருப்பின் அது வெளிப்படுமாறும் நீண்ட, விரிவான விளக்கம் எழுதவேண்டும். குறிப்பிட்ட பகுதிகளை அப்படியே உரைநடையில் மாற்றி எழுதிவிடுவது விளக்கமாகாது.

ஊ. வினாக்களுக்கு விடை எழுதுதல். (Dengan berpandukan sajak di atas, jawab soalan-soalan ini / Jawab soalan-soalan ini dengan jelas)

கவிதையிலிருந்து எழுப்பப்படும் கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதவேண்டும். கவிதையிலேயே, விடைகளையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்; கவிஞரின் கருத்தையே உங்கள் சொற்களில் விடையாக எழுதவேண்டும்; சொந்தக் கருத்துக்களை எழுதுதல் கூடாது.

எ. கருத்துரைத்தல்.

கவிதையை அடிப்படையாக வைத்து உங்கள் சொந்தக் கருத்துகள் சில வேளை கேட்கப்படும்; நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் எழுதவேண்டும்.

ஏ. கவிதையின் இனம் கூறுதல் (Apakah jenisnya puisi di atas itu dan nyatakan sebab-sebabnya mengapa kamu katakan demikian)

மலாய்க் கவிதைகள் Pantun, Syair, Sajak, Gurindam எனப் பலவகைப் படும். எல்லா இனங்களையும், அவற்றின் சிறப்பியல்புகளையும் வேறுபாடுகளையும் நீங்கள் அறிந்திருக்கவேண்டும்; அறிந்திருந்தால் தரப்படும் கவிதை எந்த இனத்தைச் சேர்ந்தது என்பதையும் அதற்கான காரணங்களையும் எளிதாகச் சொல்லிவிடலாம்.

மேலே காட்டப்பட்ட எட்டு வகையான கேள்விகளும் ஒரே வினாத்தாளில் தரப்படா, ஒரு கவிதையை ஒட்டி இரண்டு, மூன்று கேள்விகள் தரப்படுவதே வழக்கம்.

கவிதைகள் படிப்பதில் இயல்பாகவே ஆர்வம் உள்ளவர்களுக்கு ஐந்தாவது கேள்வி கைகொடுக்கும்; நிறையக் கவிதை படிக்காதவர்கள், கவிதையைத் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடலாம். எனவே, தீர யோசித்த பின்னரே இந்தக் கேள்வியைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

தொடர்ந்து பதின்மூன்று இதழ்களில் இடம்பெற்றுவந்த "மலேசிய மொழித் தேர்வில் வெற்றி பெற..." என்னும் இக்கட்டுரைத் தொடர், பதினான்காவது கட்டுரையோடு இந்த இதழில் நிறைவு பெறுகிறது.

எஸ். பி. எம்., எம். சி. இ. தேர்வு எழுதவிருக்கும் மாணவ மாணவியருக்கு ஓரளவேனும் பயன்படக்கூடும் எனும் நோக்கிலேயே இக்கட்டுரைத்தொடர் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

மலேசியமொழியில் மட்டுமன்றி எல்லாப் பாடங்களிலும் நீங்கள் சிறப்புத்தேர்ச்சி பெறவேண்டும்; முதல்நிலையில் தேறவேண்டும். அடுத்த ஆண்டு ஆறும் படிவத்தில் (எஸ். டி. பி., எச். எஸ். சி) படிக்க இடத்தைப் பெறவேண்டும். அதிலும் வெற்றிபெற்று பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி பெற வேண்டும். இன்றைய நிலையில் இதுதான் கல்வியின் நோக்கம்; உங்களின் நோக்கமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

முழு நம்பிக்கையோடு, உயரிய நோக்கத்தோடு, ஒருமித்த மனத்தோடு தேர்வு எழுதுங்கள்!

இறையருள் வேண்டுங்கள்!

வெற்றி பெறுவீர்கள்!

வெல்க! வளர்க!

எழுச்கு

இருந்த இடம்





உதிக்க திங்கே ஓர்புதிய கதிரோட்டம்
ஒளியைக் காட்ட!
உதிக்க திங்கே ஓர்புதிய திறமேன்மை
உரத்தை யூட்ட...!
உதிக்க திங்கே ஓர்புதிய திசைகாட்டி
உயர்வைக் கூட்ட!
உதிக்க திங்கே ஓர்புதிய சமுதாயம்
உணர்வும் சேர்த்தே!

எழுந்த துள்ளம் ஏற்றமிகும் ஒளிக்கீற்றில்
திருநீள நீத்தே!
எழுந்த துள்ளம் எதிலரை யுறவாக்கி
இயக்கம் பூண!
எழுந்த துள்ளம் சட்டிநல வளவாழ்வை
இசைந்து காண!
எழுந்த துள்ளம் சங்கினிய வழிகாட்டி
இணைந்த தென்றே!

சிறந்த தின்றே சேர்ந்தோர்கள் படைக்கின்ற
திறமும் வென்றே!
சிறந்த தின்றே தேவைகளை விளைக்கின்ற
செறிவும் நன்கே!
சிறந்த தின்றே சீரான மலைநாட்டின்
செழிப்பு மிங்கே!
சிறந்த தின்றே தீபவொளி வழிபாட்டில்
திருவும் நன்றே!

-சி. அன்பானந்தம்

உலகத்து நாடுகளில் உரிமைக் காக
உயிரைத்தான் தருகின்றான் பணய மாக!
பலகற்றும் பகையற்று வாழ்வு தற்குப்
படைத்தாரோ நமைக்கடவுள்? மரங்கள் கூட
இலைகொட்டித் துளிர்ப்பதுண்டு; தமிழன் என்னு
இனம்மட்டும் உயராமல் தாழ்வ தேனோ?
கலைஎட்டுத் திசையெல்லாம் விரிந்து நீளும்!
கதைமட்டும் கண்ணீரால் நனைந்து மீளும்!

நம்வியர்வை இந்நிலத்தில் சிந்தி னோமே,
நாமுயர இனநலத்தை எண்ணி னோமா?,
நம்மயர்வை நாம்மறந்து நலம்செய் தோமே,
நம்துயரை எவரேனும் எண்ணி னாரா?
நம்முழைப்பை நெஞ்சொடியத் தந்து தந்தே
நாமெல்லாம் நலிந்தோமே நாய்க்கும் கீழா
"இம்" மெனுமோர் குரலுக்குக் காத்துக் காத்து
இழிந்தோமே, அதன் பின்னும் இருந்தி...

வாழத்தான் விரும்புகிறோம் நாமும், ஆனால்
வழியோரச் சிறுபுல்லாய் சோற்றுக் காக
விழத்தான் வேண்டுமெனில் காலில் வீழ்வோ
விதிநோவோம் சமுதாய விழிப்புக் கொள்
ஆழத்தால் அகலத்தால் கூர்மை நோக்கால்
அடக்கத்தால் உயர்ந்தஇனச் சிறப்பை எ
வேழத்தை வெற்றிகொளும் வீரம் அன்று!
வெட்கமடா. கொசுவுக்கும் சாவோம் இ

கப்பலிலே ஏறிவந்த அன்றே நாமும்
கைவிட்டோ மேஉயர்ந்த மானம் தன்
குப்பைவண்டி இன்றானோம்! வாய டைத்து
குமுறுகற்றும் வகையற்றுப் போய்விட்
இப்படியே நம்மினத்தின் எதிர்கா லந்தான்
இருக்குமெனில் உலகத்தில் தமிழ மக்க
எப்பிறவி எடுத்தாலும் ஏற்றம் காணார்!
இந்தஇனம் இருந்தஇடம் மறைந்தே

டி. எஸ். பெ

உரிமை



நீருகிடு



இதுதான் உலகம்
இதுதான் மனிதம்
இதயம் இல்லாதது -நெஞ்சில்
ஈரம் இல்லாதது -(இதுதான்)

கொடுத்தால் தழுவும்
விடுத்தால் மறையும்
குணத்தை அறியாதது -நல்ல
மணத்தை நுகராதது -(இதுதான்)

நன்றிக் குரித்தாய்
நாயைப் போற்றும்
நன்மை தெரியாதது-நல்ல
தன்மை உணராதது -(இதுதான்)

உண்மை மறந்து
பொய்மை புனைந்து
வன்மை கொண்டாடுது -பொது
நன்மை துண்டாடுது (-இதுதான்)

திருவாய்த் தோன்றும்
தேவே, மனிதம்
திருந்த வழிகாட்டிடு -அன்றி
எரிந்து நீருகிடு!

ரா. ஆ. அன்பானந்தன்

கூவுங் குயிலொலி கேண்மின்! — அது
கூறும் நியதிகள் தேர்மின்!
யாவும் விடுதலை நாதம்! — அது
யார்க்கும் எழும்பெருந் தாகம்!

காலைக் கதிரினைப் போல — ஒளி
காட்ட முனைந்திடும் கோலம்!
சோலைக் குளிரினைக் கொண்டு — அது
சொல்ல நினைப்பது கோடி!

ஆழ்ந்த உறக்கத்தில் வீழ்ந்து — அறி
யாமை மயக்கத்தில் தாழ்ந்து
சூழ்ந்த பெருமைகள் யாவும் — பல
சுக்கலாய்ப் போனது பாரும்!

அஞ்சி நடத்திடும் வாழ்க்கை — அட.
ஆமை எனவுனை ஆக்கும்!
கெஞ்சிக் கிடப்பதும் வாழ்வா! — சீ.
கீழ்மைச் செயலது ஓர்வாய்!

ஆண்மை இழந்தொரு வாழ்வா? — நீ
அடிமையாய் ஆவது மேலா?
பான்மை சிதைந்ததோர் ஓவம் — யார்
பார்வைக் கதுவுயர் வாகும்?

காலைப் பிடிப்பதால் வார்க்கும் — நொய்க்
கஞ்சி குடிப்பது கீழ்மை!
கூழைக் குடிப்பதும் மேன்மை — நீ
கூனல் இலையெனும் போது!

நெல்லில் பதரினைப் போல்வார்! — நேர்
நின்றே உரிமையைக் கேளார்!
உள்ளிலே பேடிமை ஆட்சி — உன்
உய்வைக் கெடுப்பதை எண்ணு!

மூடும் கடும்பனிப் போர்வை — அனல்
மூட்டின் அதுவெறும் வேர்வை !
ஆடும் திமிரெலாம் ஓயும் — நீ
அஞ்சாப் புலியெனப் பாய்ந்தால்!

மாட்டும் விலங்குகை ஏற்று — நீ
வாழ நினைப்பதா தூ! தூ!
வாட்டும் வறுமைக்கே ஏழை! — பண
வஞ்ச நரிக்குமுன் செல்வன்!

காலங் கடந்திடும் முன்னே — பிறர்
காரி உமிழ்ந்திடும் முன்னே
வேழம் நிகர்த்திடும் வாழ்வை — நீ
வேண்டிச் செயல்தொடு இன்றே!

வீரமான்

!
மா?
ளாம்!
ணும்!
று!
டாமே!
கும்!
னுசாமி

தடுப்பூசிகள்

நம் குழந்தைகளுக்கு இளம் பிள்ளை வாதம், கக்குவான், காசம், அம்மைநோய், டிப்தீரியா (சுவாசக் குழாயை அடைக்கும் நோய்) போன்ற கடுமையான நோய்கள் வராமலிருக்கவும், தடுக்கவும், பெற்றோர்கள் அவர்களுக்குத் தடுப்பூசிகளைப் போடுவதைப்பற்றி அதிக அக்கறை கொள்வதில்லை.

சுகாதார சேவை ஏற்படுத்தியதிலிருந்து தடுப்பூசி போடுவதற்கான சேவை வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும், கிராமப்புறங்களிலே (தோட்டப்புறங்களையும் சேர்த்து) இருக்கும் பெற்றோர்கள் குறைந்த அளவிலே தம் குழந்தைகளுக்குத் தடுப்பூசிகளைப் போடுகின்றனர்.

இந்த நிலைமையை நிவர்த்திக்க பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எந்தெந்த வயதினில் தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்பதை கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை முறையோடு பின்பற்றுக:—

தடுப்பூசிக்கான அட்டவணை

வயது	தடுப்பூசி	எதிர்க்கும்/நிவர்த்திக்கும் நோய்
1. பிறந்த உடனேயே	பிசிஜி (BCG)	காசநோய்
2. இரண்டாவது மாதம்	டிரிப்பிள் எண்டிஜென் (முதல் ஊசி) போலியோ (வாய் மூலம்) முதல் தடவை →	கக்குவான் டிப்தீரியா (சுவாசக் குழாயை அடைக்கும் நோய்) நோய்க்கிருமியைக் கொல்வது (துருப்பிடித்த ஆணி, புண்ணில் நோய்க்கிருமி பரவாமல் தடுப்பது) இளம் பிள்ளை வாதம்
3. மூன்ருவது மாதம்	டிரிப்பிள் எண்டிஜென் (இரண்டாவது ஊசி) போலியோ (இரண்டாவது தடவை)	
4. நான்காவது மாதம்	டிரிப்பிள் எண்டிஜென் (மூன்ருவது ஊசி) போலியோ (மூன்ருவது தடவை)	
5. ஐந்தாம் ஆரும் மாதம்	அம்மை தடுப்பூசி (முதல் ஊசி)	
6. ஒன்றரை/ இரண்டாவது வருடம்	டிரிப்பிள் எண்டிஜென் (மீண்டும் ஒருமுறை) போலியோ (மீண்டும் ஒருமுறை)	
7. ஆரம்பப்பள்ளி நுழைவு வயதினில்	பிசிஜி (முன்னைய வடு இல்லையென்ருல் அல்லது நோய் வரும் என்று சந்தேகித்தால்) அம்மை ஊசி (மீண்டும் ஒருமுறை) டபள் எண்டிஜென் (டிப்தீரியா & நோய் அணு கொல்வதற்காக மீண்டும் ஒரு தடுப்பூசி) போலியோ (மீண்டும் ஒருமுறை)	
8. உயர்நிலைப் பள்ளியை விட்டு விலகும் வயதினில்	அம்மை ஊசி (மீண்டும் ஒரு முறை) டெடெனஸ் தோக்சைட்	(மீண்டும் கிருமி தடுப்பூசி)

—நன்றி: "குடும்பசஞ்சிகை"

வீடே உலகம்

வீட்டைச் சுற்றினுல் உலகத்தைக் காணலாம்! வீடே சிறிய உலகம் என்பதை ஒவ்வொருவரும் நினைப்பதே இல்லை. இதை நாம் மன நிம்மதியுடன் அமர்ந்து நிதானமாக யோசிப்போமானுல் கீழ்க்காணும் உண்மைகள் நன்கு புலப்படும்.

1. வீட்டில் பத்துப் புத்தகங்கள் இருந்தால் அது நூல் நிலையம்.
2. மூன்று படங்கள் இருந்தால் அது ஒரு சின்னக் கண்காட்சி சாலையாக அமைகிறது.
3. ஆறுவிதக் கருவிகள் வீட்டில் வைத்திருந்தால் அது தொழிற்சாலை.
4. ஓர் அலமாரியினுள் நமக்கு உதவாத கண்ட சாமான்களையும் போட்டு வைத்திருந்தால் அது ஒரு கிடங்கு.
5. வீட்டில் தம்பூராவையோ, வீணையையோ, பிடிலையோ, ஆர்மோனியத்தையோ எப்பொழுதும் உபயோகித்துக் கொண்டிருந்தால் அதை இசை அரங்கு எனலாம்.
6. ஒரு குழந்தைக்குக் கடவுளைப் பற்றிய கேள்விக்குப் பதில் சொல்லும்போது ஆலயத்தில் இருப்பது போன்ற நெகிழ்ச்சி ஏற்படுகிறது.
7. காரசாரமான விவாதம் நடத்தும்போது வீடு நீதிமன்றம் ஆகிறது.
8. நோயாளிகள் இருப்பின் அதை மருத்துவமனை என்று கூறலாம்.
9. மறந்துபோன கடிதம், படங்கள், கல்யாணத்தின் போது வந்த பரிசுப் பொருள்கள் முதலியவற்றை எதிர்பாராத இடங்களில் கண்டுபிடித்தால், புதை பொருள் ஆராய்ச்சியில் கண்ட மகிழ்வை உணரலாம்.
10. குழந்தைகள் மரம் ஏறினுலோ, வேலியைத் தாண்டி அல்லது துணிச்சலாக என்ன செய்தாலும் அது ஒரு ராணுவப் பயிற்சிக் கூடம் ஆகிறது.

—க. திலகராஜா,
கங்கார்

மருதுபாண்டியன் பரம்பரையின் ஆறாவது வாரிசு

பேட்டி: ராமநாதன் மனோகரன்



தற்காலத்து நாடகக்கலையைப் பற்றிப் பேசும்போதெல்லாம் சிலர் பெர்னாட்ஷாவையும், இப்ஸனையும், யூஜின் ஓநீலையும் நினைத்துப் பெருமைப் பட்டுப் பேசிக்கொள்வதுண்டு. "தமிழிலே என்னதான் நாடகம் போட்டாலும் ஒரு பெர்னாட்ஷாவுக்கும், இப்ஸனுக்கும், ஒரு யூஜின் ஓநீலுக்கும் ஈடாகுமா?" என்று பிதற்றுபவர்களுக்குச் சவாலாக, நம்மிடையேயும் இருக்கிறார் ஓர் இசை நாடகத் திலகம்!

ஹரிச்சந்திரா, வள்ளி திருமணம், பவளக்கொடி, நந்தனார் போன்ற நாடகங்களைப் பார்த்ததின் பயனாக, இசை நாடகத் திலகம் உடையப்பா உருவில் நம்மிடையேயும் ஒரு பெர்னாட்ஷா இருக்கிறார், ஒரு இப்ஸன் இருக்கிறார், இன்னும் யூஜின் ஓநீலும் இருக்கிறார் என்ற எண்ணம் தோன்றியது.

தமிழகத்தில் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சிவகங்கை மாநகரை ஆண்டுவந்த மருது பாண்டியர்களின் ஆறாவது வாரிசுக் குடும்பத்தைச் சேர்ந்த உடையப்பா 1930-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாளில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வேலாரேந்தல் என்ற கிராமத்தில் ராஜகுடும்பத்தைச் சேர்ந்த வெள்ளைச்சாமி தேவருக்கும், மீனாட்சி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார்.

தமது இளம் பிராயத்திலேயே தமிழர்களின் வீரவிளையாட்டான மஞ்சு விரட்டு, சிலம்பம், குஸ்தி போன்ற விளையாட்டுக்களில் பெரிதும் ஈடுபாடு காட்டிவந்த உடையப்பா, பயமறியாத சிறுவயதில் நல்ல பாம்புகளைப் பிடித்து அனாயசமாக விளையாடுவதைக் கண்டு அனைவரும் வியந்ததுண்டு. அந்த விளையாட்டை இன்னும் அவர் மறக்கவில்லை-தமது நாடகங்களில் இன்றும் உண்மையான நல்ல பாம்புகளையே பயன்படுத்தி நடிக்கிறார்.

நாடகங்களில் மட்டுமல்லாது "தசாவதாரம்" திரையில்சிவனாகவும், "முத்தான முத்தல்லவோ" படத்தில் சுஜாதாவின் தந்தையாகவும், "தாய் வீட்டு சீதனம்", "சுவாதி நட்சத்திரம்" போன்ற திரைப்படங்களில் வில்லனாகவும், "பாலாபிஷேகம்" என்னும் புதுப்படத்தில் குருக்களாகவும் தோன்றி நடித்திருக்கிறார் உடையப்பா

தமிழக முதல்வர் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். இவரது நாடகத்தைக் கண்டு உளம் மகிழ்ந்து பாராட்டி ரூபாய் 2,000 பணமுடிப்பும் அளித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது! அண்மையில் "புதிய சமுதாயம்" இதழுக்காக இசை நாடகத் திலகத்தைப் பேட்டி கண்டேன்.

கேள்வி: நீங்கள் நடித்த முதல் நாடகம் எது? அப்போது உங்களுக்கு என்ன வயதிருக்கும்?

பதில்: எனது ஒன்பதாவது வயதில்தான் முதன் முறையாக பால முருகன் வேடமிட்டு "வள்ளி திருமணம்" என்ற நாடகத்தில் நடித்தேன்.

கே: உங்கள் ஆரம்பகால நாடகப் பிரவேசத்தைப் பற்றிச் சிறிது விவரம் சொல்லுங்கள்.

ப: எனது ஒன்பதாவது வயதில் நாடக ஆசிரியர் குடியூர் கனகசபாபதிப் பிள்ளை அவர்களிடம் நாடகம் பயின்று நடிப்பார்வத்தை வளர்த்துக் கொண்டேன். அதன்பிறகு காலஞ்சென்ற நடிகர் டி. எஸ். பாலையா அவர்களின் நாடகசபாவில் ஏழு வருடம் நடித்துவந்தேன். மற்றும் பல நாடக மன்றங்களிலும் நடித்திருக்கிறேன். மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பான "வளையாபதி" தமிழ்ப்படத்தில் நாயக வேடத்தில் நடித்து 3 ஆயிரம் அடி படம் வளர்ந்த நிலையில் எனக்கு மலேரியா ஜுரம் வந்து கடுமையாகப் பாதிக்கப்பட்டதால் அந்தப் படத்தில் தொடர்ந்து நடிக்க முடியாமல் போய்விட்டது.

நானே தயாரித்தேன்!

1955-ஆம் ஆண்டிற்குப் பிறகு நானே நாடகங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டேன். தமிழ் நாடகத் தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய நாடகங்களை நடிக்க ஆரம்பித்தேன்.

கே: நாடகத் துறையில் யாரையாவது உங்கள் முன்னோடியாக நீங்கள் நினைத்ததுண்டா?

ப: நான் இதுவரையில் அப்படி யாரையும் பின்பற்றி நடிக்கவில்லை. என் குருநாதர் காட்டிய வழியையும் என் அனுபவ அறிவையையும் துணையாகக் கொண்டே நடித்து வருகிறேன்

கே: நீங்கள் நாடகங்களில் நடிப்பது ஆத்மதிருப்திக்காகவா அல்லது வருமானத்திற்காகவா?

ப: சிக்கலான கேள்வி; ஆத்ம திருப்தியும் இருக்கிறது. அதேநேரம் ஜீவாதாரமும் என் கொள்கையும் அதில் இருக்கின்றன.

கே: "நடிப்புத் தொழிலுக்கு வரவேண்டுமென்ற விருப்பமுடையவர்கள் பலர். தங்களுடைய வாழ்க்கையைத்தான் பாழாக்கிக்கொள்கிறார்கள்!" என்று நடிகர் சோ சொல்லியிருக்கிறார். நீங்கள் இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா?

ப: தன்னால் சுமக்க முடிந்ததை மட்டுமே சுமக்க வேண்டும். சுமக்க முடியாததை இறக்கி வைத்து விடுவதைப் போல, தனக்குத் தகுதியில்லை என்பதை ஒதுக்கிவிடுவது சமுதாயத்திற்கும் நல்லது. இது கவர்ச்சிமிக்க ஒரு தொழிலாக இருப்பதால் பல

ருடைய கவனம் இத்துறைக்கு ஈர்க்கப்படுகிறது. அதனால் ஏற்படுகிற சரிவின் காரணத்தை வைத்து நடிப்புக் கலையைக் குறைகூறக் கூடாது என்பதே என் கருத்து.

கே: உங்கள் நாடகங்கள் ஏதும் திரைப்படமாகி வெளிவந்துள்ளனவா?

ப: அரிச்சந்திரா கதையை இப்பொழுதுதான் திரைப்படமாக்கி வருகிறார்கள். "தாய் விட்டுச் சீதனம்" படத்தை எடுத்து வெளியிட்ட என் சகோதரர்கள் மாயாண்டித் தேவரும், சேரமானும்தான் இதைத் தயாரிக்கிறார்கள். தமிழ்த் தம்பி எனும் புதிய எழுத்தாளர் வசனம் எழுத, எஸ். பி. முத்துராமன் டைரக்ட் செய்து வருகிறார். இதில் கே. ஆர். விஜயா என்னுடன் நாயகியாக நடிக்கிறார்.

கே: சமுதாயத்தைக் கெடுக்கும் தீய உள்நோக்கங்களைக் கொண்ட திரைப்படங்களை இன்று சிலர் தயாரித்து வெளியிட்டு லாபமும் கண்டுவருகிறார்களே, உங்கள் அபிப்பிராயமென்ன?

ப: இதுபோன்ற படங்கள் சமுதாயத்திற்குத் தீங்கையே விளைவிக்கும். தெய்வம் நின்று கேட்கும். அரசு அன்று கேட்கும். அதனால் அந்தந்த நாட்டு அரசு, இதுபோன்ற படங்களைக் கண்டிக்கவேண்டும்; தடை செய்யவேண்டும்.

கே: தங்களுக்கு ஓரளவு அரசியல் அபிமானமும் உண்டு என அறிகிறேன். எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். மந்திரி சபைக்கு தி. மு. க. வினால் ஆபத்து வருமா?

ப: துணிவான கேள்வி! ஆனால் பதில் சொல்லத்தான் சிரமமாக இருக்கிறது!

கே: எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் மீண்டும் ஒன்றுசேரும் வாய்ப்பாவது ஏற்படுமா?

ப: யாரும் காலத்தால் பதவி இழக்கலாம். பிறகு அதே பதவிக்கும் செல்லலாம். எம்.ஜி.ஆருக்கும் கருணாநிதிக்கும் மிகக் காரசாரமாக மோதல்கள் ஏற்படுமென்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் கருத்துப் பரிமாறிக்கொள்கிறார்கள். கட்டித் தழுவிக் கொள்கிறார்கள். ரகசிய சந்திப்பெல்லாம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இதையெல்லாம் அலசிப் பார்க்கும்போது அ.தி.மு.க.வும் தி. மு. க வும் எதிர்காலத்தில் ஒன்றுவிட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே நினைக்கிறேன்.

கே: உங்கள் நாடகங்கள் அனைத்துமேபெரும்பாலும் தெய்விக முறை-யை அடிப்படையாக வைத்தேஉரையாடல்கள், காட்சி அமைப்புகள் உள்ளனவே? இதற்கு என்ன காரணம்?

ப: இன்றைய நம் சமுதாயத்தில் வேகமாக ஏற்பட்டுவரும் அவசிய மற்ற கோட்பாடுகளையும், மாறுதல்களையும் நான் கண்டு வருகிறேன். ஜன சமூகத்தைச் சீர்திருத்த, விஞ்ஞான வளர்ச்சியினால் எந்தக் காலத்திலும் முடியாது! மெய்ஞ்ஞான வழியில்தான் உலகமும், மக்களும் அமைதிபெற முடியும். இறைவழிபாட்டின் வழியாக வருகின்ற மக்களிடத்தில்தான் ஒழுக்கம், நேர்மை, சத்தியம் இவற்றைக் காண முடியும். இதனாலேயே என் நாடகங்கள் தெய்விக முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

கே: உங்கள் எண்ணத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். கல்கி ஆசிரியர் அமரர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறியிருப்பது போல 'ஜன சமூகத்தைச் சீர்திருத்த விரும்புகிறவன் கையாள வேண்டிய சாதனம் நாடகமேயாகும்!' சரிதானே?

ப: நன்றாகச் சொன்னீர்கள். பாட்டும் பரதமும், பண்புள்ள நாடகமும் நாட்டிற்கு நல்ல பயன் அளிக்கும் என்பதில் அடியேனுக்கு நிரம்ப நம்பிக்கையுண்டு.

யூல் பிரைனர்!

கே: அடுத்து நான் கேட்கப் போகும் கேள்வியைக் கண்டு கோபித்துக் கொள்ளாதீர்கள்...! அதாவது உங்களுடைய மொட்டைத் தலையைப் பார்த்ததும் எனக்கு மேல்நாட்டின் புகழ்மிக்க நடிகரான யூல் பிரைனர் நினைவுக்கு வருகிறார். நீங்கள் இந்தக் கோலத்தில் இருப்பதற்கு என்ன காரணம்?

ப: இதுவரையில் மற்ற மலேசியத் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைவைக்காத இடத்தில் நீங்கள் கை வைத்துவிட்டீர்கள். நீங்கள் எந்த மேல்நாட்டு நடிகரைக் குறிப்பிட்டீர்களோ அவர்தான் என் தலை மொட்டையானதற்கும் காரணம் என்றால் உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். 1967-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் "டென் கமாண்ட் மென்ஸ்" (பத்துக் கட்டளைகள்) ஆங்கிலப் படத்தைப் பார்த்தேன். அதில் யூல் பிரைனரின் உன்னதமான நடிப்பு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவருடைய ஸ்டில்களைப் பார்த்தபோது அவரைப் போலவே மொட்டைத் தலையுடன் காட்சியளிக்க வேண்டுமென்ற ஓர் உத்வேகம் எனக்கு ஏற்பட்டது. அதற்குத் தோதாக என் நண்பர்களும் ஆலோசனை கூறினார்கள். அன்றிலிருந்து இந்தப் 10 ஆண்டுகளாக நான் இப்படி இருக்கிறேன். என் நண்பர்கள் என்னைத் "தமிழ் நாட்டு யூல்பிரைனர்" என்றே செல்லமாக அழைக்கிறார்கள்.

கே: உங்களுக்குப் பச்சிலை இயற்கை வைத்தியம் போன்றவையும் தெரியுமென்று கேள்விப்பட்டேன். அதுகுறித்துச் சற்று விளக்கம் தரமுடியுமா?

ப: ஏதோ என் குலதெய்வத்தை நான் மனப்பூர்வமாக வணங்கி, பச்சிலை மூலிகைகளைச் சிலருக்குத் தந்து அவர்கள் குறைகளைப் போக்கியுள்ளேன். புற்றுநோய்- தொழுநோய் ஆரம்பக் கட்டமாக இருந்தால் அதனை முற்றாகக் குணப்படுத்திக் காட்டுவேன். அந்தத் தைரியம் எனக்கு இருக்கிறது. செட்டி நாட்டைச் சேர்ந்த ஆர். கே. பி. சோமசுந்தரம் செட்டியாரும் அவர் மனைவியும் பல ஆண்டுகளாகக் குழந்தையில்லாமல் கவலைப்பட்டிருந்தனர். அவர்கள் பார்க்காத வைத்தியமில்லை. போகாத கோயிலில்லை. நான் வழிபடும் தெய்வத்தை நினைத்து, அந்த அம்மாளுக்கு மகாலிங்கம் மலையிலுள்ள ஒரு மரப் பட்டை மூலிகையைக்கொடுத்தேன். இப்போது அவர்களுக்குக் குழந்தை பிறந்து மகிழ்வோடு இருக்கிறார்கள்.

21 குடும்பங்கள்!

கே: மகப்பேற்றுக்காக ஏங்கித் தவிக்கும் தம்பதிகள் மலேசியாவில் யாரேனும் இருந்தால் அவர்களுக்கு உங்களால் அந்த மூலிகையைக் கொடுத்து அவர்களின் குறையைப் போக்க முடியுமா?

ப: தாராளமாகச் செய்கிறேன். அந்த மூலிகையைக் கையோடு கொண்டும் வந்திருக்கிறேன். அப்படிப்பட்ட குறையுள்ள தம்பதிகளுக்குச் சேவை செய்து அவர்கள் குறையை நீக்கி வைப்பதைப் பெரும் பாக்கியமாகவும் நான் கருதுகிறேன்.

கே: நீங்கள் கொடுக்கும் அந்த மூலிகைக்கு அவர்கள் ஏதும் கட்டணம் செலுத்த வேண்டி இருக்குமா?

ப: இதற்கு எந்தவிதமான ஊதியமும் எனக்கு அவர்கள் கொடுக்க வேண்டாம். இவ்வாண்டு நவம்பர் மாதம்வரையில் ராஜலிங்கம் புரடக்ஷன் உரிமையாளர் திரு. ராஜலிங்கம் அவர்களுடைய வீட்டு முகவரியில்தான் தங்கி இருக்கிறேன். மகப்பேறு இல்லாத தம்பதிகள் என்னை வந்து சந்திக்கலாம்.

கே: உங்களுக்கென்று ஏதேனும் தனிப்பட்ட கடமைகள் இருக்கின்றனவா?

ப: எனக்கு மனைவியும் (திருமதி சரளா), 5 குழந்தைகளும் இருக்கிறார்கள். என் நாடகக் குழுவைச் சேர்ந்த 21 குடும்பங்களும் என்னை நம்பியே இருக்கிறார்கள். அவர்களை நல்லபடி காப்பாற்றுவது என் கடமை. மற்றபடி எனக்கென்று எதுவுமில்லை. வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால் நான் காவிகட்டாத ஒரு சன்னியாசி.

விசுவாசி

'மக்களின் தன்மானத்தைப் பாதிக்கும் வண்ணம் அவர்களைக் குறைகூறுபவனும், வீண் பழி சுமத்துபவனும், வாயாடித்தனமாகப் பேசுபவனும் பூரண விசுவாசியாகிவிடமாட்டான்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

-அல்ஹதீஸ்

களத்துத் தமிழ்



வே. அ. சிவஞானம், கொழும்பு

பரந்துபட்ட பச்சைப் பசேலென்ற வயல்வெளிகள். அதனைச் செழுமைப்படுத்த வளங்கொண்ட நதிகள். நதி நீர் தேங்கும் குளங்கள், வாவிகள், கரைகளிலே சுதந்தரமாக உலவும் கால்நடைகள். இவையனைத்தும் அங்கு வாழ் உழவர்களின் வற்றாச் செல்வங்கள். இதுதான் ஈழத்தின் கீழ்க்கரை-மட்டக்களப்பு.

உழவன் மகன் உழவனுகப் பெருகி வாழ்ந்த கிழக்கிலங்கைத் தமிழர்கள், உழைப்பிலும் ஓய்வு நேரங்களைக் கூத்து, விலாசம் என்னும் ஆடலரங்குக் கலைகளிலும் களித்து மகிழ்ந்தனர். நாலுமாதங்களை வயல் வெளி உழைப்பிலும் மீதி எட்டு மாதங்களைக் கலைநிகழ்ச்சிகளிலும் உல்லாசமாகக் கழிப்பர். கடினமான உழைப்பின் பயனுக்குப் பாத்திரமானவள் பூமாதேவியே. பூமாதேவியின் அனுக்கிரகத்தை நம்பியே அங்கு உழவர்கள் வாழ்கின்றனர். இதனாலேயே பூமாதேவியை மனமாரவேண்டி சதா வழிபடும் கிழக்கு ஈழத்தவர்களுக்கு - உழவர்களுக்கு - நம்பிக்கை குலையாவண்ணம் பூமாதேவியும் அருள் புரியவே செய்கிருள்.

உழவர்களின் உழைப்பின் உச்சம், சூடு அமைப்பதிலேயே தங்கி இருக்கிறது. நெற்கதிர் மணிகளையும் பதர்களையும், வைக்கோலையும் பிரிக்கும்போதே உழவன் பாடுபட்டதன் பயன் தெரியும். ஆகவேதான் சூடு மிதிக்கும் பொழுது உன்னத பலனைப் பெறப் பரிசுத்தமான, புதுமையான ஒரு சில சொற்பிரயோகங்களைப் பேசுகிறார்கள். இப்பிரயோகத் தமிழைத்தான் "களத்து மொழி" எனக் கூறுவர்.

இக்களத்து மொழி பேசும் கிழக்கு ஈழத் தமிழர்களின் பேச்சுத் தமிழும் ஒரு தனித்தன்மையது; சங்க காலத் தமிழ்ச் சொற்களைக்கூட பேச்சுத் தமிழில் கொண்டது. மலாய் மொழியில் "லா" என்னும் அசை இறுதியில்ஒலிப்பதுபோல"கா" என்ற அசைச்சொல் கிழக்கிலங்கைத் தமிழர் பேச்சு வழக்கில் வருவதைக் காணலாம். இந்த "கா" என்ற அசைச்சொல் சங்க கால இலக்கியத்துள் அமைந்ததாகும். இத்தகைய சங்கத் தமிழ், கிழக்கிலங்கைத் தமிழரின் பேச்சு நடையில் உலவுகிற தென்றால் தமிழுக்கு எத்துணை பெருமை தருவதாகும்.

காப்பியனர் தமது தொல்காப்பியச் சூத்திரத்தில் "யா, கா பிற, பிறக்கு, அரோ, போ, மாது என வருஉம், ஆயேழ் சொல்லும் அசை நிலைக் கிளவி" என்று கூறுகிறார். இவ்வாறு சங்க காலப் பெருமையுள்ள இப்பேச்சுத் தமிழ் அங்கு வாழ் தமிழர்களின் வாய்க்கு வாய்ப்பாட்டான (எழுதாக் கவிதை) நாட்டுப் பாடலிலும் பரவி இருக்கக் காணலாம்.

ஒருத்தி: புள்ள லெக்கா! புள்ள லெக்கா, புருஷன் எங்கே போனது கா.

மற்றவள்: கல்லூட்டுத் திண்ணையில கதை பழகப் போனது கா.

இலங்கையிலும் மலேசியாவிலும் சாதாரண பொருட்களைக் காவு தடியில் வைத்துத் தூக்கிச் செல்வதைக் காணலாம். இலங்கைச் சிங்களச் சமூகத்தினர் இத்தடியைக் "கத" என்று கூறுவர். இதனைக் கிழக்கிலங்கைச் சாதாரண வழக்கில் "கா" என்றுதான் அழைப்பர். இவ்வூர்ப் பெண்களே "கா"வின் எச்ச அசையை அதிகமாகப் பேசுவர்.

இதைக்கண்ட நகைச்சுவைக் கவிதை மன்னன் யாழ்ப்பாணத்து கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள், "ஆடவர் தோளிலும் கா. அரிவையர் நாவிலுங் கா" என நயம் பெறப் பாடி உள்ளார். "கா" அசைபோடும் பேச்சு வழக்கு களத்திலே பேச மாட்டார்கள். சூடு மிதிக்கும்போது "களத்துத் தமிழி"லேயே உரையாடுவார்கள். உழவர்க்குக் களத்துத் தமிழ் கைவந்த மொழி.

சூடு மிதிக்கும் விதத்தைக் கவனிப்போம். முதலில் தேர்ந்தெடுத்த திட்டியான நிலத்தில் பூதகணங்கள் வராத வண்ணம் முதிரை அல்லது வேம்புகளான நாலு கம்புகளை நான்கு மூலைகளிலும் காவல் காம்புகளாக நடுவார்கள். அப்படியும் திருப்திபடாமல் பூதகணங்கள், மேலும் களத்துள் புகுந்துவிடாமல் காப்பதற்காகக் களத்தின் நடுவிலே குழிதோண்டி "அரக்கு" என்ற பல பொருட்கள் கொண்ட கலவையைப் புதைப்பார்கள் அக்கலவையில் "சாராயம், வலம்புரிச் சங்கு, இடம்புரிச்சங்கு, நவதானியங்கள், நவரத்தினங்கள், பாக்கு, வெற்றிலை, பழம், நெற்கதிர், இதரம், தங்கம், பொன், வெள்ளி, பசுச் சாணத்திலான விநாயகர் உருவம் முதலியவை இருக்கும். அவற்றைப் பெட்டியுள் வைத்துக் களத்தின் நடுவே புதைத்து இறை வணக்கம் செய்த பின்னரே சூடு மிதியலை ஆரம்பிப்பார்கள்.

எழுத்திலே "களத்து மொழி" என எழுதினலும் உழவர் இதனை "களவெட்டிப் பாஷை" என்றே சொல்லுவார்கள். மற்றையக் களமாகிய சூடுமிதிக்குமிடம் பொதுவாகக் "களத்து மேடு" என எழுதினலும் அவர்களது களத்துமொழியிலே "களவெட்டி" என்றே அழைப்பார்கள்.

சூடு மிதிக்கும் வேளையில் களத்து மொழியிலே பாவிக்கப்படும் பொருட்களுக்குப் புதுமையான பெயர்கள் வைக்கிறார்கள். குவியலாக இருக்கும் சூட்டினை "சூடு" என்றுசொல்லாமல் அதனைப் "போர்" "போரன்" என்றே அழைப்பார்கள். இவ்வரிசையிலே இன்னும் புதுமைப் பெயர்களாவன.

களம்	: களவெட்டி
சூடு	: போர், போரன்.
நெல்	: பொலி,
பதர்	: கள்ளன்,
வைக்கோல்	: பொலிக்கொடி,
மண்வெட்டி	: வெட்டுவாயன்
மாடு	: வரிக்காலன்-வரிக்காரி
சாணம்	: கோல்,
கயிறு	: நெடுமுழவன்.
கத்தி	: கொல்லன்,
கம்பு	: விசுக்குவாயன்.

எனப் பொருள்களுக்கும் கால் நடைக்கும் பெயரிட்டுள்ளனர்.

இனி அவர்களின் முகத்தலளவைப் பெயர்கள் இன்னும் விசித்திரமாக இருக்கும். கைப்பெட்டி என்பது கிழக்கு ஈழத்தில் பாவிக்கப்படும் ஒருவகை பிரப்பம். நாரினுல் பின்னப்பட்ட சிறிய பெட்டி. "மரக்கால்" ஒருவகை அளவை. இரண்டு மரக்கால் கொள்ளக்கூடியது "கைப்பெட்டி" இரண்டு தொடக்கம் ஐந்து மரக்கால் கொள்ளக்கூடிய பெட்டியைக் "கடகம்" என்று சொல்வார்கள். அளவைக் கணக்கிட்டால் நாலு சுண்டுகள் கொண்டது ஒரு கொத்து, ஆறு கொத்து ஒரு மரக்கால். முப்பது மரக்கால் கொண்டது ஓர் "அவணம்" ஆகும். இவற்றைக் களத்துமொழியில்,

மரக்கால்	: கணக்கன்,
அவணம்	: விரல்
கைப்பெட்டி	: குஞ்சுவாயன்
கடகம்	: பெருவாயன்

எனப் பெயரிட்டுள்ளனர். இனி உழவர்களின் வாய் சதா அசை

போட்டுக்கொண் டேயிருக்கும். மகிழ்ச்சிப் பெருக்கினுல் வெற்றிலே, பாக்கு, மணப்பு (மணப்பு என்பது ஒருவகை வாசனைப் பாக்கு) இவற்றையிட்டு மென்றுகொண்டிருப்பர். இவற்றைக் களவெட்டி மொழியில்,

வெற்றிலே : அழுகல்
புகையிலே : விரிஞ்சான்
பாக்கு : கருங்காய்
சுண்ணும்பு : வெள்ளே

சூடு மிதிக்கும் காளேகள் ஒரு புறம் அசைபோட, உழவர் மறு புறம் தாம்பூலத்தை அசை போடுவார்கள். தாம்பூலம் தரிக்கும் வழக்கம் சங்ககாலம் தொட்டு வந்ததல்லவா? தமிழ்மக்கள் பெயர்களில் அதிகமானவை காரணப் பெயர்களாக இருக்கக் காணலாம். காரணம் நோக்கிப் பெயர் வைப்பது தமிழர் பரம்பரைப் பழக்கமாகும். அதேபோல உழவரும் களத்து மொழிப் பெயர்களேக் காரணங் கொண்டே இட்டிருக்கிருர்கள்.

களத்திலே சூடு மிதித்துக் கொண்டிருக்கும் உழவருக்கு விட்டிலிருந்து மனேவியர் உணவு சமைத்து வருவர். அல்லது உணவைக் களத்தருகேயும் பொங்கி உண்பர். உணவோடு சம்பந்தப்பட்ட களத்து மொழிகளாவன.

தேங்காய் : வெள்ளோடன்
தண்ணிர் : கலங்கல்
மீன் : கடல் கரும்பு
ரொட்டி (பன்) : வலிச்சான்
வாழைப்பழம் : கரைஞ்சான்
சோறு : சோத்து வெள்ளே
அரிசி : அரும்பு, குறுமணி

என்பன.

கிழக்கிலங்கை உழவர் தங்கள் களத்துத் தேவையைப் பொறுத்துப் பயன்படுத்தும் அழகிய-விநோதமான பெயர்களேப் பாருங்கள்.

ஆண் : பெருமாள்
பெண் : அடைக்கலந் செல்வி
காற்று : வாயுராசன்,
மழை : வருணன்,
நித்திரை : மின்னி
மரணம் : நெடுமின்னி,
பேய் : கூளங்கையன்,
விடு : கூரைக்கோடு-குதிரைக் கொட்டில்,
சாராயம் : அரக்கு,
கள்ளு : பாளேவெள்ளே,
சுருட்டு : புகைச்சான்,
வண்டி : ஆடுகாலன்-உருட்டுவான்,
தோணி : கடற்குதிரை,
குடம் : குயவன்,
நெருப்பு : வெளிச்சம்,
பணம் : வட்டம்

இதுவரை களத்து மொழியிலே வழங்கப்பெறும் பெயர்ச்சொற்களுக்குரிய களத்து மொழிப் பெயர்களேக் கணடோம். பெயர்ச் சொல்லும்வினேச்சொல்லும்சேரும்போதே வசனம் பிறக்கும். வினேச்சொற்கள் சிலவற்றையே களத்துமொழியில் வழங்குகிருர்கள்.

வா, போ என்ற சொற்களுக்குக் "கட்டு" என்றும், செய், சாப்பிடு என்பனவற்றிற்கு "பெருத்" என்றும், இல்லே என்பதற்கு "பெருக்கம்" என்றும், "உதறு" என்பதற்கு "வாட்டும்" என்றும் கூறுவர் வினேச்சொல் எத்தகைய பெயர்ச் சொல்லோடு சேர்ந்துவருகிறதோ அதற்கேற்ப அர்த்தம் புரிந்து கொள்வர்.

இனி வசனமாவதைக் களத்து மொழியிலே பார்த்தால் இன்னும் வியப்பாக இருக்கும். "வெற்றிலே போட்டாயா?" என்பதைக் களத்து மொழியில் "அழுகல் பெருகினதா?" என்று கேட்பார்கள். இவ்வகையில் காலக்கணிப்பிலே,

வெற்றிலேபோட்டாயா:
அழுகல் பெருகினதா?
வெற்றிலே போடவில்லே:
அழுகல் பெருகப் பெருக்கம்
வெற்றிலேபோட்டேன்:
அழுகல் பெருகினேன்
வெற்றிலே போடுகிறேன்:
அழுகல் பெருக்குகிறேன்

எனக் காலத்தைக் கணித்துக் களத்து மொழியும் வேறுபடுவது விநோதமாக இருக்கும். இதே போல "தோணிவருகிறது, தோணிவந்தது, தோணிவரும்" என்னும் முக்கால வசனங்களுக்கு, "கடல் குதிரை கட்டுகிறது; கடல் குதிரை கட்டிற்று; கடல் குதிரை கட்டப்பெருக்கம் என வழங்கும். இவ்வாருக,

1. களத்தில் சூட்டைத் தள்ளு: "போரான களகவட்டில தள்ளிக் கட்டு"

2. வைக்கோலே மாடு சாப்பிடுகிறது: "வாரிக்காலன் போலிக் கொடியைப் பெருகுது"

நெல்லேக் கைப்பெட்டியில் அள்ளு: "பொலியை குஞ்சு வாயனில் கட்டு"

4: நெல்லில் பதர் இல்லே: "பொலியில் கள்ளன் பெருக்கம்"

5. மாட்டைக் கயிற்ருல் பிணே: "வாரிக்காலி நெடுமுழவனுல் கட்டு"

6. நெல்லே அள: "பொலியை கணக்கனில் கட்டு"

7. மாடு சாணம் போட்டது: 'வாரிக்காலி கோல் கட்டுது"

8. நெல் எத்தனே அவணம் கண்டது: "பொலிவிரல் எத்தனே கட்டுது"

9. வெற்றிலேக்குப் பாக்கு இல்லே: "அழுகல் பெருக கருங்காய் பெருக்கம்"

10. விட்டிலிருந்து புகையிலே வரவில்லே: "கூரைக் கோட்டிலிருந்து விரிஞ்சான் கட்டப் பெருக்கம்."

11. வெற்றிலேக்குச் சுண்ணும்பு கொடு: "அழுகலுக்கு வெள்ளே எடுத்துக் கட்டு"

12. ரொட்டிக்குத் தேங்காய் இருக்கா: "வலிச்சானுக்கு வெள்ளோடம் கட்டுதா?"

13. நெல்லே வண்டியில் ஏற்று: "பொலிய ஆடுகாலனில ஏத்திக்கட்டு"

14. நெல்தூற்றக்காற்று இல்லே: "பொலிய உட்டுக்கட்ட வாயுராசன் பெருக்கம்"

15. மழைவருகிறது: "வருணன் கட்டுது"

16. நித்திரை கொள்கிருள்: "மின்னி கட்டுகிருள்"

ஏன், இதனேப் படிக்கும்போது தலேயைச் சுற்றுகிறதா... ஆம் இவ்வாருன களத்துமொழியும் தமிழ் தான். இவ்வித வழக்கு மொழியைக் கேட்கும் பரிச்சயமில்லாத்தமிழர்கள் வியப்புறத்தான் செய்வார்கள். தமிழ் பேசும் உலகத்துக்கே புரியாத இந்தக் களத்துத் தமிழ் கிழக்கு ஈழத்தில் இன்னும் நிலவி வருவது வியப்பின்றி வேறென்ன.!

ஐப்பசி மாதம், தேய்பிறையின்போது வரும் சதுர்தசியன்று எல்லா இந்துக்களும் "தீபாவளி" பண்டிகையைக் கொண்டாடுவர். அதருமம் அழிந்து தருமம் தழைத்த நாள் என்ற நம்பிக்கையின் விளேவாகப் புராணக்கதை ஒன்றன் எதிரொலியாகவே, இப் பண்டிகையைக் கருதுவர். எனவே பக்தி உணர்வோடு கூடிய விழா என்பதை விடவும், சமுதாயத்திற்குத் தெய்வ அருளால் வாழ்வு கிடைத்த நாள் என்ற வகையில மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பண்டிகையே இது எனல் வேண்டும்.

தீபாவளியன்று காலேயில் ஒவ்வோரில்லத்திலும் பூசை நிகழ்த்தப்பெற்ருலும், எண்ணெய் தேய்த்துக் குளித்தல், புத்தாடை உடுத்தல், புதிய பலகாரங்கள் செய்து உண்ணல் போன்ற செயல்களால் வாழ்க்கை மகிழ்ச்சியே புலப்படுத்தப்படுகிறது எனலாம். இந்துக்களின் இல்லங்களில் நடைபெறும் பண்டிகையே இது.

[டாக்டர் (புலவர்) ப. அருணசலம் அவர்களின் "இந்து சமயம்-ஓர் கைபேடு" என்னும் நூலிலிருந்து]



பால்மரக் காட்டினிலே

அகிலன்

16. செல்வத்தின் மனச்சுமை

சின்னச்சாமி காண்டா வாளிகளைத் தூக்கிச் சைக்கிளில் முன்னும் பின்னும் மாட்டிக்கொண்டு மஸ்டர் களத்துக்குப் புறப்படத் தயாரானான். அவன் மனைவி முனியம்மா கையில் ஒரு குழந்தையை இடுக்கிக்கொண்டு முன்பே கிளம்பிவிட்டாள். ஆயாக் கொட்டகையில் குழந்தையை விட்டுவிட்டு, பெயர் கொடுத்தபின் அவள் வேலைக்குப் போகவேண்டும். தங்கை செல்லந்தான் மற்றொரு குழந்தையோடு அங்கிருந்து முதலில் சிட்டாய்ப் பறந்தவள்.

அரைக்கால் சட்டையும் கிழிந்த அழுக்குப் பனியனும் பறட்டைத் தலையுமாய்க் காட்சியளித்தான் சின்னச்சாமி. வயது நாற்பதுக்குள் தான் இருக்கும்; ஆனாலும் தோற்றத்தில் முதுமை தென்பட்டது. குழந்தைகள் கந்தப்பனும் ராஜாத்தியும் பள்ளிக்கூடப் பைகளில் தங்கள் புத்தகங்களைத் திணித்துக்கொண்டிருந்தார்கள்.

"ஏண்டா, கூடவந்து கொஞ்சம் ஒத்தாசை பண்ணக்கூடாது?" என்று கேட்டு மகன் கந்தப்பனைத் திரும்பிப் பார்த்தான், சின்னச்சாமி. தோட்டத்துக்கு உடன்வந்து மங்கு துடைப்பதற்காக அவன் பிள்ளைக்கு விட்ட அழைப்பு இது.

"நேத்தே வாத்தியாரு கோவிச்சுக்கிட்டாருப்பா. உங்கிட்டே என்னைப்பத்திப் பேசணும்னு சொன்னாரு."

"போ,போ! நீ போய்ப் படிச்சுக் கிளிச்சுத்தான் நாளைக்கே இந்தத் தோட்டத்துக்குக் கிராணியா வந்திடப் போறே!"

பையைத் தூக்கித் தோளில் மாட்டிக்கொண்டு தன் தங்கையைக் கூட அழைத்துக்கொள்ளாமல், தப்பினால் போதுமென்று அங்கிருந்து ஓட்டம்பிடித்தான் கந்தப்பன். "டே, கந்தா! கந்தா! நில்லுடா!" என்று அலறிக்கொண்டே அவனைப் பின்பற்றினாள் ராஜாத்தி.

நேரமாகிவிட்டதால் வாசலில் வந்து நின்ற கங்காணி, சின்னச்சாமியைப் பார்த்து வசை மாரி பொழியலானான். நாள்தோறும் அவனுக்கு நடக்கும் வழக்கமான அர்ச்சனை இது. தாமதமாய் எதையும் செய்வதென்பது அவனுடைய ரத்தத்தில் ஊறிய ஒன்று. கடைசியில் ஒரு வழியாய்ச் சின்னச்சாமி சைக்கிளில் புறப்பட்டான்.

எதிரில் அவனைத் தேடி வந்துகொண்டிருந்த மளிகைக் கடை இஸ்மாயில், "என்ன இன்னம் சீட்டுப் பணம் வரலே?" என்று கத்தினான்.

"சாயங்காலம் கடைக்கு வர்ரேன்" என்று பதிலுக்குக் கத்தியபடியே சைக்கிளை மிதித்தான் சின்னச்சாமி.

"என் கடைக்கு வர்ரேன்னு சொல்லிட்டு, கள்ளுக்கடைக்குப் போயிடப் போறே!"

சின்னச்சாமி அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

சின்னச்சாமி, அவன் மனைவி, அவன் தங்கை ஆகிய மூன்று பேர் உழைத்துச் சம்பாதிக்கும் குடும்பம் அது. நாலே குழந்தைகள் அவனுக்கு. ஆனால் அவர்கள் குடும்பத்து வருமானத்தில் பாதி அளவு வருமானமே வந்த ஒரு சில குடும்பங்கள் அதே லயனில் சிக்கனமாய் வாழ்ந்தன. தோட்டத்தில் பலர் சின்னச்சாமியைப் போல் நிரந்தரக் கடனாளிகளாக உழன்றாலும் சிலர் மட்டும் பணத்தை எதற்கு, எவ்வளவு, எப்போது செலவு செய்வது என்ற வித்தையைக் கற்று வைத்திருந்தார்கள்.

மளிகைக் கடை இஸ்மாயில்தான் சின்னச்சாமிக்கு முதலாளி, பாங்கர், கடன் கொடுத்துக் காப்பாற்றும் வள்ளல் எல்லாம்! ஐந்நூறு வெள்ளிக்கு இஸ்மாயிலிடம் ஏலச்சீட்டுப் போடுவான் சின்னச்சாமி. போட்ட இரண்டாவது மாதமே மற்றவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு ஏலம் கேட்டு, இருநூற்றைம்பது வெள்ளிக்கு ஏலம் எடுப்பான். இஸ்மாயில் கடையில் மளிகைச் சாமான் வாங்கிய கடன் எப்போதுமே ஒரு பெருந்தொகை பாக்கி இருக்கும். அதற்கென்று நூற்றைம்பதோ நூறோ வரவு வைத்துக்கொண்டு மீதத்தைச் சின்னச்சாமியிடம் கொடுப்பான் இஸ்மாயில். அந்தத் தொகையும் பத்திரமாக வீட்டுக்கு வந்து சேராது. கள்ளுத் தண்ணி, சம்சுத் தண்ணி, சிரம்பானில் உள்ள சினிமாக் கொட்டகை, ரெஸ்டாரண்டு முதலியவற்றுக்கெல்லாம் பணம் தண்ணீர் போலப் பாயும். பணம் எல்லாம் கரைந்தவுடன் அவன் மீண்டும் பழைய சின்னச்சாமியாகிவிடுவான். கிழிந்த ட்ரௌஸர், அழுக்குப் படிந்த பனியன், பறட்டைத்தலை, கள் நாறும் வாய்.

இஸ்மாயிலுக்கு எங்கோ கேரளத்துப் பக்கத்தில் ஒரு கிராமமாம். சிங்கப்பூரிலும் அவனுக்குக் கூட்டாளிகள் உண்டு. கோட்டத்தில் அவன் மற்றவர்களைப்போலவே எளிமையாக வாழ்ந்தாலும், கேரளாவில் அவன் பங்களாவும் நிலபுலங்களுமாகச் சேர்த்திருப்பதாய்ப் பேசிக்கொண்டார்கள். ஏலச்சீட்டில் இஸ்மாயிலுக்குப் போட்டியாளர்கள் அங்கு இல்லாமல் இல்லை. கங்காணிகள் சிலரும் கிராணிகளின் உதவிபெற்ற சில தொழிலாளர்களும்கூட அந்த ஏலச்சீட்டுப் பிடித்து வந்தார்கள். பணத்தை வைத்துக்கொண்டு பணம் பண்ணத் தெரிந்தவர்களுக்கும், பணத்தேவை இல்லாமல் கடைசியில் ஏலம் எடுப்பவர்களுக்கும் அது மிகவும் லாபமுள்ள ஏற்பாடு. சின்னச்சாமி போன்றவர்களுக்கோ அது தப்பித்துக்கொள்ள முடியாத இரும்பு வலை.

வேலை முடிந்து பால் நிறுத்துக் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பியது சின்னச்சாமியின் குடும்பம். வந்ததும் வராததுமாய் ஒரு வாளித் தண்ணீரை எடுத்துத் தலையில் கொட்டிக்கொண்டு குழந்தைகளோடு ஒன்றாய்ச் சாப்பிட உட்கார்ந்தான் சின்னச்சாமி. சாப்பிட்டு முடிந்தவுடன் அவன் மனைவியின் கண்களில் படாமல் மெல்ல வெளியே நழுவப் பார்த்தான். முனியம்மா அவனை விடவில்லை.

வழிமறித்துக்கொண்டு, பணத்தை எடுத்துக் கீழே வைத்துவிட்டுப் பிறகு வெளியே போகச் சொன்னாள். செல்லத்துக்கு இந்தச் சமயத்தில் அங்கே நிற்கப் பிடிக்கவில்லை. கைக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு மேலே புறப்பட்டுவிட்டாள்.

"மூணு பேரு சம்பளத்தையும் நீயே நீட்டி வாங்கிக்கிறே! பாதிப் பணங்கூட வீட்டுக்கு வந்து சேரலேன்னா, ஏழு பேரும் எப்படிச் சாப்பிடறதாம்? ஒரு நல்ல துணிமணி கிடையாது; பிள்ளைங்களுக்கு வாய்க்கு ருசியா எதுவும் வாங்கிக் குடுக்க முடியலே; எப்பப் பார்த்தாலும் பஞ்சப் பாட்டுப் பாடுறே. எடு, பணத்தை!"

"சீட்டுக்குப் பணம் கட்டணும்; கடைச் சாமானுக்குப் பாக்கி தரணும்; கோவிந்தன் கிட்ட கடன் வாங்கியிருக்கேன்..." அடுக்கினான் சின்னச்சாமி.

"நீ யாரு கிட்டதான் கடன் வாங்கலே? ஏன் அப்படிக் கடன் வாங்கணும்னு கேக்கிறேன்? கடன் வாங்கி எங்களுக்கு ஏதும் செலவு செஞ்சியா? ராத்திரியும் பகலும் பாத் தண்ணியிலே மிதந்தாக் கடன் வராம என்ன செய்யுமாம்?"

"நாக்கை அடக்கிப் பேசு! இல்லே..."

"இல்லே. நீ என்ன செஞ்சிடுவேன்னு கேக்கிறேன்? தோட்டத்துக்குள்ளே நீயும் உன்னுடை நியாயத்தை நாலு பேருகிட்டே சொல்லிப்பாரு. நானும் சொல்றேன்."

முனியம்மாவை அடிப்பதற்காகக் கையை ஓங்கியவன் பிறகு தன்னைத் தானே ஓரளவு அடக்கிக்கொண்டான். அழுது ஊரையே கூட்டிவிடுவாள் அவள்.

"நீ மாத்திரம் இப்போ ஒழுங்காப் பணத்தை எண்ணி வைக்காமல் இருந்தே, பஞ்சாயத்திலே சொல்லி, அடுத்த மாசத்திலேருந்து எங்க சம்பளத்தை எங்ககிட்டயே கொடுத்திரச் சொல்லப் போறேன்."

சின்னச்சாமிக்கு வேறு வழியில்லை. வலது புறத்து ட்ரௌஸர் பைக்குள் கையை விட்டுப் பணத்தை எடுத்து அவள் முன்னே வீசினான். அவள் ஒருத்தியின் சம்பளம் மட்டும் அதில் முழுமையாக இருந்தது. மற்றதை அடுத்த பைக்குள் அவன் வைத்திருந்தான். அதிலும் அவள் எங்கே பங்கு கேட்கப் போகிறாளோ என்ற பயம் அவனுக்கு வந்துவிட்டது. வேகமாக அங்கிருந்து கிளம்பினான். நேரே இஸ்மாயிலின் கடைக்கு அவன் போகவில்லை. அங்கே போனால் காகிதத்தில் எதையாவது கணக்கை எழுதிக்காட்டி, உள்ள பணம் முழுவதையும் அவன் பிடுங்கிக்கொண்டாலும் பிடுங்கிக்கொள்வான். ஆகவே கள்ளுக் கடையை நோக்கி அவன் கால்கள் விரைந்தன.

முனியம்மா பணத்தைஎண்ணிப் பார்த்து மேலே எடுத்துக்கொண்டு போனாள். தகரப் பெட்டியில் வைத்துப் பூட்டினாள். தாலிச் சரட்டில் சாவியை மீண்டும் முடிந்துகொண்டாள். கீழே வந்து சாப்பிட்டுவிட்டு, கைக்குழந்தையை மட்டும் தூக்கிக்கொண்டு வெளியே கிளம்பினாள்.

லயத்திலே நாலு வீடு தள்ளி ஒரு வீட்டில் பெண்கள் பிற்பகலில் வழக்கமாய்க் கூடுவதுண்டு. தாயக்கட்டமோ பல்லாங்குழியோ விளையாடுவார்கள்; அல்லது ஊர் வம்பு பேசுவார்கள். "இந்தப் பெண்ணையும் அந்த ஆணையும்" இணைத்துக் கதை கட்டுவார்கள். அந்தக் கதைகளில் உண்மை இருந்தாலும் இருக்கும்; அல்லது அவற்றில் சில முற்றும் கற்பனையாகவும் இருக்கக்கூடும். அதேபோல் கதைகள் அதே இடத்தில் தங்களைப் பற்றியே தங்கள் முதுகுக்குப் பின் பேசப்படுவதையும் அவர்கள் அறியாமல் இல்லை.

செல்லமும் முனியம்மாவின் மூன்றாவது குழந்தையுமே இப்போது வீட்டில் இருந்தார்கள். பள்ளிப் பிள்ளைகள் இரண்டும் தெருவுக்கு விளையாடச் சென்றுவிட்டன. மூன்றாவது குழந்தை மூன்று வயதுப் பெண் குழந்தை. மேலே அதை உறங்க வைத்துவிட்டுக் கீழ்ப் பகுதிக்கு வந்தாள் செல்லம். சாப்பிட்ட தட்டுக்கள் அப்படி அப்படியே கிடந்தன. துணிமணிகள் மூலையில் வீசி எறியப்பட்டிருந்தன. வீடு அலங்கோலமாகக் காட்சி அளித்தது. இது இந்த நேரத்தில் செல்லம் காணும் வழக்கமான காட்சிதான்.

ஒவ்வொன்றையும் ஒழுங்காக அலம்பியோ, அடுக்கியோ, மடித்தோ வைத்துவிட்டு, வாளியில் தண்ணீரை எடுத்துக்கொண்டு, மாற்றுத் துணிகளோடு மறைப்புக்குச் சென்றாள் செல்லம். தலையில் தண்ணீர் விட்டுக்கொண்டு குளித்தாள். துவட்டிக்கொண்டு மாற்றுடைக் கோலத்தில் வெளியே வந்தாள்.

அவள் சாப்பாடு அந்த வீட்டில் கடைசிச் சாப்பாடு. சில நாட்களில் தொட்டுக்கொள்வதற்குக் காய்கறிகள் கிண்ணத்தில் மிஞ்சியிருக்கும்; சில நாட்களில் ஒன்றும் இருக்காது. எதற்கும் அவள் முகம் சுளிப்பதில்லை. சாப்பிட்டுவிட்டுச் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்வாள். பிறகு சமையல் வேலையைத் தொடங்கினால் இரவு படுக்கப் போகும்வரை அங்கே இடுப்பொடிய வேலை இருக்கும்.

தனியே உட்கார்ந்து தன் சாப்பாட்டை முடித்துவிட்டுச் சாப்பாட்டுத் தட்டை அலம்பிக்கொண்டிருந்தாள் செல்லம்.

"சின்னச்சாமி வீட்டிலே இருக்காரா?"



உயிரும் உடலும்

ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கின்றன.

—லூக்கா 12: 22–23

தலையைத் தூக்கிப் பார்த்தாள் செல்லம். அவளுடைய முகம் மலர்ந்தது. வாசலில் பாலன் நின்று கொண்டிருந்தான்.

"வாங்க சார், வாங்க!" அருகில் கிடந்த பெஞ்சை ஒரு பக்கமாக இழுத்துப் போட்டாள்.

உள்ளே போய்ப் பெஞ்சில் உட்கார்ந்த பாலன், "கந்தனை ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பச் சொல்லிச் சின்னசாமிகிட்டச் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்" என்றான்.

"அண்ணனும் அண்ணியும் வீட்டிலே இல்லே; இப்பத்தான் வெளியிலே போனாங்க. அண்ணனும் வந்தா நீங்க வந்திட்டுப் போனதைச் சொல்றேன்." உங்களையே வந்து பார்க்கச் சொல்றேன்."

"யாரும் வீட்டிலே இல்லேங்கிறதனாலே, கணேசன் எங்கிட்டச் சொன்ன சமாசாரத்தை நான் உன்னிடம் தாராளமாச் சொல்லலாம்: சிரம்பானிலே அவனுக்குத் தெரிஞ்சவங்க பல பேர் இருக்காங்க. எப்படியாவது ஒரு வேலையைப் பார்த்துகிட்டு, அடுத்தாப்பிலே உன்னைச் சீக்கிரமாக் கல்யாணம் செய்துக்கறதாகச் சொன்னான். கவலைப்பட வேண்டாம்னு கேட்டுக்கிட்டான்."

செல்லத்தின் விழிகளிலும் முகத்திலும் ஒளி பொங்கியது. ஆர்வத்தோடு பாலனின் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டாள்.

அடுத்தாற்போல் அவன் கணேசனைப்பற்றி ஏதேனும் சொல்லமாட்டானா என்று ஏங்குவது தெரிந்தது.

"கணேசன் எனக்கு ரொம்பவும் வேண்டியவன். அவன் நல்லபடியா வாழணும்கிறதிலே எனக்கும் அக்கறை இருக்கு. அவன் இங்கே அடிக்கடி வரமுடியலேங்கறதுக்காக நீ வருத்தப்பட வேண்டாம். சின்னச்சாமியைப் போல இன்னொரு அண்ணன் உனக்கு இங்கே இருக்கான்னு நினைச்சுக்கோ."

"சின்னச்சாமியைப் போல எனக்கொரு அண்ணன் இருக்கவே வேண்டாம்; அவரை உடன் பிறப்பிலேயே சேர்க்காதீங்க!" என்று வெடுக்கெனப் பதில் அளித்தாள் செல்லம்.

பாலன் திடுக்கிட்டான். முன் பின் தெரியாதவனிடமா செல்லம் இப்படிப் பேசுகிறாள்? இல்லை. அவனிடம் படித்தவள் அவள். மேலும் இப்போது அவன் அவள் காதலனின் நண்பன் என்ற முறையில் அங்கு வந்திருக்கிறான்.

"என்ன, செல்லம்?"

தான் அளவுக்கு மீறிப் பேசிவிட்டதுபோல் தன் பற்களை அவள் கடித்துக்கொண்டாள். குபீரென விழிகளில் நீர் பாய்ந்தது. தன் தலையைக் குனிந்தபடி சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டாள்.

"இருங்க சார், காப்பி போட்டுக் குடுக்கிறேன்; குடிச்சிட்டுப் போகலாம்" என்றாள் செல்லம்.

"இப்ப எனக்குக் காபி அவசரமில்லே; அதை மெதுவாக் குடிச்சுக்கறேன்" என்ற பாலன், "உன்னோட அண்ணன் இந்தக் கல்யாணத்துக்குத் தடை சொல்றாராமே, ஏன்?" என்று கேட்டான்.

"என்னோட தொல்லை என்னோட இருக்கட்டும், சார்."

"தெரிஞ்சால் என்னாலே ஏதாச்சும் உதவி செய்ய முடியுமான்னு பார்க்கலாம்."

"யார் சொன்னாலும் அவர் கேட்கமாட்டார், கணேசனுக்கு என்னைக் குடுக்கமாட்டேன்னு சொல்றது ஒரு சாக்கு. அவ்வளவுதான். நான் கல்யாணம் செய்துக்கறதே அவருக்குப் பிடிக்காது."

மௌனமாக அவள் முகத்தை உற்றுப் பார்த்தான் பாலன். தாங்க முடியாத வேதனை அதில் பிரதிபலித்தது. ஒல்லியாக் உயரமாக இருந்தாள் அவள். வறுமை காரணமாகப் போதிய ஊட்டச் சத்தின்றி உடல் நலிவுற்றிருப்பதுபோல் தோன்றியது. ஆனாலும் நல்ல அழகி அவள்.

"அவருக்குக் குடிப்பழக்கம் உண்டுன்னு எனக்குத் தெரியும்..." என்றான் பாலன்.

"அவர் குடிக்கிறதுக்கு அவர் சம்பாதிக்கிறது மாத்திரம் பத்தாது. அண்ணியும் நானும் வேறே அவருக்குச் சம்பாரிச்சுக்குடுகணும். அத்தோட குழந்தை குட்டிகளைப் பார்த்துக்கறதுக்கும் வீட்டு வேலைகளைச் செய்யறதுக்கும் ஓர் ஆள் வேணும்."

"என்ன?" அதிர்ச்சியடைந்தான் பாலன்.

"தங்கச்சியைக் கல்யாணம் பண்ணிக் குடுத்திட்டா, ஓர் ஆள் கூலி குறைஞ்சு போகும். வீட்டிலே அடிமை வேலை செய்யறதுக்கும் ஆள் கிடைக்காது."

"உன் அண்ணி?"

"நான் வீட்டிலே இருக்கிறதாலே அவங்களுக்கும் வசதிதான். ஒரு துரும்பை எடுத்து அந்தப் பக்கம் இந்தப் பக்கம் போடமாட்டாங்க. தோட்டக் காட்டை விட்டா அவங்களுக்குத் தாயக்கட்டம் இருக்கவே இருக்கு."

நீண்ட பெருமூச்சு விட்டான் பாலன். சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் சிற்றாடை கட்டிக் கொண்ட சிறுமியாக இருந்தவள் செல்லம். இந்தச் சில ஆண்டுகளுக்குள் இவ்வளவு மனச்சுமையா இவளுக்கு?

"பெத்த தாய் உயிரோட இல்லேன்னு. ஒரு பெண் அப்புறம் வாழவே கூடாது சார்! அதுவும் இந்த மாதிரி ஒரு தோட்டக் காட்டிலே, இப்படி ஒரு துப்புக்கெட்ட அண்ணன் வீட்டிலே நான் இருக்கவே கூடாது, சார்! சரியான ஆம்பிளை ஒருத்தர் வீட்டிலே இல்லேன்னு, அந்த வீட்டுப் பொம்பளைங்களை மத்தவங்க எவ்வளவு கிள்ளுக்கீரையா நினைக்கிறாங்க தெரியுமா? வர்ரவன் போறவனெல்லாம் முறைச்சுப் பார்க்கறது, பல்லை இளிக்கறது, கேலி பேசறது..."

தான் அதிகமாய்ப் பேசிவிட்டதுபோல் சட்டென்று பேச்சைப் பாதியில் நிறுத்திக்கொண்டு, "இருங்க சார், காபி போட்டுக் கொண்டாரேன்" என்று சொல்லிவிட்டு அடுப்படிக்குச் சென்றாள் செல்லம்.

உண்மையான அன்பை வாழ்வில் பெற்றிராத அவள் உள்ளக் கதவுகள், அன்பின் தூதுவனைத் தன்னைக் கண்டவுடன் இயல்பாகவே திறந்துகொண்டுவிட்டன என்பது பாலனுக்குப் புரியாமல் இல்லை. தோட்டத்திலே ஆண் துணையில்லாமல் வாழும் பெண்கள் அவ்வளவு பாதுகாப்போடு வாழ்வதாய்ச் சொல்ல முடியாது. சின்னச்சாமியின் துணை என்பது பேரளவுக்குத்தான் துணை போலும்! அவன் மனைவியும் அவனுடைய பலவீனத்தை ஈடு செய்யும் அளவுக்குக் குடும்பப் பொறுப்பை உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை.

செல்லம் காபி கொண்டு வந்து கொடுத்தாள். வாங்கிக் குடித்துவிட்டு, "இவ்வளவும் கணேசனுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"நல்லாத் தெரியும். அவரை... அவரை நம்பிக்கிட்டுத்தான்... நான் இன்னம் இந்த உசிரை வச்சுக்கிட்டிருக்கிறேன்... இங்கே எனக்கு ஒரு நாள் போறது ஒரு யுகம் போறுப்பிலே இருக்குன்னு மட்டும் அவர் கிட்டச் சொல்லுங்க."

"நான் அவன் கிட்டக் கட்டாயம் சொல்றேன். உன் கிட்டேயும் நான் ஒண்ணு சொல்ல வேண்டி இருக்கு."

"சொல்லுங்க."

"எனக்கும் செல்லம்கிற பேரிலே ஒரு தங்கச்சி இருக்குன்னு உனக்குத் தெரியும். என்னோட சொந்தத் தங்கச்சி எப்படியோ அப்படியே நீயும் எனக்கொரு தங்கச்சிதான். உனக்கு என்ன சிரமம் இருந்தாலும் என்னோட தங்கச்சிகிட்டே சொல்லி அனுப்பு; இல்லே வருதப்புக்குக் கந்தப்பன்கிட்டச் சொல்லி அனுப்பு. என்னோட வீட்டுக்கு வந்தும் நீ என்னைப் பார்க்கலாம். உன்னோட கவலை என் கவலைன்னு நினைச்சு, அதை என் பொறுப்பிலே விட்டுடு."

"உங்களை இன்னிக்குப் பார்த்ததிலே எனக்கு மனசு எவ்வளவோ தைரியமா இருக்கு, சார். ஏதாச்சும் சேதி இருந்தா உங்க தங்கச்சிகிட்டே நான் சொல்லி அனுப்புறேன், சார்."

செல்லத்தின் மனச் சுமைகளைத் தன் மனத்திலே தாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான் பாலன்.

(தொடரும்)

எங்கிருந்தோ ஒரு நாய் வந்தது!



"பதினாறு வயதினிலே"
வெளிப்புறப் படப்பிடிப்பில்
பக்தகர் பாரதிராஜா புதுமலர் ஸ்ரீதேவிக்கு
நடிப்புச சொல்லிக் கொடுக்கிறார்.

இளம் டைரக்டர் பாரதிராஜா, கமலஹாசன் கதாநாயகனாக நடிக்கும் "16 வயதினிலே" என்ற வண்ணப்படத்தை டைரக்ட் செய்து வருகின்றார்.

தமிழ்ப் படங்களில் "ரியலிசம்" இல்லை என்று கூறுபவர்கள் இந்தப் படத்தைப் பார்க்கட்டும் என்று பெருமைபடக் கூறுகின்றார். இந்தப் படத்தின் வெளிப்புறக்காட்சி படப்பிடிப்பின்போது நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்ச்சியைப்பற்றிச் சுவைபடக் கூறுகின்றார்.

"ஒரு நாள் இரவு 3 மணியளவில் படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. வில்லன் குடி போதையில் ஒரு வைக்கோற்போர் அருகே குடித்தபடி இருந்தவர் மது புட்டியை வீசிவிட்டு எழுந்து ஏதோ ஒரு கோப வெறியுடன் நடக்கவேண்டும். இந்தக் காட்சியைப் படமாக்க மின் விளக்குகள் தயாரானதும் நான் "ஸ்டார்ட்" என்று குரல் கொடுக்க காமிரா சுழல ஆரம்பித்தது: அப்பொழுது எங்கிருந்தோ ஒரு நாய் வந்து அன்புடன் வில்லன் முகத்தை முகர்ந்தபடி நிற்க, நான் "கட்" சொல்லாமல் இருந்துவிட்டேன். வில்லனும் யதார்த்தமாக நாயை முதலில் தடவிய பின், கோபமாகக் கால்களால் ஓங்கி உதைக்க அது "வீல்" என்று பரிதாபமாகக் கத்தியபடி ஓட, வில்லன் மது புட்டியை எறிந்துவிட்டு எழுந்து நடந்தார். பிறகு தான் நான் "கட்" சொன்னேன்! பாட்டிலை வீசியது நான் எதிர்பார்த்தது போல் விழாமற்போனதால், மீண்டும் ஒருமுறை அதே காட்சியை எடுக்க நினைத்தேன்.

இம்முறை நாய் இல்லையே என்று வருத்தத்தோடு காமிராவுக்கு "ஸ்டார்ட்" சொல்ல, காமிரா இயங்க ஆரம்பித்தது. என்னுடைய அதிர்ஷ்டம் அதே நாய் மீண்டும் அதே போல் நுழைந்து வாலை ஆட்டியபடி வில்லனிடம் நிற்க, அவரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் உதைத்து பாட்டிலை வீசினார்.

நான் உற்சாகத்துடன் "கட்" சொன்னேன். இயற்கையாக அமைந்த இந்தக் காட்சி என் மனதில் இன்னும் சுவாரஸ்யமாக நிலைத்து நிற்கிறது!

இந்துமதம் — ஜெயலலிதா கருத்து



["நான் ஏன் இந்துவாக இருக்கிறேன்" என்று தமிழ்த்திரை நட்சத்திரம் ஜெயலலிதாவிடம் கேட்டதற்கு அவர் சொன்ன பதிலின் சாரம் இது].

"சொல்லப் போனால், நான் இந்துவாகப் பிறந்ததால்தான் இந்துவாக இருக்கிறேன் ஆனால் உணரும் வயது அடைந்தபின் பார்க்கையில், எந்த மதத்தையும் மேற்கொள்ளலாம் என்ற வாய்ப்புத் தரப்பட்டால் நான் சந்தேகமின்றி இந்து மதத்தையே தேர்ந்தெடுப்பேன்.

இந்து மதம் என்பது ஒரு முழுமையான வாழ்க்கை முறையாகும். மாபெரும் இரண்டு இதிகாசங்களை இந்து மதம் மானிட இனத்துக்கு வழங்கியுள்ளது; ராமாயணம், மகாபாரதம். உலகில் எந்த விஷயத்தைப் பற்றி வேண்டுமானாலும் விலைமதிக்க முடியாத அறிவுரைகளை அவற்றிலே காணலாம். ராஜதந்திரம் பற்றி, நிர்வாகம் பற்றி, தலைவனின் பொறுப்புக்களைப் பற்றி, குடிமகனின் கடமையைப் பற்றி, தலைவனின் பொறுப்புக்கள் பற்றி, கணவனுக்கும் மனைவிக்கும், குழந்தைக்கும் பெற்றோருக்கும், குருவுக்கும் மாணாக்கனுக்கும் இடையே இருக்க வேண்டிய உறவுகளைப் பற்றி, யுத்தத்திலும் சர்வதேச உறவிலும் கடைப்பிடிக்க வேண்டிய உபாயங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ள போதனைகள் இன்றைக்கும் கூட அன்றாட வாழ்க்கைக்குப் பொருந்துகின்றன. நியாய புத்தி படைத்த அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை.

"ஈன்ற தாய், அதற்குக் காரணமான தந்தை, அறிவென்னும் ஒப்பற்ற பொக்கிஷத்தை அளிக்கும் குரு-இவர்கள்பால் அந்தரங்க சுத்தியுடன் பக்தி செலுத்தினால்தான் கடவுளிடம் உண்மையான பக்தி செலுத்தியதாகும் என்று இந்து மதம் உணர்த்துகிறது. எல்லா இடத்திலும் எல்லாப் பொருளிலும் இறைவன் இருக்கிறான் என்கிறது இந்து மதம். எனவே, கோவில்கள், மதச் சடங்குகள் அவற்றில் நம்பிக்கை உள்ளவர்களைத் தவிர மற்றவர்களுக்கு அடியோடு தேவையற்றவையாகும். அதுவும் கூடத் தனிப்பட்டோர் விருப்பமேயொழிய கட்டாயமான சடங்கு அல்ல. உண்மையான இந்துவானவன் கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஈடுபடுவதன் மூலம் எந்த இடத்திலும் இறைவனுடன் ஒன்றிவிட முடியும்.


ஓர் உண்மையான இந்து, தன் தர்மத்தை, கடமையைச் செய்தாலே இறைவனை வழிபட்டதாக ஆகும். மந்திரங்களை உச்சரிப்பதாலோ, கோவில்களுக்கு ஒழுங்காகச் சென்று வந்தோ ஒருவன் இறைவனை வழிபட முடியுமென்பதில்லை. இதனால் தான் நான் இந்துவாக இருப்பதில் பெருமைப்படுகிறேன். ஏனெனில், இந்து மதத்தின் அமைப்புக்குட்பட்டு எந்தத் தனி நபரும் தன் மதத்தைத் தன் விருப்பப்படி பல்வேறு வழிகளில் கடைப்பிடிக்கச் சுதந்திரம் உண்டு. வாழ்க்கையின்பால் விசால மனப்போக்குடைய, சகிப்புத் தன்மையுள்ள கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது இந்து மதம்.

நன்றி: "இலஸ்டிரெட் வீக்லி"

முருகுவைக் கேளுங்கள்

சி. ஐயாசாமி ஜமுனா, சுங்கை

கே: நம் நாட்டில் பொதுத் தேர்தல் எப்போது நடக்கும்?



ப: அரசியல் கட்சிகளின் சுறுசுறுப்பைப் பார்த்தால் அடுத்த ஆண்டு பெரும்பாலும் தேர்தல் நடக்கக்கூடும் என்றே ஊகிக்க வேண்டியிருக்கிறது!

ஏ. எஸ். ஜோமாலை, செமினி

கே: மனிதன் பிறக்கும்போது அறிவாளியாகப் பிறக்கிறானா, அல்லது முட்டாளாக பிறக்கிறானா?

ப: அறிவாளியாகத்தான் எல்லாக் குழந்தைகளுமே பிறக்கின்றன. குடும்பச் சூழ்நிலையால்தான் ஒரு சில குழந்தைகள் முட்டாள்கள் ஆகிவிடுகின்றன.

கே: பிறவிக்குணம் என்கிறார்களே அப்படி ஒரு குணம் மனிதனுக்கு உண்மையில் உண்டா?

ப: பிறவிக்குணம் மனிதனுக்கு உண்டு என்பதை அனுபவத்தில் காணமுடிகிறது.


ஜே. எஸ். சாமி, சுங்கை சிப்புட் தோட்டம், சுங்கை சிப்புட்

கே: அண்ணா, சிரிப்புச் சித்திரம் எழுதி அனுப்பினால் வெளியிடுவீர்களா?

ப: அனுப்புங்கள்; வெளியிடுகிறோம்.

பி. சாரங்கபாணி, ஜோகூர் ரிவர் தோட்டம், உலுத்திராம்

கே: இன்றைய நாகரிகம் மனிதனை எந்த அளவில் கொண்டு போய்விடும்?



ப: ஆண் பெண் அனைவரையும் காட்டில் தவம் புரியும் ரிஷிகளைப் போல் சடையும் தாடியும் நிறைந்தவர்களாக ஆக்கிவிடும் என்றே தோன்றுகிறது!

ஆர். லோகநாதன், கம்போங் லாவுட், ஸ்கூடாய்

கே: ஒருவனின் உழைப்பில் மற்றொருவன் உண்டு வாழ்கிறான். இதில் உழைப்பவன் குற்றவாளியா, உண்டு வாழ்பவன் குற்றவாளியா?

ப: உண்டு வாழ்பவனே பெரியகுற்றவாளி. அதற்கு உடந்தையாக இருக்கும் காரணத்தினால் உழைப்பவனும் குற்றவாளியே.

எஸ். வெங்கடாசலம், புக்கிட் சீடிங் தோட்டம், சிலாங்கூர்

கே: கரையை நோக்கி ஆவேசமாக வரும் கடல் அலை ஏன் கரையைத் தொட்டவுடன் அமைதியாகத் திரும்பிச் சென்று விடுகிறது?

ப: மண்ணின் பொறுமை, கடல் அலையையும் அமைதி கொள்ளச் செய்கிறது போலும்.

பொன்முனி பரசுராமன், கோத்தாபாரு

கே: அறிவுக்கும் உணர்ச்சிக்கும் போராட்டம். இதில் எதன் வெற்றி நன்மை பயக்கும்?


ப: அறிவுக்குக் கிடைக்கும் வெற்றியே வரவேற்கத்தக்கது

எம். ஜி. ராஜு, கோலத்தெர்லா, கேமரன் மலை

கே: தோட்டப்புறத்தில் வாழும் மக்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அவர்களின் உண்மையான முன்னேற்றமே மலேசிய இந்திய சமூகத்தின் முன்னேற்றமாகும்.

கே: அண்ணா, என் நண்பர் தினமும் மது குடித்து வருகிறார். அவரின் ஊதியமோ மிகக்குறைவு. குழந்தைகள் தற்பொழுது அரை டஜனுக்கு மேல். "குடித்துக் குடித்து ஏன் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்" என்றால் "என்ன செய்வது, குடித்துப் பழகிவிட்டது" என்கிறார். இவர் போன்றவர்களை மதுக்கடையில் வேலைக்குச் சேர்த்தால்...?



ப: இத்தகையவர்களை மதுக்கடையில் வேலைக்குச் சேர்த்தால், மதுபானத் தொட்டியிலேயே அவர்கள் குளிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

குமாரி ஜானகி ராமசாமி, சுங்கை பிரு தோட்டம், சிம்மோர்

கே: அண்ணா, வாழ்க்கைக்குத் தேவையானது பணமா! குணமா! அன்பா!

ப: பணம். பணம். பணம்.


—ஜி. குணசேகரன், கம்போங் துன் ரசாக், பூச்சோங்

கே: அன்புக்குப் பாலமாக அமைவது எது...?

ப: இதயம்.

பா. சுந்தரபாண்டியன், ஆர்கிராப்ட் தோட்டம், பேரா

கே: தாங்கள் இதுவரையில் மொத்தம் எத்தனை புத்தகங்கள் எழுதி வெளியிட்டுள்ளீர்கள்?



ப: நீதிவெண்பாவின் நெறிமுறைகள், தமிழ்கூறு நல்லுலகம், நன்னெறி நூல் நயம்- இம்மூன்று புத்தகங்களும் இதுவரை வந்திருப்பவை. மூதுரை விளக்கம் என்னும் நூல் அச்சில் இருக்கிறது.


சா. ராஜேஸ்வரன், நோர்த் ஹம்மோக் தோட்டம், கிள்ளான்

கே: ஒரு பெண் கஷ்டங்களைச் சமாளித்து, தைரியமாக வாழ்க்கையை நடத்த எந்தப் புத்தகங்களைப் படிக்கலாம்?
ப: தமிழ்வாணன் எழுதியிருக்கும் "துணிவே துணை" போன்ற நூல்கள் இவ்வகையில் பயன்படும்.

கே: ஒருவரைக் கெடுத்துத் தாம் வாழவேண்டும் என்று நினைப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப: பரந்து கிடக்கும் இந்த உலகத்தில் எல்லாருக்கும் வாழ வாய்ப்பிருக்கிறது என்பதை அறியாத பிண்டங்கள் இவர்கள்.

கே. லெட்சுமி, ரெங்கம் தோட்டம், ஜோகூர்

கே: ஒரு சிலர் பெண் பார்க்க வரும்பொழுது, பூனை மாதிரி வருகிறார்கள். திருமணம் செய்துகொண்ட பிறகு, "நான்தான் உன்னைக் கொண்டு வந்தேன். என் சொற்படிதான் நீ கேட்கவேண்டும்" என்று கூறிக் கொடுமைப் படுத்துகிறார்களே. இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



ப: பெண் பார்க்க வருகிற மாப்பிள்ளையைப் பூனையா, புலியா என்று அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய சாமர்த்தியம் பெண் வீட்டுக்காரர்களுக்கு இருக்குமானால் இத்தகைய எதிர்காலப் பிரச்னைகளுக்கு இடம் இராது. திருமணத்திற்குப் பிறகு யோசித்துப் பயனில்லை.

ஆர். சேகர், தைப்பிங்

கே: வாழ்வின் தொடக்கத்தை நாம் அறிவது போல் வாழ்வின் முடிவை அறிய முடிவதில்லையே!
ப: வாழ்வின் முடிவு நம் கையில் இல்லாமல் இருப்பதால்தான் மனிதப் பண்பு நிலைத்திருக்கிறது. இல்லாவிட்டால் மனிதன் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று ஆட்டம் போடத் தொடங்கி விடுவான். இறை நம்பிக்கையும் தழைக்காது!

பி. பாலகோபால், மாடோஸ் தோட்டம், ஜொகூர்

கே: "புதிய சமுதாயத்திற்குக்" கதை, கட்டுரை, கவிதை, ஓவியம் அனுப்பிப் பிரசுரிக்க இயலாவிட்டால் அனுப்பியவர்களுக்கே அவை திருப்பி அனுப்பிவைக்கப் படுமா? நகைச்சுவைத் துணுக்குகள், பேட்டிகள் ஏற்றுக் கொள்ளப்படுமா?
ப: அஞ்சல் தலை இணைத்து அனுப்பியிருந்தால் ஏற்றுக்கொள்ளப்படாத எழுத்தோவியங்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படும். ஏற்றுக்கொள்ளத் தக்க நல்ல துணுக்குகளையும், பேட்டிகளையும் தாராளமாக அனுப்பி வைக்கலாம்.

எஸ். மணிராஜ், தொங்கா மொரிப், பந்திங்

கே: விமானக் கடத்தல்கள் மலிந்துவிட்ட இந்தக் காலத்தில் அவற்றுக்குக் காரணம் என்னவென்று தாங்கள் கருதுகிறீர்கள்?



ப: எறிகுண்டுகளிலும், ஸ்டெர்லிங் துப்பாக்கியிலும் நம்பிக்கை கொண்ட பயங்கரவாதிகளின் எண்ணிக்கை உலகில் பெருகுவதே விமானக் கடத்தல்கள் இத்தனை எளிதாக நாளுக்கொன்று விதம் நடப்பதற்குக் காரணமாகும்.

பி. என். நாகராஜன், ஈப்போ

கே: தமிழ்நாட்டில் நடிகர் ஆட்சி எப்படி உள்ளது? அவர் ஆட்சியில் குறை உள்ளது என்கிறார்களே! அதைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுங்கள்?
ப: தி. மு. கழகத்தின் இடைவிடாத கடுமையான சவால்களைத் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். நல்லவிதமாகச் சமாளித்து வருவதாகவே தூரத்திலிருந்து பார்க்கும்போது நமக்குத் தோன்றுகிறது.

எஸ். இளம்தோதேவர், டமன்சாரா, கோலாலம்பூர்

கே: அண்ணா, முதுபெரும் புலவர் சுவாமி இராமதாசர் அவர்களின் முகவரியைத் தருவீர்களா?
ப: 101-1 பட்டாணி ரோடு, பினாங்கு.

கே: அண்ணா, புதிய சமுதாயம் இதழின் அறிமுகக் கூட்டம் ஒன்றை எங்கள் பகுதியில் ஏற்பாடு செய்ய விரும்புகிறோம். உங்கள் கருத்தை நான் அறியலாமா?
ப: தாராளமாக ஏற்பாடு செய்யலாம். கலந்து கொள்கிறோம்.

இராசிதுரை கே. எஸ். மணியம், தைப்பிங்

கே: மனம் பண்படுவதற்கு முதல்படி எது?
ப: தெய்வ நம்பிக்கை.

எம். சாமிக்கண்ணு, பாரிட்புந்தார்

கே: அதிகமாகச் செலவு செய்பவனைத் திருத்துவது எப்படி?
ப: செய்யும் செலவுகளுக்கு ஒவ்வொரு நாளும் கணக்கு எழுதும்படிச் சொன்னால் அவனுடைய செலவு படிப்படியாகக் குறைந்து விடும்.

கே: உள்ளம் உருகக் கவிதை பாடினாலும் நம் இந்திய சமூகம் முன்னுக்கு வராது போல இருக்கிறதே?
ப: அப்படி அவநம்பிக்கை கொள்ளக் காரணமில்லை. உள்ளத்திலிருந்து பொங்கி எழுகின்ற கவிதைக்கும் எழுத்துக்கும் சமுதாயத்தைத் திருத்துகிற ஆற்றல் நிச்சயம் உண்டு.

ஏ. பி. ராம்குமார், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: பெரிய அந்தஸ்திலுள்ள ஒரு பெண், ஏழைத் தொழிலாளி ஒருவனை மணந்து கொள்ளும்போது அந்த வாழ்க்கை எப்படியிருக்கும்?

ப: மாடி வீட்டிலிருந்து மண்குடிசைக்குக் குடி பெயர்ந்தது போல் இருக்கும்.

ஐயாசாமி ஜமுனா சுங்கை, பேரா

கே: சூழ்நிலையின் கைதி என்று யாரைக் குறிப்பிடலாம்?



ப: மணவறையில் அமர்த்தி வைக்கப்பட்டிருக்கும் மணமகனைக் குறிப்பிடலாம்!

ஏ. எஸ். ரவிப்பெருமாள், குக்கூப் தோட்டம், ஜொகூர்

கே: "புதிய சமுதாயம்" இதழ் குறித்துத் "தமிழ் மல"ரில் மட்டும் விளம்பரம் தருகிறீர்கள். "நேச"னை மறந்து விட்டீர்களா?

ப: அட, ஆண்டவனே! நேசனை நாங்கள் எப்படி மறக்க முடியும்? அவர்களுக்கும் விளம்பரம் கொடுக்க முன்வந்தோம். ஆனால் நேசன் நிர்வாகம் புதிய சமுதாயம் விளம்பரங்களை ஏற்க மறுத்துவிட்டது.

குமாரி எம். நாகம்மா, சுங்கை போக்கா தோட்டம், பாகான் சிராய்

கே: சொந்தப் பல், கட்டுப் பல் - இந்த இரு பற்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: இயந்திர மனிதனுக்கும் அசல் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம்தான்.

கே: ஒரு பெண் திருமணம் முடிந்ததும் சுதந்தரப் பறவையாக உலாவ நினைக்கலாமா?

ப: கூடாது. அதற்காகக் கூண்டுக்கிளிபோல வீட்டில அடைபட்டுக் கிடக்கவேண்டிய அவசியம் இல்லை.

கே. பாலகிருஷ்ணன், விஞ்சாங் தோட்டம், பகாங்

கே: பெல்டா நிலக்குடியேற்றத் திட்டத்தில், ஒவ்வொரும் எந்த வயதில் விண்ணப்பிக்கலாம்?

ப: 18 வயது நிறைந்திருக்கவேண்டும்.

கே. எஸ். பரிமளம், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: பணம் படைத்தவர்கள் ஏழைகளை ஏன் வெறுக்கிறார்கள்?

ப: ஏழைகளை அரவணைத்துப் பேணி வருகிற பணக்காரர்களும் பலர் இருக்கிறார்கள். உங்கள் குற்றச்சாட்டு முழு உண்மையாகாது.

எஸ். கோபால், பெட்டாலிங் ஜெயா

கே: பத்திரிகைகளில் நிலம் விற்பனைக்கு என்று அறிவிப்பு வருகிறதே. அதை நம்பி நிலம் வாங்கலாமா?

ப: நில விற்பனை, வீட்டு விற்பனை விளம்பரங்களை அரசாங்க அனுமதி பெற்றே வெளியிடுகிறார்கள். அப்படி இருப்பினும் வழக்கறிஞர்களைக் கலந்துகொண்டு இத்தகைய கொள்முதலில் ஈடுபடுவது நல்லது.

கே: நேசா கூட்டுறவுச் சங்கத்திற்குத் தமிழில் கடிதம் எழுதினால் பதில் கிடைக்குமா?

ப: நிச்சயம் கிடைக்கும்.

எம். சிவலிங்கம், கம்போங் ராஜா, கேமரன் மலை

கே: அண்ணா, என் உயிருக்குயிரான நண்பர் கூடிய விரைவில் திருமணம் செய்யவிருக்கிறார். என்ன பரிசு கொடுப்பதென்று தெரியவில்லை! எதைக் கொடுப்பதென்று சொல்லுங்கள்!

ப: குத்துவிளக்கு ஒன்று வாங்கிப் பரிசளியுங்கள்.

மு. சிவா, புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: தான் செய்யும் நன்மைகளை ஏற்றுக்கொள்ளும் மனிதன், தான் செய்யும் தவறுகளை ஏற்றுக்கொள்ள மறுப்பது ஏன்?

ப: சாக்லெட்டை விரும்பித் தின்னும் குழந்தை கசக்கும் மருந்தைக் கண்டால் ஓடி ஒளிவதைபோல இது மனித இயல்பு.

ருக்குமணி, பெட்டாலிங்

கே: அண்ணா, புதிய சமுதாயத்தில் மாதர்களுக்கு என்று ஒரு பக்கத்தை ஆரம்பித்தால் என்ன?

ப: பாவையர் பக்கம் தொடர்ந்து வருகிறதே!

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: உங்களுக்கு என் இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

ப: வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கும் உங்களுக்கும் உங்களைப்போன்ற எண்ணற்ற வாசகர்களுக்கும் என் நன்றி.

ஆர். பாலன் நாயர், கெல்பின் தோட்டம், பகாவ்

கே: பெண்களை எந்த அளவிற்கு எடை போடலாம். அதேபோல் ஆண்களை எந்த அளவிற்கு எடை போடலாம்?

ப: பெண்களை 24 காரட் தங்கம் அளவிற்கும், ஆண்களை 14 காரட் தங்கம் அளவிற்கும் எடை போடலாம்.

கே. முருகையா, தித்தி சேரோங், பாரிட்புந்தார்

கே: மற்றச் சமூகத்தினரைவிட, நம் சமூகத்தினரே பெரும்பாலோர் பிச்சை எடுப்பதற்குக் காரணம் என்ன?



ப: மற்றச் சமூகங்களைவிட நம் சமூகத்தை வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகம் வாட்டிவருகிறது என்பதற்கு இந்தப் பிச்சைக்காரர்கள் கூட்டமே சரியான அத்தாட்சி!

எஸ். டி. மனோ, குளுனி தோட்டம், சிலிம்ரிவர்

கே: தமிழகத்திலிருந்து இங்குப் படை கொண்டு வரும் கலைஞர்களுக்குச் சரியான முறையில் வரவேற்பு கொடுக்கப்படுகிறது. அதேபோல இங்கிருந்து தமிழகத்திற்குச் செல்லும் நம் மலேசியக் கலைஞர்களுக்கு வரவேற்பு கொடுக்கப்படுகின்றதா?

ப: கலைமாமணி ஆறி அருள்தாஸ் தலைமையில் மலேசிய தமிழர் கலைமன்றம் தமிழகத்திற்கு நாடகம் நடத்தச் சென்றபோது அங்கு அக்குழுவினருக்குச் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. அதைப்போல் முறையாக அறிவித்து, தக்க முன் ஏற்பாடுகளுடன் நமது கலைஞர்கள் தமிழகம் செல்வார்களானால் வரவேற்பு மனநிறைவு தரக்கூடிய வகையில் அமையுமென்று எதிர்பார்க்கலாம்.

முன்னோட்டம்

தொலைக்காட்சி



10-11-77 சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா, நாகேஷ் நடித்துள்ள "சொர்க்கம்" ராமண்ணாவின் டைரக்ஷனில் வெளிவந்துள்ள இப்படத்தில் "பொன்மகள் வந்தாள்". "சொல்லாதே யாரும்கேட்டால்" போன்ற புகழ் பெற்ற பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

17-11-77 தமிழ் படம் "படித்தபெண்"

ஞாயிறுதோறும் இரவு 7.20க்கு கோம்பெட்

வியாழக்கிழமை தோறும் இரவு மணி 7.25க்கு ஜெமினி மேன் (மாய மனிதன்)

சனிக்கிழமைதோறும் மாலை 6.45-க்கு தும்புவான் மிங்கு (தமிழ் நிகழ்ச்சி)

சனிக்கிழமைதோறும் இரவு 7.20க்கு சிக்ஸ் மில்லியன் டாலர் மேன். (லீ மேஜர்ஸ் நாயகனைத் தோன்றி நடிக்கும் ஆங்கிலப் படம்)

வானொலி

மனக்குழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

6-11-77 சிறையைத் தேடி எழுத்து: தில்லநகர் பதவியன்.

13-11-77 ஆலமரத்தின் அருகினிலே எழுத்து: கே. எஸ். முத்துக் கிருஷ்ணன்.

20-11-77 மனிதவேட்டை எழுத்து: எஸ். வைரக்கண்ணு.

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

12-11-77 அதிர்ச்சியின் மறுபக்கம் எல். முத்து எழுதியது.

19-11-77 எங்கிருந்தாலும் வாழ்க ந. வரதராசன் எழுதியது.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

12-11-77 பிறகு கே. ஆர். காளிதாசன் எழுதிய காதலர்கள் ஜாக்கிரதை

19-11-77 எஸ். கிருஷ்ணம்மா எழுதிய மாமியார் விஜயம்.

சிறுகதை

(ஞாயிறுதோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

6-11-77 சிதைந்த வாழ்வு எழுத்து: பத்தாங் பெர்ஜுந்தை மு. முனுசாமி.

13-11-77 நண்பனுக்காக. எழுத்து: சுங்கை ஜாவி பூங்காவனம் பெருமாள்.

இஸ்லாமிய நாடகம்

(வியாழன்தோறும் இரவு 8.30க்கு ஒலியேறும்)

10-11-77 அல்லாவின் அ:ஜைத் -லாபு அப்துல் காதர் எழுதியது.

திரை மலர்

புதிய திரைப்படக்காட்சிகள், நேயர்கள் பங்கு பெறும் பரிசு அங்கமான "திரைப்புதிர்" ஆகிய சுவையான அம்சங்களைக் கொண்ட "திரைமலர்" நிகழ்ச்சி சனிக்கிழமைதோறும் மாலை 6-31க்கு ஒலியேறுகிறது. தயாரிப்பு எல். ராயன்.



தீபாவளிச் சிறப்பு நிகழ்ச்சிகள்

9-11-77 புதன்கிழமை இடம் பெறும் சில முக்கிய சிறப்பு நிகழ்ச்சிகள்:

(இரவு 9 மணிக்கு மேல் ஒலியேறவிருக்கும் நிகழ்ச்சிகள்)

திருமதி தினரட்சகியின் தயாரிப்பில் "பெண்களும் தீபாவளியும்" ஒலியேறுகிறது.

"நாடகமாலை" வி. பூபாலன் தயாரிப்பில் மலருகிறது.

கிருஷ்ணம்மா எழுதியுள்ள "முதல் நாள் ரகளைக் காட்சி" இடம் பெறுகிறது. இந்தச் சிரிப்புச் சித்திரத்தில் அன்பானந்தன். என். எஸ். கிருஷ்ணன், சுப்பிரமணியம் சக்ரவர்த்தி, வைரக் கண்ணு, சுசிலா, புஷ்பாதேவி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இரவு மணி 12 விருந்து 1மணி வரையில் "ஹலோ ரங்காயன் மேரா" எனும் வாழ்த்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் நிகழ்ச்சியை வி. ஆறுமுகம் படைக்கிறார். தொலைபேசி மூலமாக ரங்காயன் மேராவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தீபாவளி வாழ்த்துத் தெரிவித்துக் கொள்ளும் சிறப்பு நிகழ்ச்சியான இதில், நேயர்கள் யாவரும் பங்குகொள்ளலாம்.

10-11-77 தீபாவளியன்று இடம் பெறும் நிகழ்ச்சிகள்)

காலை 8.05 விருந்து - 8.30 வரை




"கண்ணதாசன் பேசுகிறார்" எனும் உரை - இசை நிகழ்ச்சி இடம் பெறுகிறது.

காலை 9 மணிக்கு "அருள் மொழி" இதில் ஹரிதாஸ் சுவாமிகள் தீபாவளிச் சிறப்பை விளக்கும் "உரையும் இசையும்" இடம் பெறுகிறது. தயாரிப்பு: வி. பூபாலன்.

நண்பகல் மணி 12 முதல் 12 30 வரை கண்ணன் பாடல்கள் 12.30க்கு "கதா காலட்சேபம்"

பிற்பகல் மணி 2 விருந்து 2.30 வரை "தீபாவளிச் சிறப்புக் கலப்படம்" 2.30 - 3.30 வரை நமது விருந்தினர்" (இதில் இசையமைப்பாளர் இளையராஜாவும், பாடகர் டி எம். சௌந்தரராஜனும் கலந்து கொண்டு சிறப்புச் செய்கிறார்கள்)

கே. பாலசந்தருடன் அரை மணி நேரம்.


ராமா பிலிம்ஸ்
தீபாவளி சிறப்பு வெளியீடு
DILULUSKAN
MALAYSIA
இன்று போல் என்றும் வாழ்க
சுப்பு புரொடக்ஷன்ஸாரின்
வண்ணத் திரை ஓவியம்
மக்கள் திலகம்
எம்.ஜி.ஆர்
Rama Film
RELEASE
தயாரிப்பு VD.L.சுப்பையா, VD.L.SP.லெக்ஷ்மணன் டைரக்ஷன்: K.சங்கர்

வடிகால்கள்

-சி. முத்துசாமி





செம்மண் சாலையில், தோளில் படுத்த கம்பின் விளிம்பில் சுருக்கிட்டுத் தொங்கிய வாளிகள் அந்தரத்தில் ஆட, வளையல்கள் சரிந்து குலுங்க, கிரீச்சிட சைக்கிளில் நடப்பவளைத் தொடர்பவன்.

நேற்று- குசினி- குத்துக் காலிட்டு அவள் வெளிவாயிலில் நிரப்ப எதிர் வெயில் பட்ட கருத்த முகத்தில் அவரைப்பந்தலின் திருஷ்டிக் கழிப்பாக, நீர்த்துளிகள். தேங்காய் நார், அலுமினியச் சட்டியில் அழுந்த, சரிந்து சரிந்து குலுங்கும் கண்ணாடி வளையல்கள். எதிர் விட்டு குசினி வாயிலில் அவன்

அவள் நினைக்கிறள்-

“படத்தில் அவருகூட இப்படித்தான ஸ்டைலா. நின்னு அவள பாத்து சிரிச்சாரு...”

வேப்ப மரத்தடியில், விரிந்த கட்டிலில், மல்லாக்கக் கிடந்தான் அவள் அப்பன். மரத்தில் சாய்த்து இருக்கும் ஊன்றுகம்பு. பக்கத்தில் விலாவை அணைந்து சுருண்டு கிடக்கும் பூனை.

முட்டை அளவுக் குழியில் குறுக்குச் சட்டம் அமைத்துத் தூக்கி எறிந்து கண்ட வெற்றியில் வரும் அவள் தம்பி தங்கைகள். குளி குளித்திருந்த பொன்னம்மாளை பார்த்துவர, நான்காவது லயத்திற்குச் . சாயங்காலமே போன அம்மா இன்னமும் காணோம். குழைந்ததில், ரசம் கலந்து சின்னவர்களுக்கு, அப்பனுக்குப் போட்டுப் பசிக்கவில்லை என்பதாக, சும்மா படுத்துக்கொண்ட- . மத்தியானம், அல்லூர்க் கரையில் அலுமினியச் சட்டியைத் தேய்க்கத் தேய்க்க மனச் சினிமா பார்த்தவள் கள்ளைக் குடித்த அப்பன் கட்டிலில் கிடந்து பிணத்தல். புற்று பெருகி, ஆஸ்பத்திரிக்காரன் அவசரமாக வெட்டிப் போட்டு, அக்கடையில் கம்பை அணைந்து பெண்டுலமாக அசைபவர் அவர். பகலெல்லாம் விலாவை அணைந்து புறுபுறுத்துக் கிடக்கும் பூனை இப்போது அவள் பாயில், கால் மாட்டில் உட்கார்ந்து. மண்ணெண்ணெய் விளக்கொளியில் பூச்சிகளைத் தேடியலையும் பல்லிகளை இமைக்காமல் அண்ணாந்து பார்த்திருந்தது.

மண்ணெண்ணெய் விளக்கு நடு உட்கார்த்தி, வட்டம் போட்டுப் பாடம் படிக்கும் சின்னவர்கள் போன மாதமே பள்ளிக்குப் போன சின்னவனுக்கு. பென்சிலைப் பிடித்து, எழுதிக் காட்டும் அவனுக்கு மூத்தது. வாசகப் புத்தகத்தை எடுத்துத் திறக்க கீழே விழும் குட்டி போட வைத்த மயில் இறகு; பிட்டாயில் இருந்த சிக்ஸ் மில்லியன் டாலர் மேன். நெற்பயிர்களுக்குள் முகம் காட்டும் புலி படம்போட்ட ஒரு பழைய ஸ்டாம்பு. பூனைக் கூச்சலாக முளைத்த பஜனைக் கோஷ்டியின் ஆரவாரம் கேட்க, எல்லாமாக எழுந்து வெளியே ஓடின. இன்று சாணி தெளித்து அவள் இட்ட கோலம் அப்பனுக்கும் பிடித்திருந்தது.

ஒருக்கணித்து படுத்துக் கிடந்தவளுக்கு. அவர்கள் அப்படி எழுந்து ஓடுவது வேடிக்கையாக இருந்தது. ஏனோ அப்போது அவள் "அதை" நினைத்துக் கொண்டாள். நேற்று பலகைத் தடுப்பைக் தாண்டி வந்து அதுகேட்டது.எப்போதோ, இப்படி அவள் அறிவுக்குப் பூரணமாக எட்டாத சொற்களில், அவன் ஏதாவது கொட்டும்போது, இவள் தவறாமல் அதில் லயித்துக் கேட்பாள். அதன் உணர்ச்சிகள், அவளுக்கும் கூட பொதுவானதாக எப்போதுமே தோன்றுவதே அதற்குக் காரணமாக இருந்தது. அவன், ஏதோ பத்திரிகையிலெல்லாம் கூட இப்படி எழுதுவதாக. அவள் யாரோ சொல்ல கேள்விப்பட்ட விஷயமே. மனம் பிடிபடாமல் ஓடும் அந்தக் கோலத்தை வளைத்துப் பிடிக்க ஓடுகிறது-

அண்ணாந்து பார்க்க பலகைத் தடுப்பு, நீலம் கலந்தடித்த சுண்ணாம்பு வெளிறலாக. எப்போதோ அடித்தது-கரிப்புகை அப்பியதாக, திட்டுத் திட்டாக விகாரப்பட்டு சிமிந்திச் சுவரில் மூட்டை நசுக்கிய இரத்தக் கறைகள்-பென்சில் கிறுக்கலாக-காலண்டரில் வெட்டி ஒட்டிய சினிமா ஸ்டார்கள். அவளுக்கு மிகவும் பிடித்த அந்த ஸ்டார் "சிகாகோ" என்ற எழுத்துக்கள் பொறித்த பைக்கைப் பிடித்து கம்பீரமாக நின்றார். போன மாதம் தோட்டத்துத் திடலில் கொட்டும் பனியில் உட்கார்ந்து பார்த்த அவர் படத்தின் காட்சிகளை இப்போது கூட அவளால் ஒன்றுவிடாமல் நினைத்துப் பார்க்க முடிந்தது.

சட்டம் போட்ட கண்ணாடிக்குள் முகங்கள்- சிவப்புப் பாஸ்போர்ட் சிக்கலில் வேலை போக, ஊருக்கு மூட்டை கட்டிய அந்த உறவு. டவுனுக்கு சினிமாவுக்குப் போனபோது பக்கத்துவிட்டு மீனாவுடன் ஜோடியாக எடுத்தது [பூக்கொட்டியொன்று பக்கத்தில். கழுத்திலும் காதிலும் வளையல்கார அம்மாவிடம் கிஸ்தியில் வாங்கிய பித்தளை இமிடேஷன் மினுமினுங்க] தீபாவளிக்குக் குடும்பமாக எடுத்தது. (சட்டத்து இணைப்பை பற்றிய பலகை இழந்துவிட, ஆணி அடிப்பதாக, அப்பன் நச் நச்சென்று கோடரியைத் திருப்பிக்கொண்டு அடிக்க,

மக்கிய சடம்புக் கயிற்றின் பிடியில் இருந்த அந்தப் படம் கீழே சதுரத்தின் அரையாக ஒரு கோடு. அது இன்னும் உண்டு.) அப்பனுக்குப் பக்கமாக அம்மா நெருக்கமாகத் தெரிந்தாள். அப்போதெல்லாம் அப்பனுக்குக் கால்கள் நன்றாயிருந்தன. அப்பனுக்குப் பின்னால் நின்று கொண்டிருப்பவன் அண்ணன். அவன் பக்கம், ஒருநாள் குசினி உத்திரத்தில் தூக்கு மாட்டிச் செத்துப் போன அக்காள்.

அவள் ஏன் அப்படிப் போனாளோ? பிணத்தைக் கிடத்தி வைத்து மாரடித்து அழுதாள் அம்மா. அப்பன் வழக்கம்போல் வேப்பமரத்தடிக் கட்டிலில். ஏதோ முறையீடு செய்வதுபோல், வானத்தைப் பார்த்து உட்கார்ந்திருந்தார். அண்ணன் காரியங்களைப் பார்த்தான். பத்தாவது நாள், வாசல் தூணில் சாய்ந்த வண்ணம் கைகளை மார்புடன் இணைத்துத் தலை குனிந்து நீண்ட நேரமாக இருந்த அண்ணன், அல்லூர்க் கரையில், வாயில் சுருட்டு நெருப்பும் கனிபக்கனிப உட்கார்ந்திருந்த அப்பனைப் பார்க்காமலேயே, எங்கோ பார்த்து, அவன் காதில் விழும்படி "இந்த மானங்கெட்ட குடும்பத்துல இருக்கறதவிட, எங்கியாவது போயி பிச்ச எடுத்துச் சாப்பிடலாம்" என்று தெருவில் இறங்கி, வேகமாக நடந்தவனை, கொஞ்சம் முன்பு சுருட்டுத் தலைப்பைச் சிமிந்தியில் தேய்த்து அணைத்து, புசுக்கெனத் துப்பிய எச்சில் அல்லூர்க்கரையில் தெரிய, செல்பவனைத் திருப்பிப் பார்த்து, கொஞ்ச நேரம் அப்படியே இருந்தார்.

(செம்மண் கைகளைச் சிலுவாரில் தேய்த்துக்கொண்டு, குத்துக்காலிட்டு உட்கார்ந்து குழிக்குக் குறி வைக்க, காதைப் பிடித்து முழங்கையால் குண்டை அடித்துத் தள்ள; கோப்பிக்குக் கூப்பிடும் அம்மாவுக்குச் சாக்குச் சொல்லி, தன் குண்டைக் கல்லில் உராய்த்து உராய்த்து...)

குசினி வாயிலில், சடம்பு நாரில் பொங்கலுக்குக் கோத்துக் கட்டிய மாவிலைகள் காய்ந்து சுருண்டு இப்போது காற்றுக்குச் சரசரத்துக் கேட்டன. யாரோ கொண்டு வந்து விட்டுப் போனவுடன், கதவைத் தள்ளி உள்ளே வந்தாள். அப்பன் தலைமாட்டிலிருந்த ஜன்னலைத் திறந்து காறித் துப்பினான் அந்த மொழி அம்மாவுக்கும் பரிச்சயம் என்பதால் அவள் முணுமுணுத்தாள். அப்பன் நன்றாயிருந்த காலத்தில், அம்மா இப்படி நேரங் கழித்து, கதவைத் தள்ளி உள்ளே வந்து ஞாபகம் இல்லை.


காலைக் கருக்கலில், இரவில் மழை என்பதாகத் தோட்டம் இன்னமும் தூக்கத்தில். வானத்தில் வெளிச்சம் தெரிந்தபோது, இலைகளில் இருந்த நீர்மணிகளும் பளிச்சிட்டன. ஆற்றில் புதுவெள்ளம் பெருகி வடிந்து கொண்டிருக்க, வாத்துக்கள் கரையில் இறங்கி வந்தன.

இவற்றிலிருந்தெல்லாம் தனியாகப் பிரித்துப் பார்க்கும்படியாகத் தான், அது முளைத்தது. வளர்ந்து ஆலமரமாக உச்சஸ்தாயியில இழைந்தபோது, சின்னவர்கள் பாயில் எழுந்து உட்கார்ந்து, அம்மாக்காரியை குழம்பிப் பார்க்க...

அல்லூரைக் கூட்டி வந்த அம்மாசிக் கிழவன் நின்று கவனிக்க- வாசலில் நேற்றுக் குனிந்து குனிந்து இட்ட மார்கழி மாசத்துக் கோலங்கள்; மிக மெலிந்து, உருவமிழந்து வடு தெரியும் பென்சில் கிறுக்கலாக. அல்லூர்க் கரையில் உட்கார்ந்து, இவ்வளவு நேரமும் அதையே பார்த்திருந்தவன் எதையோ நினைத்து (பக்கத்து விட்டிலிருக்கும், கழுத்தில் கயிறு இல்லாமல் ஒரு நாள் ஒருத்தனுடன் பரை வேட் காடியில் வந்திறங்கியவள்) ஊன்று கம்பை எடுத்துக்கொண்டு எழுந்து நின்றான்.

இனி, எங்கோ உருவாகப் போகும் அந்த அழகான கோலத்தை அவன் இப்போதே மனத்திரையில் வரைந்து பார்த்துக்கொண்டான்.

குழப்பமில்லாத...



கதையில் திருப்பம் இல்லாவிட்டாலும் தங்கள் குழந்தைகளை எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்று மனதைப் போட்டுக் குழப்பிக்கொள்ளாமல் தாய் மொழிப் பள்ளியில் சேர்ப்பதுதான் நல்லது என "அந்த முடிவு" சிறுகதையின் மூலம் எழுத்தாளர் முனியன் விளக்கியுள்ளார்.

பூச்சோங் — ஜி. குணசேகரன்

புதுமைக் கதை

வ. முனியனின் "அந்த முடிவு" கதை முற்றிலும் புதுமையாக இருந்தது. புதிய சமுதாயத்திற்கு இது போன்ற புதுமையான கதைகளே தேவை.

தைப்பிங் — இராசிதுரை பூபாலன்

அந்த முடிவு...?

தமிழ்ப் பள்ளிகளின் தரம், தோட்டப்புறத் தமிழ் மாணவ-மாணவியர்களின் கல்வி வளர்ச்சியின் நிலை, சில ஆசிரியர்கள்- பெற்றோர்களின் நிறைவற்ற பொறுப் புணர்ச்சி, மற்றும் நடைமுறையில் நம் சமுதாயத்தில் நிகழ்ந்து வரும் குறைபாடுகள் அனைத்தையும் ஒருங்கே தெளிவாக்கிய "அந்த முடிவு" சிறுகதை பாராட்டுக்குரியதாகும். ஆனால் ஒன்று, இரு சாராருக்கும் செவிசாய்க்கும் ஆசிரியர் இறுதியில் எடுத்த முடிவு எதுவாக இருக்கும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

குளுனி தோட்டம், சிலிம்ரிவர் — எஸ் டி. மனோ

பயன் தரும் சரிதங்கள்

வாழ்ந்து வழிகாட்டிச் சென்ற பெரியவர்களின்- ஊருக்கு உழைத்த உத்தமர்களின் வாழ்க்கைச் சரிதங்களையும் பிரசுரித்தால் பயன் பெருகும்.

மலாக்கா — ஆ. தங்கம்

வள்ளுவர் காட்டும் வழி

"வழி காட்டுகிறார் வள்ளுவர்" அனைவரும் படிக்க வேண்டிய சிறந்த படைப்பு.

வளரும் எழுத்தாளர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுங்கள்.

தைப்பிங் — பெ. அன்னக்கிளி

உண்மையான வருத்தம்

இ. மாரிமுத்து எழுதிய "பெல்டா" எனும் கட்டுரை நன்று. அரசாங்கம் அளிக்கும் வாய்ப்புக்களை நம்முள் சிலர் புறக்கணிப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது.

ஜொகூர் லாபீஸ் தோட்டம் — அ. பத்மாவதி

சுவையும் சிறப்பும்

வி. பூபாலன் எழுதிய "கணைகள்" கவிதை நூலின் ஆய்வுக் கட்டுரை படிக்கச் சுவையாக இருந்தது.

பி. காந்திமணியத்தின் "அனாதை" சிறுகதை சிறப்பாக அமைந்திருந்தது.

ஜெரம், சிலாங்கூர் — மு. இலட்சுமணன்

நெருப்புத் துண்டுகள்

எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. ஓடவில்லையென்றால்...நான் பறந்துகொண்டிருந்தேனே என்னவோ? மனம் கிறுகிறுத்தபடி இருந்தது. பல தடவை இருதயம், தன் வழக்கமான தாள வேகத்தைத் தாண்டித் தாண்டித் திரும்பியது. இரவு எட்டு மணி வரையில் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கின்ற வேலைகளையெல்லாம் அன்று மாலை மூன்று மணிக்கெல்லாம் முடித்துவிட வேண்டுமெனப் பறந்துகொண்டிருந்தேன்.

மேனகாவை அன்று பள்ளிக்கூடம் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டேன். மாடிப்படிகளில் தடதடவென்று இறங்கி வந்தாள் அவள். அது அவள் பழக்கம். ஆனால் என் மனம் அன்று மட்டும் மிகவும் துடிதுடித்துப் போய்விட்டது.

"ஏன்டி மேனு, மெதுவாய் இறங்கப்படாதா?" என்றேன். அவள் மெதுவாகச் சிரித்தபடி அதே வேகத்தில் மாடிப்படிகளில் ஏறிச் சென்றாள். குறும்புக்காரி! அது மட்டுமா, கெட்டிக்காரியும்கூட. கெட்டிக்காரியென்றால் படிப்பு, பாட்டு, ஆட்டம் எல்லாவற்றிலும் தான். எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருக்கின்ற அந்தக் கருநீல விழிகள் பரதத்தின் பாவனைக்கே படைக்கப்பட்டவை என்று அவரிடம் நான் சொல்லும் போதெல்லாம் "உனக்குந்தான், ஆனால் நீ அடியெடுத்து வைத்தாலே அதிர்கிறதே" என்பார்.

அன்று சில வேளைகளில் என்னை நினைக்க எனக்கே வெட்கமாக இருந்தது. சமநிலையில் நடந்து கொள்ளப் பல தடவைகள் முயன்று தோற்றுப் போய்க்கொண்டிருந்தேன். அன்று மேனகாவுக்கு எப்படிப்பட்ட உணவு தயாரிக்க வேண்டுமென ஏற்கனவே கேட்டு வைத்திருந்தேன். முதல்நாளே கழுவி வைத்திருந்த காய்கறிகளை எடுக்க ஐஸ்பெட்டியைத் திறந்த போது மஞ்சள் ஒளியும் இனிய ஆரஞ்சு மணமும் உள்ளிருந்து வந்தன.

அதே வேளை, மாடியில் "கலீர் கலீர்" எனச் சதங்கை ஒலிக்கத் தொடங்கியது. வீடு முழுவதும் பன்னீர் கொட்டுவது போன்ற ஒரு பிரமையில் நான் ஆழ்ந்து போனேன். சதங்கையொலி என்னும் கூட்டுக்குள் மெதுமெதுவாக நான் கட்டுண்டு போவதை உண்மையாகவே உணர்ந்தேன். நாடி நரம்பெல்லாம் பரவி உடலெல்லாம் புல்லரிக்கச் செய்த அந்த இன்பச் சிறையிலிருந்து நான் விடுதலையானபோது மேனகா என் முன்னால் நின்று கொண்டிருந்தாள். மீண்டும் அதே சிரிப்பு. நான் அவளைக் கட்டிக் கொண்டேன். என்னை மிஞ்சிய மகிழ்ச்சி கண்ணீராகி அவள் உச்சியில் விழுந்து கரைந்தது.

வரவேற்பறையை ஒழுங்குபடுத்தச் சென்றபோது தொலைக்காட்சிப் பெட்டியின் மேல்விரிப்பு, கலைந்துபோய்க் கிடப்பதைக் கண்டு அதனை முதலில் சரி செய்தேன். "எப்போது கலர் டி. வி. வரும் என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். மேனகா அங்கும் தோன்றி அப்படியே சிரித்தபோது "ஏன்டி மேனு, என்னைப் பார்த்தா பைத்தியம் போல் தோணுதா" என்றேன்.

"புரோக்ராம் எனக்குத் தானம்மா" என்று துணிச்சலாய்ச் சொல்லிவிட்டு ஓங்கிய என் கைகளுக்குத் தப்பி மாடிப்பக்கம் ஓடினாள்.

மாடிப்படிச் சுவரோரம் இருந்த சிலையினருகில் அவளும் சிலையாகவே நின்றாள். அழகிய வளைவுகளோடு பரதத்தின் பாவத்தில் நிற்கும் பெண்ணின் சிலை அது. பரதத்தில் நின்றாலே தெய்வஉரு தோன்றிவிடுகிறதே! அந்தப் பளிங்குச் சிலைமுன் நின்ற என் மேனகாவைப் பார்த்தபோது அவளோடு அந்தச்சிலை-அல்லது அந்தச் சிலையோடு அவள்-கலந்து போவது போன்ற உள்ளுணர்வு பொங்கியது.

"அந்தச் சிலைக்குச் சின்னதா ஒரு பூமாலை கட்டிப் போட்டேன்" என்று நான் கூறியபோது "உங்களுக்கும் சேர்த்தே கட்டறேனே" என்று பதில் கொடுத்தாள்.

எல்லா நாட்டு நடனத்தையும் பார்த்து மகிழும் நான், பரதத்தைப் பார்க்கும்போது பனிபோல் குளிர்ந்து போகிறேன். என் கனவெல்லாம் உயிரென்றால், இதோ என் மேனகா, கனவென்னும் உடலாக அசைகிறாள்.

நாடெங்கும் பரதம், ஊரெங்கும் சதங்கையொலி! "பேராசை" என்பார் அவர். "பார்ப்போமே" என்பேன் நான். "பரதமும் குடும்பமும் உன் உலகம், மக்களும் வாழ்வும் என் உலகம்" என்பார். அவர் பேசுவது எல்லாமே பூடகந்தான்.

இன்று மாலைப்பொழுது லேசில் வருவேனா என்று இடக்குப்பண்ணுவதுபோல் இருந்தது. அவர் வழக்கம் போல் நாலரைக்குத்தான் வந்தார்.

தேநீரை மேசைமேல் வைத்துவிட்டு "இன்றைக்காகிலும் அரை நாள் லீவு போட்டிருக்கக் கூடாதா" என்றேன்.

"என்ன தனு, இன்னைக்குத் தேநீர் சந்நியாசிக் கோலத்தில் நிற்குது" என்றார் அவர், நான் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவர் போல.

"இதோ பாருங்க, புரோக்ராம் சரியாக ஏழு மணிக்கு, சீக்கிரம் புறப்படுங்க" என்றேன்.


"ஏன், இன்னைக்குப் பலகாரம் ஏதும் செய்யலியா"

ஆறு மணிக்கெல்லாம் ஹாலுக்குப் போய்ட்டாத்தான் மேக்-அப்புக்கு நேரம் சரியா இருக்கும்" என்றேன்.

"தனு, தனு..."

அவர் குரல் வழக்கமானதாக இல்லை. நான் அவர் முன்னால் வந்தேன்.

அப்போது. இரும்புக்கதவு கிறீச்சிட்டது. திரும்பிப் பார்த்தேன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் வந்தவிதம் அப்படி இருந்தது. "என்னமோ, ஏதோ" என்று மனம் துடித்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவரை வரவேற்றேன். வாசலில் சப்பாத்தை அவர் கழற்றும்போது பளபளப்பான ஒரு சிறிய புத்தகத்தை அவர் கையில் கண்டேன்



ஆ. நாகப்பன்

"இந்தாங்க நிகழ்ச்சி மலர்" என்று அதை அவரிடம் கொடுத்துவிட்டு உட்கார்ந்தார் செயலாளர். என் முகத்தில் எதைக் கண்டாரோ...

"ஒண்ணுமில்லேங்க, நம்ம நிகழ்ச்சி நேரத்தில சின்ன மாற்றம். நம்ம தலைவர் அவசரமா வெளியூர் போயிருக்காங்க, எப்படியும் எட்டு மணிக்கெல்லாம் வந்திடுவாங்க, அதைச் சொல்லிவிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்" என்றார்.

அவர் புருவததை நெரித்தார். செயலாளர் அதைப் பார்க்கவில்லை, நல்லவேளை.

"அவங்க தலைமைதாங்க ஒத்துக்கிட்டதே பெரிய காரியம் போங்க! ஓய்வு ஒழிச்சலே இல்லாதவங்க. பேருக்குப் பின்னாலே எத்தனையோ "பட்டம்" ஆனா ரொம்ப எளிமையா இருப்பாங்க. நம்ம கலை கலாச்சாரத்தை உயிரா மதிப்பாங்க. மாளிகை மாதிரி வீடு. வீட்டில் எந்தப் பக்கம் நின்னாலும் வீணையோ, குழலோ ஒலிச்சிக்கிட்டே இருக்கிறதைக் கேட்கலாம். கர்நாடக சங்கீதத்திலே அவ்வளவு பற்று " என்று சொல்லிக்கொண்டு போனார் செயலாளர்.

தாமதமாக வந்தாலும் பரவாயில்லை, அவர் தலைமையில்தான் நிகழ்ச்சி நடக்க வேண்டும் என்று சொல்ல நினைத்தேன். அவர் ஒன்றும் சொல்லாமல் இருக்கும்போது நானென்ன முந்திரிக் கொட்டை போல் என்று பேசாமல் இருந்து விட்டேன்.

"சரியா எட்டுக்காகிலும் வந்திடுவாரில்லே?" என்றார் அவர்.

"ஓ. அதற்கு நானாச்சு" என்றார் செயலாளர்.

நான் அவரிடமிருந்த விழா மலரை வாங்கிப் பார்த்தேன் வாழ்த்துச் செய்திகள் என்று அரைப்பக்க அளவில் சிலருடைய புகைப்படங்கள் இருந்தன. அவற்றுக்குக் கீழே சில வரிகள். அவசரம் அவசியம் என்று மேனகாவின் போட்டோவை வாங்கிப் போனார்களே, அது எங்கே? தேடினேன். இரண்டு தடவை மலரைப் புரட்டிய பின் கண்டுபிடித்தேன். நிகழ்ச்சிகள். என்று குறிப்பிடப் பட்டிருந்த பக்கத்தில் ஒரு மூலையில் அவள் இருந்தாள்.

"மலர் பூராவும் விளம்பரமாகவே போட்டுட்டீங்களே" என்றார் அவர்.

"என்னங்க, நாலு கம்பெனி மூணு ரெஸ்டாரண்ட் விளம்பரந் தானே! மற்றதெல்லாம் வாழ்த்துங்கதானே" என்றார் செயலாளர்.

"என்னைக் கேட்டா, நிகழ்ச்சிகள்"னு போட்டிருக்கிற ஒரு பக்கம் தவிர மற்றதெல்லாம் விளம்பரம்"னுதான் சொல்வேன்" என்றார்.

செயலாளர் ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டுப் பின் வாய்விட்டுச் சிரித்தார். அவரும் சிரித்தார். நான் சிரிக்கவில்லை. ஏன் சிரிக்க வேண்டுமென எனக்குத் தெரியவில்லை.

சேகரை ஒரே முறையில் உறிஞ்சிவிட்டுச் செயலாளர் புறப்பட்டார். நான் தலைமை தாங்கப் போகின்றவரை நினைத்துக் கொண்டு மீண்டும் இருக்கையில்



வந்து அமர்ந்தேன். "நடனத்திற்குத் தலைமையாக, சங்கீதம் வருகிறதோ பொருத்தந்தான்!" என்று பூரித்திருந்த வேளையில் ரோஜாப்பூவைப் பற்றுவது போல என் கைகளைப் பற்றிக்கொண்டு அவர் சொன்னார்"

"தனா, நீ ரொம்பப் பேராசைப் படற, இவங்களெல்லாம்..."

என் காதுகள் மூடிக்கொண்டன, பின் "ஓ., கே., நேரமாகுதில்லையா" என்று சொல்லிக் கொண்டே சட்டைப் பொத்தான்களைக் கழற்றிக் கொண்டு அறையை நோக்கி நடந்தார். "ஓடுங்களேன்" என்று கத்த வேண்டும் போல இருந்தது எனக்கு.

மீண்டும் இரும்புக்கதவு கலகலத்தபோது அங்கு மல்லிகா வந்து கொண்டிருந்தாள். அவளை நான் வரவேற்பதற்குள் மாடியிலிருந்து மேனகா வந்து விட்டாள்.

"நிகழ்ச்சி எட்டு மணிக்காம்" என்றேன்.

மல்லிகா முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. "சரியான நேரத்தில் தொடங்கிவிட்டால்தானே ஆச்சரியம்" என்றாள். பல பொது நிகழ்ச்சிகளுக்குப் போகிறவள் அவள்.

மாடியில் மேனகாவுக்கு வேண்டிய உடை, நகை, பூச்சரம் எல்லாம் இருந்தன. அவற்றைச் சரி பார்க்க மேனகாவோடு மாடிக்குச் சென்றாள் மல்லிகா.

சரியாக ஏழு பத்துக்கு அரங்கில் நுழையும்போது வாசலில் இரு பக்கமும் நின்று கொண்டிருந்த வாழை மரங்களைத் தொட்டுக் கொண்டு விரிந்திருந்த துணியில் "கலைப்புரவலர்... அவர்களின் தலைமையில்". என்ற பெரிய எழுத்துக்களுக்குக் கீழே "செல்வி மேனகாவின் நாட்டிய அரங்கேற்றம்" என்ற வரி என் கண்ணில் பளிச்சிட்டபோது என் மனம் லேசாகச் சிலிர்த்துக் கொண்டது.

மண்டபம் நிறைய நாற்காலிகள் நடுவில் வகிடு எடுத்தது போல் நடப்பதற்குக் கொஞ்சம் இடம் விட்டிருந்தார்கள். அதில் நடந்து மேக்-அப் அறையை அடைவதற்குள் என்னவோ போல் ஆகி விட்டது. "இந்தப் பொண்ணுதான்" என்றனர் சிலர். பக்கத்தில் அவங்க தாயார் போலிருக்கு" என்றனர் சிலர். எனக்கு வரும் பேரெல்லாம் பரதத்திற்குத்தான் என்று எண்ணிக் கொண்டேன்.

கொஞ்சங் கொஞ்சமாக என் கண் முன்னாலேயே மேனகா ஒரு நடனப் பெண்ணாக மாறிக் கொண்டிருந்தாள். முதல் நடனத்திற்கு அவள் தயாரானபோது மணி ஏழு ஐம்பது.

மூன்ருவது தடவையாக அறைக் கதவைத் திறந்துகொண்டு "தலைவர் வருகிற நேரமாச்சு, நீங்க ரெடியா?" என்று செயலாளர் கேட்டபோது, ஏம்பா, இந்த ரூம்ல கொஞ்சங்கூட காற்றைக் காணுமே... ஒரு..." அவர் பேசி முடிப்பதற்குள் திடீரெனக் கூட்டத்தின் சலசலப்பு திசைமாறியது. நாற்காலிகள் பரபரத்தன. செயலாளர் புலிப்பாய்ச்சலாக வெளியேறினர். நான் திரையைக் கொஞ்சமாக விலக்கிக் கொண்டு மண்டபத்தைப் பார்த்தேன்.

தலைவர்-கலைப்புரவலர்-வந்துவிட்டார். நீண்டு வந்த கைகளையெல்லாம் பற்றிக் குலுக்கிவிட்டு கை நீட்டாதவர்களைப் பார்த்துக் கும்பிட்டுவிட்டு அவர் முன் வரிசையில் வந்து அமர்ந்தார்.

செயலாளர் நிகழ்ச்சி மலர் ஒன்றைப் பணிவோடு அவரிடம் நீட்டினர். பெற்றுக்கொண்ட அவர் உடனே அதை விசிறியாகப் பாவித்துக்கொண்டார். பக்கத்தில் மின் விசிறி விர்விர்ரெனச் சுழன்றுகொண்டுதானிருந்தது.

செயலாளர் வரவேற்புக் கூறினர். கலைப்புரவலரின் அருமை பெருமைகளை அழகாக விவரித்தும் பேசினர். மேனகாவின் நடன அரங்கேற்ற நிகழ்ச்சிக்குத் தகுதியான தலைவர்தான் என்று நினைத்துக்கொண்டேன்.

பூரண அலங்காரத்துடன், தன் கால்களில் வணங்கி எழுந்த மேனகாவை அணைத்துக்கொண்டு "நாடெங்கும் சதங்கை கொஞ்ச, பாரெங்கும் பரதம் வாழ புகழ் பெறுவாய் அம்மா" என்று அவளின் நடன ஆசிரியையான மல்லிகா பாட்டாக வாழ்த்தியபோது, அவள் கண்களில் கண்ணீரும் பற்களில் மல்லிகையும் ஒருசேர மலர்ந்தன. சிறிது நேரத்தில் திரை அகன்று பாட்டும் பரதமும் அரங்கை நிறைக்கத் தொடங்கியபோது நான் பஞ்சாகிப் பறப்பதுபோல் உணர்ந்தேன்.

கலைப்புரவலர் மேடையேறும்போது நான் விழித்துக்கொண்டேன்; என் காதுகள் திறந்துகொண்டன.

"இன்னைக்கு நாட்டியமாடிய குமாரி தேவிகா... நோ நோ..., திருமதி...அடடே, பேர் வரமாட்டேங்குது. நடனம் நல்லாத்தான் இருந்தது..., ஆனா இடம். காலத்துக்கு ஏற்றுப்போல அப்பப்ப சிலதுகளை மாத்திக்கிறது அவசியம் ஒண்ணோட ஒண்ணு சேர்ந்து புதுசா ஒண்ணு தோன்றணும், அப்பத்தானே நாலு ஜனமும் ரசிக்கும்...

நான் திடுக்கிட்டேன். எதை மாற்றிக்கொள்ள வேண்டும்? எது தோன்ற வேண்டும்?" தனித்தனியாக எனக்குச் சரியாய்ப் புரியாவிட்டாலும் ஒட்டுமொத்தமாக ஒன்று எனக்குப் புரிந்தது! அவர் வாய் கொட்டிய நெருப்புத்துண்டுகள் என் நெஞ்சில் விழுந்து அது பற்றிக் கொண்டபோது மீண்டும் எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

சிந்தனை மேடை

'நதிர்'

'நாடக இசைத்திலகம்" என விளங்கும் உடையப்பாவின் நாடகங்கள் தற்போது மலேசியாவில் நடைபெற்று வருகின்றன. நாடகத்தின் பழைய மரபு கெடாமலும் தற்காலத்திற்கு ஏற்ப சற்று நவீனமாகவும் நாடகங்கள் அமைந்துள்ளன.

சிறப்பான நடிப்பும், இனிமையான பாடல்களும் நம்மை வியக்க வைக்கின்றன; நம்மை சில வேளைகளில் உணர்ச்சிவயப்படுத்தவும் செய்கின்றன.

சிறப்பாகக் கூறப்போனல் "அரிச்சந்திரா" நாடகம் அனைவரும் பார்க்க வேண்டிய கலைப்படைப்பாகும். சத்திய நாயகனை உடையப்பாவும், அவரின் அமைச்சர் சத்திய கீர்த்தியாக தங்கப்பாவும், நாயகி சந்திரமதியாக ஜெயசரளாவும் நடிக்கின்றனர்.

இவர்கள் போட்டி போட்டிக்கொண்டு நடிக்கின்றதைப் பார்த்து முடிக்கும்போது கலை அற்புதம் ஒன்றைப் . பார்த்துக் களித்தது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகின்றது.

நாடகத்தின் பழைய பந்தா கெடாமலும் புதிய பாணியிலும் நாடக மரபு குன்றாமலும் குறையாமலும் நாடகங்கள் விளங்குகின்றன. இந்த நாடகங்களைப் பார்க்கும்போது நாம் அந்தக் காலத்தில் நாடகங்களைப் பார்க்கும்போது பெற்ற உணர்வுகளை மீண்டும் பெற முடிகிறது.

அவரின் மற்ற நாடகங்களில் காட்சி அமைப்புக் குறைவாகவும் சில காட்சிகள் இழுபறியாகவும், சில நகைச்சுவைக் காட்சிகள் மிகையாகவும் சில வேளைகளில் நாடகத்தின் கதைப் போக்குத் தடைப்படும் வகையில் இருபொருள்பட உரையாடல்கள் அமைந்திருந்தாலும் "அரிச்சந்திரா" நாடகத்தைப் பொறுத்த வரையில் கலையின் முழு இன்பத்தையும் நாம் அனுபவிக்கின்ேரும். நம்மை பல இடங்களில் அழ வைத்துவிடும் அற்புத நடிப்பும், பாட்டும், சுடுகாட்டுக் காட்சியும் "உடையப்பா கலைத்திறன் உடையவரப்பா, கலைக்கு உயிர் கொடுத்து வருபவரப்பா என்று ஒப்புக்கொள்ளச் செய்கிறது.

தங்கப்பாவின் பாடல்களைக் கேட்கும் போது அவரின் குரல் தங்கமப்பா என்று போற்றத் தோன்றுகிறது. ஆனாலும் சந்திரமதி மகன் லோகிதாசன் இறந்தவுடன் அவனைப் பார்க்கப்போக தமது ஆண்டையிடம் அனுமதி பெறப்போகின்ற இடத்தில் நடைபெறும் நகைச்சுவைக் கூத்தடிப்பு சிறிது குறைந்தால் சந்திரமதியின் துயரத்தின் தொடர்பு நிலைக்க முடியும். இதைத்தவிர மற்றவை சிறக்கின்றன.

கலை முதலா, பணம் முதலா என்று பார்க்கிறவர்களுக்குக் கலையும் வராது; கலையின் பயனும் புரியாது.

கலை இல்லாத இடத்தில் கடவுளும் இருக்கமாட்டான் என்பர். எனவே கலையை அனைவரும் பார்க்கும்படி செய்வது ஏற்பாட்டாளர் கடன். அதனால் கட்டணங்களைக் குறைத்து மக்களுக்கு நாடகம் பற்றிய செய்திகள் சென்றடையவும் வழிசெய்யப்பட்டால் நாடக இசைத் திலகம் உடையப்பாவின் நாடகங்களின் உயர்வும் பயனும் மக்களுக்கு மேலும் தெரிய வாய்ப்புண்டு.

எவரையும்...

ஒரு யூதத் தந்தை தனது சிறு மகனை ஒரு மரத்தில் ஏற்றிவிட்டுக் குதிக்குமாறு பணித்தார்.

சிறுவன் தனது கால் கை உடைந்துவிடுமெனக் கூறினன். தந்தையோ "பயம் வேண்டாம், நான் கீழே நின்று ஏந்துவேன்" எனக் கூறினர்.

மரத்திலிருந்து குதிக்கும்போது அவனைக் கைகளால் ஏந்தாது விலகி நின்ருர் தந்தை. பையன் விழுந்து மூக்கும், முழங்காலும் உடைபட்டு இரத்தப் பெருக்கெடுக்க அழுதான்.

தந்தை அவனைப் பார்த்து "உலகத்தில் ஒருவரையும் நம்பக் கூடாது" என்னும் தத்துவத்தைக் கற்றுக்கொடுப்பதற்காகவே இவ்வாறு செய்தேன். நான் பலரை நம்பி ஏமாந்தவன்" எனக் கூறினர்.

—சி. க. அம்பலவாணன், பத்துகேவ்ஸ்

(ஈழத்தின் "சிரித்திரன்" இதழிலிருந்து)

விலை ஏற்றமா?



மக்கள் தொகைப் பெருக்கமும், வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருவதும், உற்பத்திக் குறைவும் விலையேற்றத்திற்கான காரணங்களுள் முக்கியமானவையாக இருக்கின்றன.

விலைவாசியை எப்படித்தான் கட்டுப்படுத்தினாலும் அவை ஏறிய வண்ணமே இருக்கின்றன

இந்த விலைவாசிகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் அவ்வப்போது சட்டத்தை இயற்றுகின்றது. அரசியல் கட்சிகள்- தொழிற்சங்கங்கள்- சமூக அமைப்புக்கள் -பயனீட்டாளர் சங்கங்கள் குரல் எழுப்புகின்றன.

ஆனால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடிகிறதா? முடியவில்லையே எனத்தான் நினைக்க வேண்டியிருக்கின்றது.

ஒன்று நிச்சயம். விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்படும் மக்கள், தாங்களாகவே ஒன்று கூடிப் பரிகாரங்கள் ஏதும் காண முடியுமா 'எனப் பார்த்தால், முடியும் என்றே தோன்றுகின்றது.

விலைவாசி ஏற்றத்தை நம்மால் குறைக்க முடியாது. ஆனால் சில "பழக்க வழக்கங்களை" மாற்றிக் கொண்டால் அனாவசியமான செலவுகளை நம்மால் தவிர்க்க முடியும்.

விலைவாசி ஏற்றக் காலத்திலும் சரி, மாமூலான காலத்திலும் சரி, பொருட்கள் வாங்குவதில் நாம்பங்கு கொள்ளும்போது நம்மிடையே காணப்படும் பலவீனங்களை நாம் ஆராய்ந்து பதில் காண முற்பட வேண்டும்.

இப்படி சிலவழி முறைகளைக் கையாளுவதனால் இந்த விலைவாசிகளின் உயர்விலிருந்து ஓரளவுநம்மை நாம் தற்காத்துக்கொள்ள முடியும்.

1. எங்கு சென்று பொருட்கள் வாங்கினாலும் முன்கூட்டியே பட்டியலிட்டுக் கொண்டு செல்ல மறவாதீர்கள்.

2. ரொக்கமாகப் பொருட்களை வாங்க முயற்சி செய்யுங்கள். இதன் வழி பல கடைகளில் விலைகளை விசாரித்துக் குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கும் கடைகளில் வாங்கலாம்.

3. கடைகளில் கடன் பாக்கி உள்ளவர்கள் கடைக்காரர்களிடம் விலைகளைக் குறைக்க முடியாதவாறு கட்டுப்படுத்தப்படுகிறார்கள். இதனால் தான் பத்து, இருபது ஆண்டுகள் கூட ஒரே கடையில் பொருட்கள் வாங்கி வருகின்றனர். மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கடன் பாக்கிக்குத் திருப்புப் பணமாகக் கொடுத்துவிட்டு, முடிந்த அளவு ரொக்கமாக எடுக்க முயற்சி செய்ய வேண்டும். இதன் வழி சுதந்தரமாக நாமும் விலைகளை ஆராய்ந்து, பொருட்களை வாங்க முடியும்.

4. முக்கியமான பொருட்களைக் கூட்டாக வாங்க முயற்சி செய்யவேண்டும். உதாரணமாக உருளைக்கிழங்கு, வெங்காயம், அரிசி, பருப்பு, சீனி, பால்டின் போன்ற பொருட்களைக் கூட்டாக வாங்கித் தனித்தனியாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஆரம்பத்தில் கஷ்டமாக இருக்கும். பழக்கத்திற்கு வந்து விட்டால் இத்திட்டம் சுலபமாக இருப்பதுடன் சிறுகச் சிறுகப் பயன் கொடுப்பதையும் காணலாம்.

5. பட்டணத்துக்குச் சென்று பொருட்கள் எடுப்பதற்கு முடிந்த அளவு ஒன்றாகவே செல்லவேண்டும். போக்குவரத்திற்கு லாரி போன்ற வாகனங்களைப் பெறுவதற்குத் தோட்ட நிர்வாகத்தின் உதவியை நாடலாம். பஸ், கார் போன்றவைகளில் தனித்தனியே பொருட்களை எடுத்து வருவதைப் பார்க்கிலும் ஒரே நேரத்தில் கொண்டு வர முயற்சி செய்தால்தோட்ட நிர்வாகம் லோரி போன்றவற்றை வழங்கி உதவுவதற்குச் சிரமம் இருககாது.

6. காய்கறிகள் போன்றவற்றைச் சொந்தமாகவே உற்பத்தி செய்யவேண்டும். நிலம் உள்ளவர்கள் நிலத்தைப் பயன்படுத்தவேண்டும். இல்லாதவர்கள். 1/16 ஏக்கர் நிலம் பெறத் தகுதியுள்ளவர்கள். எனவே தோட்ட நிர்வாகத்தை அணுகிக் கேட்டுப் பெறவேண்டும்.

7. தோட்டத்தில் இயங்கும் அமைப்புக்கள் மேற்காணும் திட்டங்களைச் செயல்படுத்தவும், மக்கள் பங்கு கொள்ளவும் உதவவேண்டும். பொருட்கள் வாங்கும் பாரங்களைத் தயாரித்து, விநியோகித்துப்பொருட்கள் வாங்கி வந்தவுடன் பிரித்து வழங்கலாம். மேற்காணும் வழிகளைக் கலந்துரையாடல், சிறு கூட்டங்கள், சந்திப்பு போன்றவற்றை நடத்தி மேற்கொள்ளலாம்.

பிரச்சனைகள் நம்முடையவை; நாமே தீர்க்க முயற்சி செய்வோம்.

(தோட்டப்புற இளைஞர்கள், 1975 ஆம் ஆண்டு மேற்கொண்ட "தோட்டப்புற இந்தியர்களும், வாழ்க்கை நிலையும், அவர்களின் எதிர்காலமும்" என்ற தலைப்பில் தயாரித்த சமூக ஆய்வறிக்கையின் ஒரு பகுதி)

பா. வ. ஞானகிராமன்
பத்தாங் பெர்சுந்தை

எல்லுப் போட்டு...

பாலை மண்டோரிடம் ஒப்படைத்துவிட்டு வேகமாகக்காவேரி, காண்டாவையும் வாளியையும் தோளில் சுமந்து, வேர்வையைத் துடைத்துக்கொண்டு இல்லத்தை நோக்கி வந்தாள். வீட்டின் முன்னே சிரம்பானிலிருந்து வந்த தனது மகனின் காரைக் காணாமல் மனத்தில் ஒரு தளர்ச்சி ஏற்பட்டது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை எப்போதாவது தோட்டத்திற்கு வரும் மகன், திடீரென்று புறப்பட்டு விட்டானே என்ற பேதலிப்பு காவேரிக்கு!

கணவனை நோக்கி "என்னாங்க! தம்பி போயிட்டுதா?" எனக் கேட்டுக்கொண்டே வீட்டினுள் நுழைந்தாள்.

கணவர் ஏகாம்பரம் "சின்னவன் வேலுக்கு "எல்லு"ப் போட்டு காடி பழகிக் கொடுக்க காடியை எடுத்துக் கிட்டு தம்பி போயிருக்கான்" என்று நிதானமாகச் சொன்னார்.

"அதானே பார்த்தேன்! தம்பி சொல்லிக்காமல் போயிடுச்சுனு நினைச்சேன்" என்ற காவேரி மீண்டும் "என்னங்க, காடிக்கு எண்ணெய் போட்டுத்தானே ஓட்டுவாங்க... நீங்க என்னமோ "எள்ளுனு" சொல்றீங்களே" என்றாள்.

ஏகாம்பரத்துக்குச் சிரிப்பு! "ஆமாம் புள்ளே! எள்ளிலிருந்து தானே எண்ணெய் எடுக்குறாங்க; எள்ளு போட்டாத்தான் என்ன, எண்ணெய் போட்டாத்தான் என்ன" என்று உரத்த குரலில் சத்தமாய்ச் சிரித்தார்.

காவேரி, "ஆமா எள்ளிலிருந்து தான் எண்ணெய் எடுக்குறாங்க! இதுக்கு ஏன் சிரிக்கிறீங்க" என்றாள்.

"அட! இது புண்ணாக்கு எடுக்கிற எள்ளு இல்ல; இது "எல்" என்றார் ஏகாம்பரம், மீண்டும் சிரித்தபடி.

எஸ். டி. மனோகரன்,
கோலாலம்பூர்



சேலையோ சேலை!

எல்லாவிதமான விழாக் காலங்களிலும் மங்கையர்களின் எழில்மயமான தோற்றத்திற்கு அழகிற்கு அழகு சேர்ப்பதில் பெரிதும் துணைபுரிவது சேலைகள் தாம் என்றால் மிகையாகாது.

இன்றைய இளம் தலைமுறையைச் சேர்ந்த பெண்களுக்கென மெக்ஸி, மீடி, பிலிம்பிளே ஜப்பா, பெல்பாட்ஸ், மினிஸ்கேர்ட் என்று பல ரகங்களில் நவீன உடைகள் நடைமுறையில் இருந்தாலும் அதனைச் சிலர் அணிந்தாலும், சேலைகளில் காணும் கவர்ச்சிக்கும், அழகுக்கும் அவை ஈடாகுமா? அன்றும் சரி, இன்றும் சரி சேலைகளில் காணும் அழகும், எடுப்பும் தனிரகம்தான் என்பதில் ஐயமில்லை!

தீபாவளிச் சேலைகளைத் தேர்ந்தெடுப்பதிலும், வாங்குவதிலும் பெண்களுக்கு ஏற்படும் ஆர்வத்துடிப்பும், தவிப்பும் சொல்லில் அடங்கா. அதை எடுக்கலாமா, இதை எடுக்கலாமா என்று ஜவுளிக் கடைகளுக்குப் படை எடுத்துச் செல்லும் பாவையர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளைப் புன்னகை தவழ தீர்த்துவைப்பதில் புடவைக் கடைகளில் பணியாற்றும் பெண்மணிகள் சமர்த்தானவர்கள் அல்லவா? அண்மையில் அவர்களில் சிலரைச் சந்தித்தேன்.

அடேயப்பா...! எண்ணற்ற சேலை ரகங்களைப் போலவே சேலை விற்பனையில் ஈடுபட்டுள்ள பெண்மணிகளின் கருத்துக்களும் பலவிதமாகவும் ஒவ்வொன்றும் ஒரு விதமாகவும் இருந்தன......

தலைநகரில் வி.கே. கல்யாண சுந்தரம் அண் சன்ஸ் நிறுவனத்தில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கும்



மேல்ாகப் பணிபுரிந்துவரும் குமாரி சி. வசந்தா தேவியைச் சந்தித்ததின் பயனாக அவர் உதிர்த்த கருத்து மலர்கள் இவை:

"காலம் மாறுது. கருத்து மாறுது. அதனோடே துணிமணிகளும் மாறுகின்றன. ஆனாலும் சேலைகளுக்கு உள்ள "மவுசு" பெருகுகிறதே தவிர குறைவதாகத் தெரியவில்லை! நம் பெண்கள் மட்டுமல்லாது ஆங்கில, சீனப் பெண்கள்கூட விரும்பி வாங்குகிறார்கள். சில சமயங்களில் சீனப்பெண்கள் சேலையை அணியத் தெரியாவிட்டாலும், அதனை ஆசையோடு வாங்கி எங்களையே கட்டி விடச் சொல்லி அணிந்து செல்கிறார்கள்.

காலை நேரங்களில் உல்லி ஜார்ஜட்டும், மாலையில் அமெரிக்கன் ஷிப்பனும் அணிந்துகொள்ள ஏற்றதாக இருக்கும். இவ்வாண்டு தீபாவளிக்குப் "பாலாபிஷேகம்", "முருகன் அடிமை" போன்ற புதுரக சேலைகளின் பக்கம் பெண்கள் பார்வை விழுந்திருக்கிறது என்கிறார் வசந்தா.

"மினி" சாரி என்று ஒருவகை நடமாடுகிறதே—அதை நீங்கள் வரவேற்கிறீர்களா?"

வியப்போடு பார்த்தார் வசந்தா. அதைத் தொடர்ந்து பதிலும் வந்தது. "சேலை ஒரு புனிதமான ஆடை. அதன் மதிப்பையும் தரத்தையும் குறைக்கும் வண்ணம் அமைந்திருக்கும் மினி சாரி நம் சமுதாயப்பண்பாட்டையே குழி தோண்டிப் புதைக்கும் வண்ணம் இருக்குதுங்க, அதனை நான் வெறுக்கிறேன்" என்று ஒரு போடு போட்டார் அவர்.

எஸ். பி. எஸ். சாரீஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதில் சேலைப் பகுதியில் வேலை



பார்த்துவரும் திருமதி ஐரின் ராஜனை அடுத்துச் சந்தித்தேன். "மினி சாரி" பற்றிய கேள்வியோடு பேட்டியை இவரிடம் ஆரம்பித்தேன். அதற்கு ஐரின் இப்படிச் சொன்னார்.

"நான் அந்த 'மினி'யை விரும்பவில்லைங்க. அந்த 'பேஷன்' நம்ம கலாச்சாரத்திற்கு ஒத்து வராதுங்க. அதோட அந்த 'மினிசாரி' அழகுக்குப் பதிலாக விகாரத்தையே கொடுப்பதாக நான் கருதுகிறேன்."

புதுரக சேலைகள் குறித்து வினவியதற்கு, "எங்கள் கடையிலும் புதுரகங்களில் சேலைகள் நிறைய வந்திருக்கின்றன. இவ்வாண்டு தீபாவளிக்கு பெங்களூர் பட்டு, காஞ்சிபுரம் முதலிய சேலைகள் நடுத்தரமான விலையில் உள்ளதால் பெரும்பாலான பெண்கள்

அவற்றையே பெரிதும் விரும்பி வாங்கிச் சென்றுள்ளார்கள்" என்று கருத்துரைத்த இவரிடம் "நீங்கள் சினிமா, டிராமா என்று போகும் போது எந்த ரக சேலையைத் தேர்ந்தெடுத்து அணிவீர்கள்" என்று கேட்டதற்கு "பெண்களுக்கு இரவு நேரங்களில் அணிந்து செல்வதற்கு சீக்குவின்ஸ் அல்லது பிரிண்டட் காஷ்மீர் சாரி மிகவும் உகந்ததாக இருக்கும் என்பதே என்கருத்து" என்று சிக்கனமாகவே கருத்துரைத்தார் ஐரின்.

காலமறிந்து சேவையாற்றும் "சண்முகாஸ்" ஜவுளிக் கடைக்குச்



சென்று அங்கு சுமார் 6 மாதங்களாகப் பணிபுரிந்துவரும் குமாரி ஏ. ஆர். வசந்தாவைச் சந்தித்தேன்.

எங்கள் கடையில் எல்லாவிதமான பட்டுச் சேலைகளும், உல்லி ஜார்ஜட், நைலக்ஸ் சேலைகளும் இருப்பதோடு புதிதாக வந்துள்ள ஜரிகாட்டன் பார்டர் சேலைரகத்திற்கு மங்கையர்களிடம் ஸ்பெஷல் வரவேற்புக் கிடைத்து எல்லாம் விற்றுத் தீர்ந்துவிட்டன" என்று கூறிய வசந்தா, இந்தியாவில் தயாரான "பாம்பே டையிங்", "கேலிசன் வாயில்" போன்ற சேலைகளின்மீதும் இவ்வாண்டு பெண்களின் பார்வை அதிகமாகவே விழுந்துவிட்டது" என்றார். பலப்பல வர்ணங்களில் சேலைகளைப் புன்னகை தவழ விற்பனை செய்யும் இவருக்கு மிகவும் பிடித்த வர்ணம் எது?

"பச்சை" என்று பதில் வந்தது!

மற்றொரு குளுகுளு ஜவுளிக் கடையினுள் சென்றேன். அதுதான் ஷரீகாட் சாந்தி. அங்கு சுமார்



நாலரை ஆண்டுகளாக சேலைப் பகுதியில் பணிபுரிந்துவரும் குமாரி பி. லெட்சுமியைச் சந்தித்து இவ்வாண்டு தீபாவளிக்குச் சாந்தியில் என்ன ஸ்பெஷல் என்று வினவியதற்கு "காஞ்சிபுரத்திலிருந்து வந்துள்ள பட்டும் பருத்தியும் கலந்த கல்பனா, தேன்துளி, மேனகா, ரூப்கலா, இதயவீணை போன்ற நூல் புடவைகளும், அன்னக்கிளி பார்டர் சாரியும் எங்கள் கடையில் பெண்களின் வரவேற்பைப் பெற்றுச் சூடாக விற்பனையாகின்றன" என்று கூறினார் லெட்சுமி.

"மலாய்க்காரப்பெண்கள் சேலையின் மீது மோகம் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன் உண்மையா?" என்றும் வினவினேன். என்னதான் மாடர்னான ஆடைகள் வந்தாலும், சேலை மோகம் பெண்களிடம் வளர்ந்து கொண்டுதான் போகிறதே தவிர குறைந்தபாடில்லை. மலாய்க்காரப் பெண்கள் ஷிப்போன், பாம்பே டையிங் போன்ற சேலைகளை வாங்கிக்கொண்டு போய் முழு மெக்ஸி தைத்து அணிந்து கொள்வதைப் பெரிதும் விரும்புகிறார்கள் என்பது உண்மையே!" என்றார் லெட்சுமி.

"மாநிறமாக உள்ள பெண்களுக்கு எந்தவிதமான வண்ணங்கள் எடுப்பாக இருக்கும்?" என்று வினவியதற்கு "டோமோட்டோ ரெட், நீலம், கும்கும் கலர், மெரூன், மஸ்டாட் போன்ற கலர்கள் மாநிறப் பெண்களுக்கு மேச்சாக இருக்கும்" என்றார் லெட்சுமி.

'இன்றைய இளம் தலைமுறையைச் சேர்ந்த பெண்கள் முன்பு மாதிரி பளபளப்பான சேலைகளை விரும்புவதில்லை. காஷ்மீர் சில்க், பிரிண்டட் ஜார்ஜட் போன்ற சிம்பலான அமைப்பிலேயே சேலைகளைத் தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ள விரும்புகிறார்கள் என்று கருத்துக் கூறினார்

சாரி சென்டர் நிறுவனத்தின் சேலைப்பகுதியில் பணியாற்றி வரும் குமாரி. எல். கமலா தேவி



. "எங்கள் கடையிலும் தீபாவளிக்கென எல்லா ரகங்களிலும் புதுவிதமான டிசைன் போட்ட சேலைகள் வந்துள்ளன.

இவ்வாண்டு பெண்களின் சேலை மோகம், அச்சிட்ட காஷ்மீர் சில்க், சாட்டின் சில்க், சரிகை வேலைப்பாடுள்ள பனாரஸ் புடவைகள் மீது மிகுந்திருப்பதாகவே எனக்குப் படுகிறது" என்று கூறிய கமலா, "மலேசியா போன்ற வெப்பமான நாடுகளுக்குக் 'கோயம்புத்தூர், மதுரை கைத்தறி நூல் சேலைகள் மிகவும் உகந்தவை என்றும் கூறினார். மாநிலப் பெண்களுக்கு ஆரஞ்-பிங்க், லைட்புளு போன்ற கலர்கள் மேச்சாக இருக்கும் என்று கருத்துரைத்தார் கமலா

பேட்டி: ராஸ்மன்


நாடகப் பெரியார்

தற்போது தமது குழுவோடு மலேசியாவில் நாடகங்களை நடித்துவரும் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு, அண்மையில், தலைநகர் ராஜா உணவகத்தில், கண்ணகி கைத்தொழில் நிலையத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. பா. செல்விமணாளன் விருந்து வழங்கினார்.



சமூகக்கலைமணி சா. ஆ. அன்பானந்தன் அவர்கள் தலைமைதாங்கிய இவ்விழாவில் அநேக எழுத்தாளர்களும், இயக்கத் தலைவர்களும் கலந்துகொண்டனர். விருந்தில் "நாடகப்பெரியார்" என்ற பட்டமும் எம். ஆர். ராதாவுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

படத்தில் கவிச்சுடர் காரைக்கிழார் நாடகப் பெரியார் எம். ஆர் ராதாவுக்கு மாலையணிவிக்கிறார். அமர்ந்திருப்பவர் சா. ஆ. அன்பானந்தன் வலக்கோடியில் விழா ஏற்பாட்டாளர் திரு. பா. செல்விமணாளன்



தமிழறிவுப் போட்டி 9

இறுதிநாள் 10-12-77

பெயர். ____________________

அடையாள அட்டை எண். ____________________

முகவரி ____________________

____

கையொப்பம்.

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.

2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.

8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.

9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின முடிவே இறுதியானது.

10. இறுதிநாள் 10-12-1977.

11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"

131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
P.O. Box 2066
Kuala Lumpur

இடமிருந்து வலம்:

1. கடைசிக் காலத்தில் பயன் தரும் பணம்.
5. திருமணத்தன்று மணமக்கள் அணிந்து கொள்வது.
7. பறவை.
8. கண்ணனிடம் உள்ளது.
9. இது உள்ளவர்கள் எளிதில் முன்னேற முடியாது.
10. இவனை வெல்ல மனிதனால் முடியாது.
11. இதன் வலிமையே பெரிதென்பார்கள் சிலர்.

மேலிருந்து கீழ்:

1. இதற்கும் செலவாளிகளுக்கும் அதிக தூரம்.
2. இதைப் பயன்படுத்தும் பெண்கள் குறைந்து வருகின்றார்கள்.
4. வானத்தில் தோன்றுவது.
6. இதைக் கேட்டால் பாம்பு மயங்கும்.
9. மனிதர்களின் வேலையைப் பெருமளவுக் குறைக்க உதவும் சக்தி.